

தமிழ் திரைப்பட வரலாற்றில் விட்டுவிட முடியாத பெயர் - இயக்குநர் மகேந்திரன். திரைப்படங்கள் வசன ஊடகமாக இருந்த நிலையை மாற்றி விஷுவல் மீடியம் என்பதை புரிய வைத்து திரைப்படங்களின் போக்குக்கே புதிய பாதை அமைத்துத் தந்தவர் மகேந்திரன் என்பதை தமிழ் திரையுலகம் நன்கு அறியும். திரைப்பட இயக்குநராக அறியப்பட்ட அளவுக்கு ஒரு பத்திரிகையாளர், சிறுகதை, நாவலாசிரியர் என பன்முகங்கொண்ட மகேந்திரனை இன்றைய தலைமுறை வாசகர்கள் அறிந்திருக்க மாட்டார்கள்! ஆனால் அவர் புதிய பார்வையில் மனிதர்களை- சமூகத்தை - உறவு நிலைகளைப் பார்த்து எழுதக்கூடிய அற்புதமான படைப்பாளி! அதற்கு இந்த 'அழகிய தவறு' நாவல் அழகான சான்று! படித்து முடிக்கும்போது அதை நீங்கள் நிச்சயம் உணர்வீர்கள்!

-பதிப்பகத்தார்

# அழகிய தவறு

-நாவல்



இயக்குநர் மகேந்திரன்

# நீங்கள் படிப்பதற்கு முன்...

**நா**ம் எல்லோரும் தெரிந்தோ, தெரியாமலோ செய்யும் சில 'அழகிய தவறுகள்' - நாமே எதிர்பார்க்காத அரிய சாதனைகளுக்கும் அர்த்தமுள்ள நன்மைகளுக்கும் காரணமாகிவிடுகின்றன. ஆனால் இந்த உண்மையை மையமாகக்கொண்டு இந்த நாவலை நான் எழுதிவிடவில்லை என்பதே நிஜம். சில வருடங்களுக்கு முன்பு, எனக்குப் பிரியமான ஒரு மண ஓட்டத்தில் இந்தக் கதையை எழுதி முடித்த பிறகு, கதையில் வரும் இளைஞன் ரங்கராஜன் அரங்கேற்றும் ஒரு விபரீத நாடகம், ஒரு 'அழகிய தவறு' என்றே எனக்குத் தோன்றியது. அதையே கதைக்குரிய பெயராக்கினேன். அதற்காக அழகான தவறுகளைத் தெரிந்து செய்வது 'சரியா, தப்பா' என்ற விவாதத்திற்குள் நான் போக விரும்பவில்லை. அது அவரவரின் தனிப்பட்ட விருப்பம்.

ஒரு திரைப்பட இயக்குநர் என்ற முறையில் நான் தேர்ந்தெடுத்துச் செல்லும் பயண வழியில், அன்றும் இன்றும் எனக்குப் பிரியமான ஒரே வழித்துணை நான் மிகவும் நேசிக்கும் இலக்கியவாதிகளின் உயிருள்ள படைப்புகள்தான்.

அத்தகைய 'இலக்கிய சகவாசம்' எனக்குச் செய்த 'அழகிய தவறு' என்னையே கதைகள் எழுதத் தூண்டியதுதான். ஆனால், 'எழுதப்பட்டு படிக்கப்படும்' இலக்கிய ஊடகத்தின் வலிமையும் தனித்துவமும் எத்தகையது, திரைப்படம் எனும் 'பார்க்கப்பட்டு உணரப்படும்' ஊடகத்தின் மொழி எப்படிப்பட்ட தனித்தன்மை கொண்டது என்ற உணர்வின் எச்சரிக்கையை என்றைக்கும் நான் மறப்பதில்லை. கடந்த வருடங்களில் எனது சில நாவல்களும், சிறுகதைகளும் வாசகர்களிடையே திருப்திகரமான அங்கீகாரத்தைப் பெற்றாலும், என்னுடைய முதல் நாவலான 'மெட்டி'யை அமெரிக்காவின் 'Library of Congress' - தங்களின் நூலகங்களின் தமிழ்ப் பிரிவில் சேர்ப்பதற்காகத் தேர்வு செய்தபோதும், நான் எளிதாக மனநிறைவு கொள்ளவில்லை. 'நான் இன்னும் ஆழமாக நீந்திச் செல்ல வேண்டியிருக்கிறது' என்றே உணர்ந்தேன். அதுதான் உண்மை.

அருமை நண்பர் திரு. நக்கீரன்கோபால் அவர்கள் 'சிறுகதை கதிர்' எனும் அருமையான இதழை நடத்தியபோது ஒரு புதுமையான உத்தியைக் கையாண்டார். யோசிக்கச் செய்யும் அபூர்வமான புகைப்படங்களை என்னிடம் அனுப்பி, அந்தப் புகைப்படங்களை ஆதாரப்படுத்தி சிறுகதைகள் உருவாக்கும்படி சொல்வார். அதை ஒரு இனிய சவாலாக ஏற்று பல சிறுகதைகளை எழுதினேன். மறக்க முடியாத அனுபவம் அது. அந்த உத்தியை மீண்டும் இப்போது அவர் தொடர வேண்டும்.



இன்று அவர், 'நக்கீரன்', 'இனிய உதயம்' சார்பாக பெருமைக்குரிய பிறமொழிப் படைப்புகளையும் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுவதன் மூலம், தமிழ் வாசகர்களுக்கு அருமையான இலக்கியப் பணியாற்றுகிறார். அவரது 'இலக்கியப் பார்வையில்' இப்போது எனது 'அழகிய தவறு'க்கும் இடம் அளித்திருப்பது, அடுத்தடுத்து நான் எழுதவிருக்கும் முயற்சிகளுக்கு மிகுந்த உற்சாகம் தருவதாய் இருக்கிறது.

பதிப்பாசிரியர் திரு. நக்கீரன்கோபால் அவர்களுக்கும், 'இனிய உதயம்' பொறுப்பாசிரியர் திரு. மா. முருகன் அவர்களுக்கும், அவர்களின் பணியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டுள்ள எழுத்தாளர் நண்பர் திரு. கரா அவர்களுக்கும் இப்புத்தகத்தின் அழகிய வடிவமைப்பிற்குக் காரணமான அட்டை வடிவமைப்பாளர் ஆர்சியதிராஜ் மற்றும் தோழர்களுக்கும் எனது நன்றியும், வணக்கமும் உரித்தாகுக!

என்றும் அன்புடன்,

*மகேந்திரன்*

# 1

அவன் எல்லா நாட்களும் இப்படித்தான்.

வழக்கம்போல, அந்த அதிகாலை இளமையைத் தனது தேனான புல்லாங்குழல் இசையால் கிறங்கச் செய்துகொண்டிருந்தான் ரிக்கி. புகைமூட்டம் போட்ட மாதிரி வெளிச்சம் அதிகம் தெரியாத அந்தக் காலைக் கருக்கலில், தனது பங்களா மொட்டை மாடியின் கைப்பிடிச் சுவரில் கண் மூடிச் சாய்ந்து உட்கார்ந்துகொண்டிருக்கிறான். தன் இளம் சிவப்பு உதடுகளைப் புல்லாங்குழல் கண்ணில் குவித்தபடி, விரல்களால் குழலின் கண்களை மூடுவதும் திறப்பதுமாக- அவன் மெய்மறந்து வாசிக்கும் கோலம், அன்புக் காதலியை மோகத்தோடு முகம் பதித்துக் கொஞ்சுவது போலிருக்கும்.

அந்தப் பங்களாவைச் சுற்றிலும் பல அடுக்குமாடிக் கட்டிடங்கள். ரிக்கியின் மயக்கும் இசை கேட்கத் தொடங்கியதுமே, அந்த அடுக்குமாடிக் கட்டிடங்களின் ஜன்னல்கள் அடுத்தடுத்துத் திறந்துகொள்ளும். குழந்தைகள், குமரிகள், குமரன்கள், முதியவர்கள் அத்தனைபேரும் ரிக்கியின் விசிறிகள்தான். ஒரு அரைமணி நேரம்தான் அந்த கீத சுகத்தை அவர்கள் அனுபவிக்க முடியும். சூரியக்கதிர்களால் முகத்தில் இதமான வெப்பம் படரத் தொடங்கியதும் அவன் எழுந்து ஓடிவிடுவான்.

அது அவனுக்குரிய ஒரு நேரக்கணக்கு. அப்புறம் தோட்ட வேலைதான் அவனுக்கு குழல் பிடித்த கையில் 'ஹோஸ் பைப்' இருக்கும்.

அந்த அடுக்குமாடி மக்களுக்குத் தினம் தினம் தித்திக்கும் கானத்தை அள்ளிக்கொடுக்கும் ரிக்கி, அவர்களுக்கு உலராத வேதனை ஒன்றையும் அன்றாடம் தந்துகொண்டிருக்கிறான். 'ஜெனரேஷன்ஸ்' என்று பெயர் பொறித்த அந்த அபார்ட்மெண்ட்டின் மூன்றாவது மாடியில் இருக்கும் ஜனகவல்லி அம்மாள் தனது கணவரிடம் தினமும் காலை வேளையில் சொல்லிப் பொங்குவது இதுவே- "இந்த ரிக்கி நமக்குப் புள்ளையா வந்து பிறந்திருக்கக் கூடாதா? அந்தப் படுபாவிக்கு மகனாய் பிறக்க இந்தப் பிள்ளை என்ன பாவம் பண்ணான்...?"

இப்படி ஒவ்வொரு பிளாட்டிலும் ஒரு ஜனகவல்லி தினமும் புலம்பிக் கொண்டிருக்கிறாள்... அந்தப் பாவியைச் சபிக்கிறாள்.

அந்தப் பாவிதான், இந்திரஜித் என்ற புராணக் கதாபாத்திரத்தின் பெயர் கொண்ட ரிக்கியின் அப்பா. அந்தப் பெயரால்தானோ என்னவோ அந்தக் கோடீஸ்வரருக்கு அரக்க குணம் தலைதூக்கி நின்றது. இந்திரஜித்துக்கு இந்தியாவில் மட்டும் அல்ல, வெளிநாடுகளிலும் சில நட்சத்திர ஹோட்டல்கள் உண்டு. அந்த ஹோட்டல் புத்தியால், மகன் என்றும் பாராமல் ரிக்கியை ஒரு எடுபிடியாக மிரட்டி ஒடுக்கி வைத்துக்கொண்டிருக்கிறார். அவரின் கேடுகெட்ட புத்திக்கு மணி கட்டிவிட்டு சந்தோஷப்படுகிற குரூர குணம் கொண்டவள் இந்திரஜித்தின் இரண்டாவது மனைவி இளம் காமினி. இந்திரஜித்தின் இச்சைக்குத் திகட்டி விடாதபடி தீனிபோட்டு, எச்சரிக்கை எல்லையில் நின்றபடி, தான் நினைத்ததை எல்லாம் கணவனிடம் சாதித்துக் கொள்வாள்.

"என்னவோ கிருஷ்ண பரமாத்மா மாதிரி எப்பவும் புல்லாங்குழலோட திரியற இவனுக்குப் படிப்பு எதுக்கு?" என்று ஒருநாள் படுக்கை அறையில் கேட்டாள். மறுநாளே 'ரிக்கி' என்ற ரங்கராஜன் கல்லூரியின் இரண்டாவது வருடப் படிப்போடு நிறுத்தப்பட்டு, வீட்டு வேலைகளுக்கு நியமிக்கப்பட்டான் அப்பா இந்திரஜித்தால்.

இன்று, வழக்கத்துக்கு அதிகமாக முகத்தில் சூரியன் முத்தம் கொடுத்தும்கூட ரிக்கி இசைப்பதை நிறுத்தவில்லை. தன் மனத்துச் சோகத்தை வானத்திலிருந்து பார்க்கும் தன்னைப் பெற்ற தாயிடம் சொல்லிப் புலம்புவதுபோல்- கண்களில் கசியும் கண்ணீருடன் மனம் உருகி வாசித்துக் கொண்டிருக்கிறான். அதனால், அடுத்து நடக்கப்போவதை ரிக்கி சிறிதும் எதிர்பார்க்கவில்லை. தன் கன்னத்தில் விழுந்த பலமான அறையால் தடுமாறிச் சாய்ந்த



பொழுதுதான், இந்திரஜித் தன் முன்னே நிற்பதைப் பார்க்கிறான். உடல் நடுங்குகிறது, மனசையும் சேர்த்துக்கொண்டு.

"சோம்பேறி ராஸ்கல்... உனக்கு எத்தனை தடவை சொல்லியிருக்கேன். காலையிலே எந்திரிச்சவுடனே முதல்வேலையா 'கார்டனிங்'கை முடிக்கணும்னு. நீ என்னையே ஏமாத்திட்டு இப்படிக் காலையிலே இருட்டோட பெரகக்கு வந்து தெருப்பிச்சைக்காரன் மாதிரி ப்ளூட் வாசிச்சிட்டிருக்கே. இன்மே இங்கே உன்னைப் பார்த்தேன்னா... கொலையே விழுந்திடும்... ஜாக்கிரதை. என்னடா பார்க்குறே... நாயே... கீழ போயி வேலையைக் கவனி."

ரிக்கி, அழுகையை மனதிற்குள் அடைத்துக்கொண்டு அடுத்த அறை விழுவதற்குள் பரிதாபமாகவும் வேகமாகவும் அங்கிருந்து புறப்படுகிறான்.

அத்தனை அடுக்குமாடி ஜீவன்களும் அந்தக் கொலைகாரக் காட்சியைப் பார்த்து அதிர்ந்துபோய் கண்ணீர்விட மறந்து நிற்கின்றனர்.

# 2

ரிக்கி தோட்ட வேலையைத் தொடங்கி விட்டான். ஹோஸ் பைப்பைப் பிடித்தபடி, பங்களா முன் விரிந்து கிடந்த ஆஸ்திரேலியப் புற்களின் மென்மை சிதைந்து விடாதபடி பனி பெய்வதுபோல் தண்ணீர் விழச் செய்கிறான். இன்று, வழக்கத்திற்கு மாறாக அவன் காதலிக்கும் செம்பருத்திப் பூக்கள் ஏராளமாய்ப் பூத்திருந்தது அவனை சந்தோஷப்படுத்தி விட்டது. தண்ணீர்விடுவதைக் கொஞ்சம் தற்காலிகமாக நிறுத்திவிட்டு அந்தப் பூக்களிடம் ஓடினான். செக்கச் செவேல் என்று சிரித்துக்கொண்டிருந்த அந்தச் சிவப்புப் பூக்கள் அவனிடம் சிரித்துப் பேசுவதுபோலத் தெரிந்தது. ரிக்கி இப்படித்தான் கற்பனை செய்துகொள்வான். "நீங்களாவது என்கிட்டே சிரிக்கிறீங்களே. எனக்கு இது போதும். உங்களைப் பார்க்குறப்ப எல்லாம் எனக்கு என் கவலையெல்லாம் மறந்துபோகுது" என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டான். கடந்த ஒரு வருடமாகத்தான் ரிக்கிக்கும் செம்பருத்திப் பூக்களுக்கும் இப்படிப் பட்ட சிநேகிதம். ஒரு வருஷத்துக்கு முன்னால் ஒரு நாள் காலை, அப்பாவும் சித்தியும் வெளியூர் போய்விட்டார்கள். சமையல்காரன் ராமய்யா கிருஷ்ண பக்தன். அவன் தினமும் அதிகாலை



எழுந்து பங்களா பக்கத்தில் இரண்டு வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்ட கிருஷ்ணன் கோயிலுக்குப் போய்விட்டு வந்துதான் வேலைகளையே தொடங்குவான்.

அன்றைக்கு ரிக்கி மட்டும் தனியே வீட்டில் இருந்தான். ராமய்யாதான் வந்து கூப்பிட்டான். "ரிக்கி, நீயும் வாயேன் என்கூட. அப்பாவும் சித்தியும்தான் வீட்டுலே இல்லியே. பயப்படாமப் புறப்படு. இன்னைக்கி கோயில்ல ரொம்ப விசேஷம். பிரார்த்தனை நடக்கும். அத்தோட கொஞ்சப்பேர் ஆண்களும் பெண்களுமா அற்புதமாகப் பாடுவாங்க. அவுங்க பாடுறதைக் கேட்டாலே போதும். மனசெல்லாம் இளகி ஆனந்தப் பரவசத்திலே கூத்தாடும்". ரிக்கிக்கு பாட்டு என்றதும் மகா உற்சாகம். "நானும் வர்றேன்" என்று ராமய்யாவோடு புறப்பட்டுவிட்டான். கோயிலில் அவர்கள் பாடியதைக் கேட்டு தன்னையும் அறியாமல் தாளம் போடத் தொடங்கிவிட்டான். "எவ்வளவு இனிமையாகப் பாடுகிறார்கள். தெய்வீகமாகத் தித்திக்குதே இந்த இசை" என்று ராமய்யாவிடம் மயங்கிய நிலையில் புகழ்ந்தான். பிரார்த்தனை எல்லாம் முடிந்து எல்லோரும் கலையத் தொடங்கியதும் ரிக்கியை அழைத்துக்கொண்டு கோயிலின் உள்ளிருந்த தியான மண்டபத்தைக் காட்டினான் ராமய்யா. "பகவான் கிருஷ்ணனைக் கும்பிட்டுக்கோ. ரிக்கி உன் கவலையெல்லாம் உன்னை விட்டுப் போய்விடும்" -ராமய்யா சொன்னபொழுதுதான் மண்டபத்தில் மேடையில் புல்லாங் குழலுடன் நின்ற கிருஷ்ணன் விக்ரகம் செம்பருத்திப் பூக்களால் வித்தியாசமாய் அலங்கரிக்கப் பட்டிருப்பதைப் பார்த்தான்.

கோவிலை விட்டு வெளியே வருவதற்கு முன்பு காம்பவுண்டுக்குள் இருந்த செம்பருத்திச் செடிகளில் ரத்தச் சிவப்பாக ஒரே ஒரு பூ மட்டும் இலைகளுக்கு நடுவே தலையாட்டுவதைப் பார்த்துவிட்டான். ரிக்கி. "ராமய்யா- இந்தப் பூ எனக்கு வேணுமே" என்று கேட்ட பொழுது, ராமய்யா, "ரிக்கி இது உனக்காக பகவான் விட்டுவச்ச பூவா தெரியுது" என்றபடி அந்தப்பூவைப் பறித்துக் கொடுத்தான்.

அந்தப் பூவைக் கொண்டுபோய் தன் அறையில் உள்ள தாயாரின் புகைப்படத்திற்கு வைத்துப் பரவசத்துடன் பார்த்தான். ஒன்றுக்கு இரண்டு பேர் தன்னோடு தன் அறைக்குள் இருப்பதுபோல் அவனுக்குள் ஒரு உற்சாகமும் தைரியமும் பிறந்தது.

அடுத்தநாளே, ராமய்யா உதவியுடன் எங்கிருந்தோ கொண்டு வந்த செம்பருத்திக் கன்றுகளை நட்டு, உரம்போட்டுத் தண்ணீர் விடத் தொடங்கியவன் தான்- இன்று வளர்ந்து உயர்ந்த செடிகள் கூட்டமாய்ப் பெருகி, ஏராளமான செம்பருத்திக் குடும்பங்கள்

இப்போது ரிக்கியின் சொந்தங்களாகிவிட்டன. அவனுடைய வெறுமை நிறைந்த தனிமைக்கு அவை ஆறுதலாய் இருந்தன.

ராமய்யா கோயிலுக்குப் போகும்போது அவனுக்கு மட்டும் அந்தப் பூக்களைப் பறித்துக் கொடுப்பான் ரிக்கி. அப்புறம் மிச்சம் எல்லாம் அம்மா படத்திற்கு. "நானும் கோயிலுக்கு தினமும் வரத்தான் ஆசைப்படுறேன் ராமய்யா. ஆனா, அப்பா என்னைக் கொன்னேபுடுவார்" என்று ரிக்கி சொல்லும்போதெல்லாம் "இந்தப் பூக்களாகவே கிருஷ்ண பரமாத்மா உன்னோடு இருக்கும்போது உனக்கு அந்தக் குறையே வேண்டாம்" என்று ராமய்யா அமைதியாகப் பதில் தந்துவிட்டுச் செல்வான்.

"டேய் ரிக்கி, வேலை செய்யாம அங்கே என்னடா வேடிக்கை பார்த்துக்கிட்டிருக்கே?" என்று உறுமல் ஒன்று கேட்ட பொழுது தான் செம்பருத்திப் பூக்களிடமிருந்த கவனத்தை மாற்றித் திரும்பிப் பார்க்கிறான் ரிக்கி.

அப்பாவும், காமினியும், அந்த அல்சேஷனும் காரில் பீச்சுக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்திரஜித்தைப் போலவே அந்த நாயும் காருக்குள் உட்கார்ந்தபடி குலைக்கிறது. வாட்ச்மேன் ஓடிப்போய் கேட்டை திறக்க, குலைத்தபடியே அந்தக் கார் வெளியே போகிறது.

ஹோஸ் பைப்பை எடுத்து வைத்துவிட்டு, மடிநிறைய செம்பருத்திப் பூக்களைப் பறித்துக்கொண்டு தன் அறைக்கு ஓடுகிறான் ரிக்கி.



# 3

சமையல் கட்டில் ரிக்கி பிரவேசம் பண்ணிவிட்டால் போதும், விதவிதமான பதார்த்தங்கள் பிரபலமான சைனீஸ் ரெஸ்டாரண்டுகளைத் தோற்கடிக்கும் விதத்தில் பிரசவித்துவிடும். இசைக்கு அடுத்தபடியாக அவன் நேசிக்கிறது இந்த சமையல் கலையைத்தான். தங்கள் வீட்டின் அலங்காரமான புத்தக பீரோவில் இருந்த, மேல்நாட்டு- இந்திய நாட்டு- செட்டிநாட்டு சமையல் வரை விபரமாகச் சொல்லப்பட்டிருந்த 'குக்கரி' புத்தகங்களைப் படித்தவன் ரிக்கி. இப்படி அவனைப் படிக்கத் தூண்டிய புத்தகங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். காரணம்? பெரும்பகுதி நேரத்தை, சிறுவயது முதல், அம்மா ராஜலட்சுமி இறந்ததிலிருந்து, அவன் சமையல் கட்டில் ராமய்யாவோடும், கல்யாணி என்ற விதவை வேலைக்கார அம்மா இவர்களுடன்தான் சந்தோஷமாக்கிக் கொள்கிறான். சித்திக்கும்- அப்பாவுக்கும் தெரியாமல் ரகசியமாகத் தன்னிடம் அன்பைக் கொட்டும் அந்த ஏழை உள்ளங்களுக்கு சமையலில் கலந்துகொண்டு உதவி செய்வது அவனுக்கு ரொம்பவும் பிடிக்கும். ராமய்யாவும், கல்யாணியும் எவ்வளவு தடுத்தாலும் விடமாட்டான். ஆரம்பத்தில் இப்படித் தொடங்கிய பழக்கம்தான், காலப்போக்கில் குக்கரி புத்தகங்களைப் படித்து ஆராய்ந்து அதன்படி புதுமாதிரியான உணவு வகைகளைத் தயாரிப்பதில்

தீவிரம் காட்டினான். அந்தத் தீவிரம் சமையல் கலையில் அவனைக் கைதேர்ந்தவனாக்கியது.

இதை ஒருநாள் காமினிதான் துட்டுத் துலக்கினாள். "என்ன ராமய்யா, இன்னைக்கு வீட்டுல சமைக்காம சைனீஸ் ரெஸ்ட்டாரண்ட்டுலே ருந்து புடிச்சிட்டு வந்துட்டியா. என்னைக் கேக்காம இதெல்லாம் என்ன அதிகப்பிரசங்கித்தனம்?"- அவள் போட்ட கூச்சலில் பயந்துபோய், அந்த அப்பாவிகளைக் காப்பாற்றும் எண்ணத்தோடு முன்னால் வந்து நின்ற ரிக்கி வாக்குமூலம் கொடுத்துவிட்டான். அதன் விளைவு எப்படியிருக்குமோ என்று ராமய்யா பதறிக் கொண்டிருக்க, "வெரிகுட்..." என்று பாராட்டின காமினி, இந்தமாதிரி சமையலையெல்லாம் ரிக்கி எப்படிக் கற்றுக் கொண்டான் என்று கேட்டறிந்ததும், போட்டாளே ஒரு தடாலடி உத்தரவு. "ரிக்கி, இனிமே நான் எப்பப்ப இந்த மாதிரி டிஷஷஸ் வேணும்னு சொல்றேனோ அப்பல்லாம் நீதான் குக் பண்ணனும். அப்புறம் வீட்டுலே பார்ட்டி அது இதுன்னு முக்கியமான அக்கேஷன்ஸ் வர்றப்ப எல்லாம் நீதான் கிச்சன் இன்சார்ஜ். ராமய்யா, கல்யாணி ரெண்டுபேரும் எதையும் தொடக்கூடாது. டேபிள்ல சர்வ் பண்றதுகூட நீ படிச்ச வெஸ்டர்ன் ஸ்டைல்லேதான் இருக்கணும்..."

ரிக்கி, அபார மகிழ்ச்சியுடன் அந்த உத்தரவை ஏற்றுக்கொண்டு, இன்றுவரை அதில் பிழை ஏதும் நேராமல், நல்லதொரு மகனாக- 'நளனாக' நடந்துகொள்கிறான்.

அம்மா படத்திற்குச் செம்பருத்திப் பூக்களை வைத்துவிட்டு கிச்சனுக்குள் நுழைந்த ரிக்கி, கல்யாணியும் ராமய்யாவும் சோர்ந்துபோய் தரையில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும் "என் ஒரு மாதிரியா..." என்று கேட்கப் போனவன் நிறுத்திக்கொண்டான். ரிக்கியின் அம்மா இறந்த மறு வருடமே ரிக்கி தெரிந்து கொண்ட முதல் விஷயம்- அவன் அம்மா இறந்த தினத்தை விரதநாளாக அனுஷ்டிப்பவர்கள் இந்த அன்பான வேலைக்காரர்கள் என்பதை ஒவ்வொரு வருடமும் இந்த ஒருநாள்- அன்றுதான் ரிக்கி அம்மா இறந்ததுபோல நினைத்துக்கொண்டு அவர்கள் அழுது புலம்பிக் கொண்டிருப்பார்கள். ஆக, இன்று ரிக்கியின் அம்மா இறந்த தினம். ரிக்கி தன் அறைக்குத் திரும்பிவிட்டான். அவனுடைய அந்தச் சின்ன அறையில் இருந்த அம்மாவின் படத்தைப் பார்த்தபடி கட்டிலில் தளர்ந்துபோய் உட்கார்ந்துவிட்டான். திடீரென நினைவு வந்தவனாய், தன் பெட்டியில் பத்திரப்படுத்தி வைத்திருந்த ஊதுபத்திக் கட்டிலிருந்து சிலவற்றை எடுத்துக் கொளுத்தி, எரிந்ததை அணைத்துவிட்டு மணக்கும் புகை எழுப்பிய அந்த



ஊதுபத்திகளை அம்மா படத்தின் முன்னால் இருந்த ஸ்டாண்டில் வைத்தான்.

கிச்சனில் கல்யாணி அம்மாள் ராமய்யாவிடம் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறாள்.

"ராமய்யாண்ணே... அம்மா இறந்தது மட்டும்தான் ரிக்கிக்குத் தெரியும். ஆனா அந்த உத்தமி எப்படிச் செத்தாங்க, ஏன் செத்தாங்கன்னு இதுவரைக்கும் ரிக்கி தம்பிக்கிட்டே சொல்லாமலே மறைச்சி வச்சிருக்கோமே, இது பாவமில்லையா?"

"அதைச் சொல்றதுதான் நாம செய்ற பெரிய பாவமா இருக்கும் கல்யாணி."

ராமய்யா அதற்குமேல் பேசவில்லை. இப்போது, அவன் நினைப்பு எல்லாம் பதினோரு வருடத்திற்கு முன்னால் ஓடி ஒரு கோர்ட்டுக்குள் உட்கார்ந்துகொண்டிருக்கிறது, ஏழு வயது ரிக்கியை மடியில் வைத்துக்கொண்டு.

இந்திரஜித் தன் மனைவியை விவாகரத்து செய்ய நினைப்பதற்கான வலுவான காரணத்தை நீதிபதி கேட்கிறார்.

"அதை நான் எப்படிச் சொல்வேன். என் மனம், வாய் எல்லாம் கூசுகிறது. அந்தக் காரணத்தைச் சொல்வதன்மூலம் என் மானமும் பறிபோய்விடுமே." -நீதிபதி முன்னால் கண்ணீர் விடுபவன்போல் நடிக்கிறான் இந்திரஜித்.

"மிகவும் ரகசியமான முறையில் இந்த வழக்கை நடத்த நான் அனுமதித்திருக்கிறேன். நீங்கள் சொல்லும் காரணம் இந்தக் கோர்ட்டைத் தாண்டி வெளியே போகாது. நீங்கள் தயங்காமல் அந்தக் காரணத்தைச் சொல்லலாம்." -நீதிபதி வற்புறுத்துகிறார்.

கணவனுக்கு நேராக உள்ள சாட்சிக் கூண்டில் அழுதுகொண்டு நிற்கிறாள் ராஜலட்சுமி.

"இந்தக் கோர்ட்டில் என் வேலைக்காரன் ராமய்யா இருக்கிறான். அவனையும் அவனிடமிருக்கும் என் மகனையும் சேர்த்து வெளியே போகச் சொல்லுங்கள். அப்பொழுதுதான் என்னால் அந்தக் காரணத்தைச் சொல்ல முடியும்."

நீதிபதி அதற்கு உத்தரவிட்டபொழுது, அரசாங்கத் தரப்பு வக்கீல் ஆட்சேபணை தெரிவிக்கிறார். வெளியேறப்போன ராமய்யா மீண்டும் உட்காருகிறான்.

கடைசியில், ராஜலட்சுமி கதறித் துடித்து மயக்கமடைந்து விழும்படியான படுபாதகப் பொய்க் காரணத்தை, இந்திரஜித் எனும் அந்த அரக்கன் தயங்காமல் சொல்லிவிட்டான்.

"என் மனைவி நடத்தை கெட்டவள்."

பத்தினி சொன்னால் மழை கொட்டும் என்று பெருமைப்படும் மண்ணில், ராஜலட்சுமியின் அழுகையால் நெருப்பு மழை கொட்டி அந்த இடத்திலேயே இந்திரஜித் கருகிச் சாம்பலாகியிருக்க வேண்டும். அது ஏன் நடக்கவில்லை அன்று? தெய்வம் நின்று கொல்லும் என்ற ஆறுதல் தத்துவத்தையும் இந்த மண்ணிலேதானே உழுதிருக்கிறார்கள்.

நீதிபதி ஆதாரம் கேட்டதற்கு அந்தப் பாம்பு கக்கின விஷம்- "என்மனைவி நன்றாகப் பாடுவாள். வீணை வாசிப்பாள். நான் இல்லாத நேரங்களில் வீட்டிற்கு என்னைத் தேடிவரும் நண்பர்களைத் தன் பாட்டால், முறைகெட்ட நடத்தையால் அவர்களை ரகசிய நண்பர்களாக்கிக் கொண்டுவிட்டாள். இதற்கு மேலும் நான் காரணம் சொல்ல வேண்டுமா? சம்பந்தப்பட்ட நண்பர்கள் துரோகிகள்தான். ஆனால் உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர்கள், அவர்களைக் கோர்ட்டிற்கு இழுத்து அவமானப்படுத்த நான் விரும்பவில்லை. இவள் செய்த பாவத்திற்கு அவர்களைப் குற்றப்படுத்த என் மனசாட்சி இடம் தரவில்லை." காமினியைப் பற்றிச் சொல்ல வேண்டிய உண்மைகளை, உத்தமியான மனைவி ராஜலட்சுமியின்மேல் திருப்பிக் கவிழ்த்துவிட்டான் இந்திரஜித்.

அதைக் கேட்டதும் ராமய்யா கதறி அழுதான். அவன் அழுகையைக்கூட இந்திரஜித் கோர்ட்டில் திசைமாற்றிவிட்டான்.

"பாருங்கள், என் விசுவாசமான வேலைக்காரன், எனக்காக அழுவதைப் பாருங்கள்..."

இந்திரஜித் ஜெயித்துவிட்டான். சத்தியம் தோற்கடிக்கப் பட்டது.

வென்றவன் வீடு திரும்புவதற்குள், வீழ்த்தப்பட்டவள் விஷம் குடித்து மடிந்துவிட்டாள்.

சிறுவன் ரிக்கிக்கு கோர்ட்டில் என்ன நடந்தது என்பதைப் புரிந்துகொள்ள முடியாத வயது. நடக்கத்தான் அவனுக்குத் தெரியும். தகப்பன் என்ற அசுரன் கோர்ட்டில் சொன்ன 'நடத்தை' என்ற பதத்திற்கெல்லாம் பொருள் புரியும் வயது அவனுக்கு இல்லை. 'அம்மா இறந்துவிட்டாள்' என்பது மட்டுமே அவன் மூளைக்கு எட்டுகிறது. அதுவும்கூட ராமய்யா சொல்லி.

இந்திரஜித்தை அந்த அளவிற்குத் தன் இளமையால் ஆட்டிவைத்தவள் காமினி. இந்திரஜித் என்ற கோடீஸ்வரனை ராப்பிச்சையான இந்த நட்சத்திர ஹோட்டல் ஆட்டக்காரி சர்வசாதாரணமாய்ச் சாய்த்துவிட்டாள். ராஜலட்சுமியைத்



தீர்த்துக்கட்டினால் ஒழிய தன்னால் முறைப்படி இந்திரஜித் அருகே அரியணையில் அமர வாய்ப்பில்லை என்று தெரிந்துகொண்டு, விவாகரத்து செய்யத் தூண்டினாள் இந்திரஜித்தை விவாகரத்துக் கான காரணத்தையும் அவளே அவன் மூளைக்குள் திணித்தாள். ராவணன் சொன்னதற்காக தர்மத்தை எதிர்த்து அழிந்தவன் ராமயணத்து இந்திரஜித். இங்கே காமினி சொன்னதற்காக தர்மத்தை அழித்துவிட்டு- அதற்குப் பிறகும் வாழ்ந்து கொண்டிருப்பவன் இந்த இந்திரஜித்.

ராமய்யா வீட்டை விட்டு வெளியே போனால் 'குடும்பத்தோடு கொளுத்திவிடுவேன்' என்று பயமுறுத்தியே இத்தனைக் காலமாக வீட்டிற்குள்ளேயே அவனை சிறை வைத்திருக்கிறான் இந்திரஜித்.

இப்போது, ஏதோ பாத்திரம் உருளும் சத்தம் கேட்டு ராமய்யாவின் நினைவு நீதிமன்றத்திலிருந்து மீண்டும் கிச்சனுக்குத் திரும்பியது. ஜன்னல் ஓரமாகத் தாழ்ந்திருந்த மாமரத்து மரக்கிளையில் குயில் ஒன்று உட்கார்ந்துகொண்டிருந்தது "குக்கூ..!" அந்த இனிய ஒலியை எழுப்பும் குயில் ராஜலட்சுமி அம்மாளா? ராமய்யா அப்படித்தான் நினைத்தான். "அம்மா... தெய்வமே... குயிலா வந்து எங்களைப் பாக்குறீங்களா, உங்க புள்ளையெக் கூப்புடுறேன், கொஞ்சம் இருங்க..."

ரிக்கியின் அறைக்கு ஓடினான் ராமய்யா. ரிக்கியுடன் கிச்சனுக்கு ராமய்யா திரும்பிபொழுதும் அந்தக் குயில் அந்தக் கிளையில்தான் உட்கார்ந்திருந்தது. மீண்டும் அது "குக்... கூ... குக்... கூ..!" என்றது. "ரிக்கி, அது குயில் இல்லே. உங்க அம்மா... உன்னைப் பார்க்க வந்திருக்காங்க..." -ராமய்யாவின் பேச்சு ரிக்கிக்கு அப்பாவித் தனமாகத் தெரிந்தது. "சரி... ராமய்யா அம்மாகிட்டே நீ பேசிக்கிட்டு இரு. நான் ரூமுக்குப் போறேன்..." -போய்விட்டான். குயிலும் பறந்துவிட்டது.

# 4

ரிக்கியின் அம்மாவிற்குத் தூரத்துச் சொந்தம் என்பதெல்லாம் எவரும் இல்லாத இருட்டு. அந்தத் தைரியத்தில்தான் அந்த அன்பு மனைவியைக் களங்கப்படுத்தி அவள் காலத்தைச் சுலபமாக முடித்துவிட்டான் இந்திரஜித். ஆனால் அந்த உத்தமி வாசித்து மகிழ்ந்த வீணையை, 'நலம்தானா?' என்று விசாரிக்க மட்டும் ரிக்கி இன்று உயிரோடு இருக்கிறான்.

தன் அறைக்குள், அம்மாவின் ஞாபகார்த்தமான அந்த வீணையை பார்த்தபடியே, ரிக்கி தனது கையிலிருந்த புல்லாங்குழலை கண்களில் ஒற்றிக் கொண்டான். அம்மா ராஜலட்சுமி, ரிக்கிக்கு மூன்று வயதாகும்போதே அவனுக்குப் புல்லாங்குழல் வாசிக்கக் கற்றுக்கொடுத்தாள். அம்மா வாசித்ததை அப்படியே சுத்தமாக, மேலும் அழகாய் அவன் வாசித்துக் காட்டுவான். அம்மாவிற்கு அதிசயமாய் இருக்கும். நாளாக, நாளாக, ராகங்களின் பெயர்கள் தெரியாமலே, அந்த ராகங்களை அதி அற்புதமாய் வாசிக்கத் தொடங்கிவிட்டான். ராமய்யா கதவைத் தட்டினான். கதவைத் திறந்தான் ரிக்கி. "ரிக்கி, அம்மா உடனே உன்னை வரச்சொல் றாங்க?". "எந்த அம்மா? மேடம்னு சொல்லுங்க ராமய்யா. இந்த வீணைக்குச் சொந்தக்காரங்கதான் எனக்கு அம்மா. 'இந்த



வீட்டுக்குச் சொந்தக்காரம்மா என் அம்மா இல்லே" - திருத்தினான் ரிக்கி.

மேடம் காமினி முன்னால் வந்து நின்றான் ரிக்கி.

"இந்தா பார் ரிக்கி, சிங்கப்பூர்லேருந்து எங்க ஹோட்டலோட ஓர்க்கிங் பார்ட்னரை இன்னிக்கு இங்கே டின்னருக்கு வரச் சொல்லியிருக்கேன். சைனீஸ் அண்ட் இண்டியன் டைப்புல ஸ்பெஷல் டிஷ்ஷஸ் ரெடி பண்ணிடு. அவரோட சேர்ந்து கூட ஒரு அஞ்சு பேர் வரலாம். எல்லாம் கணக்குப் பண்ணி பிரம்மாதமான டின்னருக்கு அரேஞ்ச் பண்ணிடு."

கட்டளையைப் பெற்றுக்கொண்டு கிச்சனுக்கு வந்தான் ரிக்கி. கல்யாணி அம்மாள் அவனைக் கட்டிப்பிடித்து அழுதாள். "அம்மா இறந்த நாள் அதுவுமா வீட்டுலே பார்ட்டி குடுக்குறா அந்த ராட்சஷி. அதுக்கு நீ சமைக்கணும்னு சொல்றாளே... இவ நல்லாயிருப்பாளா?"

ராமய்யா திடமான குரலில் சொன்னான், "விடிஞ்சா கிருஷ்ண ஜெயந்தி. இந்தப் பொம்பளையால உனக்கு அவமானத்தைக் குடுக்குற மாதிரி குடுத்து, அந்த பகவான் உனக்கு விமோசனத்தைக் கொடுக்கலாம். யார் கண்டா."

ராத்திரி விருந்துக்கான பொருட்களை வாங்குவதற்காகத் தன் டூவீலரில் புறப்பட்டான் ரிக்கி. போகிற வழியில், அம்மாவின் கல்லறைக்குப்போய், தான் கொண்டு வந்திருந்த செம்பருத்திப் பூக்களை வைத்து வணங்கிவிட்டுச் சில நிமிடங்கள் தன் புல்லாங்குழலை எடுத்து அம்மாவிற்குத் தாலாட்டு இசைத்தான் பிள்ளை.

கிச்சனில் பரபரப்பாக சமையல் வேலையில் ஈடுபட்டிருந்த ரிக்கிக்கு- திருட்டுத்தனமாக கோயிலுக்குப் போய்விட்டு வந்த ராமய்யா விபூதி பிரசாதத்தை எடுத்து அவன் நெற்றியில் இட்டான்.

விருந்தினர்கள், ஹாலில் க்ளாசும் கையுமாக உட்கார்ந்திருக்க- காமினியின் மேல்தான் அவர்களின் போதை இடம் பெயர்ந்திருந்தது. அந்த அறையின் சுவர்களை நாகரிகமாகக் கண்ணாடியால் பதித்திருந்தார்கள். அதனால் அங்கிருந்தவர்கள் இரட்டிப்புக் கூட்டமாகத் தெரிந்தார்கள். காமினியும் பல காமினிகளாய் மாறினாள். காமினியைப் புதிதாகப் பார்க்கிறவர்கள், அவள் கல்யாணம் ஆகாதவள் என்றே நினைப்பார்கள். அவளின் இளமை இந்திரஜித்தின் தொழில் சூதாட்டங்களுக்கு உதவியாக இருந்தது. அவள் விழுந்து, விழுந்து குனிந்து சிரிக்கும்போதெல்லாம், அவளின் மார்பகச் செழிப்பு, ரவிக்கைக்குள் அடங்காமல் வெளியே பொங்கிட, கவனம் சிதறினான் விருந்தாளி. இந்திரஜித்

சொன்னதற்கெல்லாம் தலையாட்டியபடி அவன் நீட்டிய பேப்பர்களில் எல்லாம் கையெழுத்திட்டான். இதே மாதிரியான மோகினித் தனத்தைக் கொண்டுதான் இந்திரஜித்திடமிருந்து ஏராளமான பத்திரங்களில் கையெழுத்து வாங்கி வைத்திருக்கிறாள் காமினி. இதெல்லாம் அந்தப் பணக்கார முட்டாளுக்குத் தெரியாது. தற்சமயம், அங்கே நடக்கும் விருந்தில் காமினி எதைக் குறிவைத்துக் காத்துக் கொண்டிருக்கிறாள் என்பதும் அந்த அயோக்கியனுக்குத் தெரியாது. இப்பொழுது தெரியப்போகிறது.

எல்லோரும் சாப்பிடும் நேரம் வந்தது. விருந்தாளிகள் டைனிங் ஹால் வந்தார்கள். 'ரிக்கி'யை ஒரு இளம் சர்வண்ட் என்று நினைத்த அவர்கள், "அதை எடு, இதைக் கொடு" என்றபோதெல்லாம் ரிக்கி யார் என்பதே அவர்களுக்குத் தெரியாது. இந்திரஜித்தும், வந்தவர்களுடன் சேர்ந்துகொண்டு ரிக்கியை அதட்டி உருட்டி அங்கேயும் இங்கேயுமாக ஓட வைத்துக் கொண்டிருந்தான். கிச்சன் அறையிலிருந்தபடி, அந்தக் கொடுமையை அழுதபடி பார்த்துக்கொண்டு நின்றார்கள் ராமய்யாவும், கல்யாணியும். "டெலிஷியஸ்... மார்வலஸ்... ஃபெண்டாஸ்டிக்..." என்று ரிக்கியின் தயாரிப்பைப் புகழ்ந்தார்கள் வந்தவர்கள். ரொம்பவும் போதை ஏறிய ஒருவர் 'டிப்ஸ்' என்று சொல்லி, ரிக்கி வாங்க மறுத்தும், கேளாமல் ஒரு ஆயிரம் ரூபாயை அன்பளிப்பு என்று சொல்லி அவன் பாக்கெட்டில் திணித்தார். எல்லோரும் சாப்பிட்டு முடித்து கை கழுவும் சம்பிரதாயம் நெருங்கியது.

அப்பொழுதுதான் அது நடந்தது. காமினி எழுந்து ஓடி வாஷ்பேஸினில் குமட்டிக் குமட்டி வாந்தி எடுத்தாள். "தேள்... தேள்..." என்று வேறு கத்தினாள். எல்லோரும் பதைத்துப்போய் அவளைச் சூழ்ந்துகொண்டார்கள்.

"நான் குடிச்சிட்டிருந்த சூப்பில் தேள் கிடக்குது பாருங்க" வாந்திக்கிடையில் கத்தினாள் காமினி. இதுவரை, அவள் மட்டும் சாப்பிடாமல் நேரம் வரட்டும் என்று 'சூப்'பைக் கையில் வைத்துக் காத்திருந்தது ஏன் என்று தெரிந்துவிட்டது.

ரிக்கி அதிர்ந்துவிட்டான்.

காமினி குடித்த சூப் கோப்பையிலிருந்து ஒரு செத்த தேளை எடுத்தார் இந்திரஜித். இவள் வைத்திருந்த சூப்பில் மட்டும் எப்படி வந்து மிதந்தது? அங்கேதான் காமினி தன் ஆட்டத்தைக் காட்டிவிட்டாள். "என்னைக் கொல்றதுக்காக சதி நடந்திருக்கு" என்று ஆங்கிலத்தில் கத்தி அழுதாள்.

தமிழ் பிழைத்தது. ஆனால் ரிக்கி பிழைக்கவில்லை.



அடுத்து நடந்த அநியாயம் காமினி எதிர்பார்த்ததே. ஏனெனில் திட்டம் போட்டு அந்தக் காமினி போட்ட தேள்தான் அது. காமினியைக் கொல்ல ரிக்கி செய்த சதி என்று சொல்லி, ரிக்கியைக் கதறக் கதற, தன் குடி வெறியோடு பெல்ட்டால் அடித்து நினைவிழக்கச் செய்துவிட்டான் இந்திரஜித். உதட்டிலும் கன்னத்திலும் உடம்பின் எல்லா பகுதியிலும் விழுந்த அடியால் உடலெங்கும் ரத்தம் கன்றியும் கறுத்தும்- மயங்கிக் கிடந்த ரிக்கியைத் தூக்கிக்கொண்டு கல்யாணியும் ராமய்யாவும் அவனுடைய அறைக்குப் போனார்கள். வாந்தி என்ற பெயரில் வாஷ்பேஸினில் சூப்பை உமிழ்ந்த காமினியை அழைத்துக்கொண்டு இந்திரஜித்தும் அவளின் குடிகாரக் கூட்டமும் பக்கத்து ஹாஸ்பிட்டலுக்கு விரைந்தது.

# 5

காமினியின் வாந்திக்கான காரணத்தைக் கண்டுபிடிக்க டாக்டரால் முடியவில்லை. அவர்கள் கொண்டு போயிருந்த சூப்பிலும் தேளின் பாதிப்புக் கிடையாது. "இப்படிச் செய்து ஒரு உயிரைக் கொல்ல முடியாது" என்று டாக்டர் சொல்லியும் போதையில் இருந்தவர்கள் நம்பவில்லை. பிறகென்ன? பெரிய இடத்துப் பேஷண்ட் அவர்கள் திருப்திப்படும்படி புரியாத எதையோ சொல்லி, அவர்களுக்குத் தாளம் போட்டு அனுப்பி வைத்தார் டாக்டர். பிறகு அந்தக் கோஷ்டி ஒரு நட்சத்திர ஹோட்டலுக்குப் போய் மீண்டும் குடித்துவிட்டு அவரவர் வீடு திரும்பினார்கள். புருஷனை நம்ப வைப்பதற்காக, "ரிக்கியின் சூழ்ச்சியிலிருந்து தெய்வம்தான் என்னைக் காப்பாற்றியது" என்று காரில் வரும்போது கன்னத்தில் போட்டுக் கொண்டே வந்தாள் காமினி. அதை அந்த முட்டாள் புருஷனும் நம்பினான். "பாவம் சின்னப்பையன். ஏதோ தெரியாமல் செய்துவிட்டான்.. அவனை மன்னித்துவிடுங்கள். மீண்டும் இப்படி ரிக்கி நடந்துகொள்வான் என்ற பயத்தில் அவனை வீட்டை விட்டு மட்டும் துரத்திவிடாதீர்கள்" என்று கெஞ்சுவதுபோல நடித்து, அபாரமான தனது திட்டத்தை புதிரான மொழியில் அவள் தெரிவித்தபோது, இந்திரஜித் சிலிர்த்துவிட்டான். பந்தயக்கோழி மாதிரி அவன் பிடரி மயிர்கூட விறைத்துக்கொண்டது. "நீ ஒரு அப்பாவி, அவன்



மேல் இரக்கம் காட்டினால் அதைவிடப் பயங்கரம் வேறு ஒன்றுமில்லை. வீட்டுக்குப் போனதும் முதல் வேலையா அவனைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளப்போறேன். இனிமேல் அவனுக்கும் நமக்கும் எந்த சம்பந்தமும் இல்லை" என்று காமினி எதிர்பார்த்திருந்த வசனத்தைப் பேசினான். இதைத்தானே காமினியின் சதுரங்க மூளை திட்டமிட்டிருந்தது.

அவர்கள் வீட்டுக்குள் நுழைந்ததும் ராமய்யா ஓடி வந்தான். "அய்யா, இந்த லெட்டரை உங்ககிட்டே குடுக்கச் சொல்லிட்டு தம்பி போயிடுச்சுங்க" என்று ஒரு கடிதத்தை நீட்டினான் இந்திரஜித்திடம்.

"திருவாளர் இந்திரஜித் அவர்களுக்கு,

நிரந்தரமாக உங்களை விட்டுப் போகிறேன். இனி திரும்பி வரமாட்டேன். கூடிய சீக்கிரத்தில், கண்ணுக்கு எட்டாத இடத்தில் என்னுடைய உருத்தெரியாத பிணம் குளத்திலோ, கிணற்றிலோ கிடந்து நாறிக்கொண்டிருக்கும். இந்த உதவியைச் செய்த உங்களுக்கு என்னுடைய நன்றி.

வாழ்க மரணம்!

ரிக்கி"

கடிதத்தைப் படித்துவிட்டுச் சிரித்தாரே ஒரு சிரிப்பு.

"உன்னோட சாவை நானும் வாழ்த்துறேன்டா. காமினி, இந்தக் கொலைகார நாய், நான் போலீஸிலே புடிச்சுக் குடுத்துடுவேன்னு பயந்து வீட்டை விட்டே ஓடிருச்சு. தற்கொலை பண்ணிக்கப் போறானாம். நான் நினைச்சது சுலபமா முடிஞ்சு போச்சு. நீ ஒரு ஏமாளி. அவனுக்காகப் பரிஞ்சு பேசுனியே?"

மாய மயக்கம் போட்டு, மிக மிக ஜாக்கிரதையாக புடவை கசங்காமல் சோபாவில் ஒய்யாரமாய்ச் சரிந்தாள் காமினி. புருஷன் பன்னீர் தெளித்து அவள் மயக்கத்தைப் போக்கியதும், "அய்யோ ரிக்கி நம்மைவிட்டுப் போயிட்டானா.." என்று அழுது நடித்தவள், 'ஆஹா.. எல்லாச் சொத்தும் இப்ப என்னை வந்து சேர்ந்திடுச்சு' என்று உள்ளுக்குள் பரமானந்தச் சிரிப்பு சிரித்தாள். இன்றைக்கே அதை சட்டபூர்வமாக்கிவிட வேண்டும் என்று நினைத்தபடி, "என்னாலே நடக்க முடியலே.. இந்து.. என்னை பெட்ரூமுக்குத் தூக்கிட்டுப் போறீங்களா?" என்று போதைக் கண்களால் கொஞ்சினாள்.

ஆனால் ரிக்கியோ-

வானத்தில் உயர உயரப் பறக்கும் அளவிற்கு சிறகு விரித்துக் கொண்ட மகிழ்ச்சியில், ப்ளூட்டை வாசித்தபடியே ஊருக்கு வெளியே போகும் நெடுஞ்சாலையில் நடந்துகொண்டிருந்தான் ரிக்கி

காமினியை அழைத்துக்கொண்டு எல்லோரும் ஹாஸ்பிடலுக்கு ஓடிய பிறகு நடந்தது இதுதான்- வெந்நீர் போட்டு ரிக்கியின் உடம்புக்கு ஒத்தடம் கொடுத்து, ரத்தக் கசிவையெல்லாம் கல்யாணி துடைத்துவிட்டாள். ராமய்யா தோட்டத்துப் பக்கம் ஓடி, சில மூலிகைச் செடிகளைச் சாறு பிழிந்து அவன் உடம்பெல்லாம் தடவிவிட்டார். கஷாயம் ஒன்றைப் போட்டுக்கொண்டு வந்து ரிக்கியைக் குடிக்கச் செய்தாள் கல்யாணி. அப்போது ராமய்யா சொன்ன உபதேசத்தை உடம்பு வலியோடு உன்னிப்பாகக் கேட்டான் ரிக்கி.

"நான் கும்பிடுற பகவான்தான் அந்தக் காமினியைத் தேளாக்கி உன்னைக் கொட்டச் செய்திருக்கிறார். ஆனா உனக்குக் கடி மட்டும்தான். விஷம் எல்லாம் அவ உடம்பிலே ஏறிடுச்சு. அதனோட பலனை அவளும் உங்க அப்பாவும் கூடிய சீக்கிரம் அனுபவிப்பாங்க. நீ இந்த வீட்டை விட்டுச் சுதந்திரமா வெளி உலகத்துக்குப் போறதுக்குக் காமினிங்குற விஷப் பாம்பை விட்டு பகவான் உன்னைத் தப்பியோட வைக்கிறதா நினைச்சுக்க. இப்ப நான் சொல்றபடி நீ கேக்கணும்." -அதுதான் அந்தக் கடித நாடகம்.

ரிக்கி புறப்படுவதற்கு முன்பு அம்மாவின் படத்தை எடுத்து தனது ஷோல்டர் பாக்கில் வைத்துக்கொண்டான். ராமய்யா வற்புறுத்திக் கொடுத்த ஒரு சிறிய தொகையை ஏற்றுக் கொண்டான். ''பகவான் உனக்கு நல்ல எதிர்காலத்தைக் கொடுப்பான். நல்ல நிலையில் உன்னைப் பார்க்குற வரைக்கும் நான் நிச்சயம் உயிரோட இருப்பேன்" -ராமய்யா அப்படிச் சொன்ன பொழுது ராமய்யா, கல்யாணி இருவரின் பாதங்களையும் தொட்டு வணங்கிவிட்டு அவர்களைப் பிரிந்து செல்வதைப் பொறுக்காமல் புறப்பட்ட ரிக்கியைத் தனியே அழைத்துச் சென்ற ராமய்யா, "ரிக்கி நான் எழுதின ஒரு முக்கியமான லெட்டர் இந்தக் கவருக்குள்ளே இருக்கு. நான் உன்கிட்டே கேக்குற சத்தியம் இது ஒண்ணுதான். நீ ஒரு நல்ல நிலைமையை வாழ்க்கையிலே அடைஞ்சதுக்கு அப்புறம்தான் இதை நீ பிரிச்சுப் படிக்கணும். பகவான் உனக்குத் தந்திருக்கிற நல்ல இசை ஞானம்தான் உன்னை வாழ்க்கையிலே உயர்த்தப்போகுது" என்றவர் அவன் கையில் அந்த சிவப்பு நிறக் கவரைக் கொடுத்தார். "இந்தக் கடிதத்தைப் பொறுத்தவரை நான் சொன்னதை மட்டும் மறக்காதே"- என்று மீண்டும் அழுத்தம் கொடுத்தார்.

'இனி என்ன செய்யப் போகிறோம்' என்ற திட்டமெல்லாம் போடாமல் ரிக்கி என்ற வானம்பாடி புல்லாங்குழலை வாசித்தபடியே ஊட்டிக்குச் செல்லும், குளிர்படர்ந்த சாலையில் நடந்துகொண்டிருந்தபோது... ஒரு செல்ல மழை போடத்



தொடங்கியது. உடனே அவனுக்கு அவன் நீர் பாய்ச்சி வளர்த்த செம்பருத்திப் பூக்கள்தான் நினைவுக்கு வந்தன. அந்தத் தூறல் மழைக்கு அவன் எங்கும் ஒதுங்கவில்லை. நனைவதிலும் ஒரு சுகம். தன்னைச் சுற்றிலும் பல மாதிரியான நறுமணக் காற்று சூழ்ந்துகொள்ள, 'ம்' என்று சுவாசப் பைக்குள் அந்த நறுமணத்தை இழுத்துக்கொண்டே நடக்க - அடிக்கடி மேலிருந்து இறங்கி வரும் லாரி, பஸ்களுக்கு தன்னை ஓரம் கட்டியபடியே பயணத்தைத் தொடர்ந்தபொழுது, சிவப்பு நிறத்தில் மாருதி கார் ஒன்று அவனைக் கடந்தது. ஆனால் நின்றுவிட்டது. ரிக்கி அந்த மாருதியை நெருங்கியபோது கார்க் கதவைத் திறந்த காரின் சொந்தக்காரர், "தம்பி மழையிலே ஏன் நனையறே, உள்ளே வா!" என்றார். அப்படியே செய்தான் ரிக்கி. மாருதி புறப்பட்டது. அவர் வயதான முதியவரும் இல்லை; இளமை மிச்சமுள்ள நடுவயதும் இல்லை என்கிற மாதிரி ஒரு பெரியமனிதத் தோற்றம். அந்த இருட்டில் அவரது லட்சணங்களை அவ்வளவுதான் ரிக்கியால் தெரிந்து கொள்ள முடிந்தது. அவர் கேட்டதற்கு மட்டும் பதில் சொன்னான்.

"தம்பி... நீ ஊட்டி போறியா? குன்னூரா?" இரண்டில் ஒன்று சொல்லவேண்டும். பேசிப்பேசி பழக்கப்பட்ட பெயர் 'ஊட்டி'தான்.

"ஊட்டி சார்."

"நானும் ஊட்டிதான் போறேன்."

"ஊட்டியிலே எந்த இடம்?"

இவன் ஊட்டியைப் பார்க்கப்போவதே இதுதான் முதல் தடவை. என்னத்தைச் சொல்வது?

"என் சிநேகிதன் வீட்டுக்கு சார்."

"உன் ஃப்ரண்டு என்ன பண்றான் ஊட்டியிலே?"

"படிச்சிட்டிருக்கான்."

"எப்படியும் இந்த மழையிலேயும் காத்துலேயும் ஊட்டி போய் சேர்றதுக்குப் பதினோரு மணி ஆயிடும். இந்த ராத்திரியிலே எதுக்கு ஃப்ரண்டுக்குத் தொல்லை குடுக்குறே? என் வீட்டுலே தங்கிட்டு காலையிலே போய்க்க... என்ன சொல்றே?"

"ஓகேசார்..."

"நான் என்னைப் பத்தி உனக்குச் சொல்லலே. நான் ஒரு டாக்டர். எனக்கு 'டைம்' கிடைக்கறப்ப எல்லாம் என்னோட ப்ரெண்ட்ஸைக் கோயம்புத்தூர் வந்து பார்ப்பேன். மறுநாள் காலையிலே திரும்பிடுவேன். இன்னைக்கித்தான் ராத்திரியே புறப்பட்டுட்டேன். என்னமோ தெரியல, இன்னைக்கி நான் போய்ச் சேர்ந்த நேரம்

ஜெனரேஷன்ஸ் அபார்ட்மெண்ட்ஸ்லே (ரிக்கிக்கு புரியும் என்றிருந்தது. ஜெனரேஷன்ஸ் அபார்ட்மெண்ட்ஸ் ரிக்கி வீட்டுக்குப் பக்கத்தில்தானே! ரிக்கியின் அதிகாலை ரசிகர்களின் கூட்டம் அந்த அடுக்குமாடி கட்டிடத்தில்தானே டாக்டர் சார்!) இருந்த என் ஃப்ரண்ட்ஸ், எல்லாருமே ஒரு 'SAD நியூஸ்' பத்தி வேதனைப் பட்டுக்கிட்டிருந்தாங்க. அவுங்க மூடுலே நான் வழக்கம்போலப் பேச முடியலே... அதான் திரும்பிட்டேன். இப்பக்கூட ஒரு பேச்சுத் துணைக்குத்தான் உனக்கு லிஃப்ட் குடுத்தேன். என்னை பரோபகாரின்னு நினைச்சுடாதே" -சிரித்தார்.

இந்த டாக்டர் ஒளிவு மறைவு இல்லாமல் பேசுகிற வேடிக்கையான ஆள் என்று கணித்துவிட்ட ரிக்கி, ஜெனரேஷன்ஸ் அபார்ட்மெண்ட்ஸ்காரர்கள் சோகத்தில் மிதப்பதாக டாக்டர் சொன்னது, தன்னைப் பற்றிய சோகமாகத்தான் இருக்கும் என்பதை எளிதாக நிச்சயப்படுத்திக்கொண்டான். இனிமேல் இவரிடம் ஜாக்கிரதையாகப் பேசவேண்டும் என்றும் தீர்மானித்துவிட்டான்.

"என்ன தம்பி ஒண்ணுமே பேசாம வர்றே?"

"ஒண்ணுமில்லே சார்."

"பேசறதுக்கு எதுவுமில்லேன்னா ஏதாச்சும் பாடேன். அது எந்த மாதிரி பாட்டா இருந்தாலும் சரி. வெஸ்டர்ன், கிளாசிக், இல்லே இந்துஸ்தானி, எதுவா இருந்தாலும் சரி. தெரிஞ்சதைப் பாடு. மியூசிக்னா நான் அதுல பைத்தியம். ஆபரேஷனைக்கூட ஏதாச்சும் ஒரு கீர்த்தனையைப் பாடிக்கிட்டேதான் செய்வேன். அதனால பேஷண்ட்டுக்கு ஒண்ணும் ஆகாது."

மீண்டும் சிரித்தார்.

"சார் நான் ஃப்ளூட் நல்லா பிளே பண்ணுவேன்."

"வெரிகுட் வெரிகுட் நீ எனக்கு அருமையான கம்பெனி. எங்க 'ப்ளே' பண்ணு கேக்கலாம்."

டாக்டருக்கு ஏகமாய் உற்சாகம்.

ரிக்கி புல்லாங்குழலை எடுத்து, தன் உள்ளத்தின் எல்லையற்ற மகிழ்ச்சியை, அடிமைத்தனத்திலிருந்து விடுதலையான கொண்டாட்டத்தை, நரகத்திலிருந்து தப்பி வந்துவிட்ட கோலாகலத்தை, காற்றில் இசையாக எழுப்பினான்.

மயக்கும், போதையூட்டும் அந்த தெய்வீக ராகத்தை ரிக்கி வாசிக்கத் தொடங்கியதும், சங்கீதப் பிரியரான டாக்டர் காரை ஓரங்கட்டிவிட்டு, ரிக்கியின் குழல் இசையில் கண்களை மூடிக் கொண்டு ஊட்டி, க்ளினிக், தனக்குள்ள ஷுகர், மகள், மகளின் பிரச்சினை யாவும் மறந்து ரசிக்கத் தொடங்கிவிட்டார்.



# ௬

கம்பளிப் போர்வைக்குள் புகுந்துகொண்டு விடிந்ததே தெரியாமல் ரிக்கி தூங்கிக்கொண்டிருந்தான். ஆவி பறக்காத, ஆனால் சூடான காபியுடன் டாக்டர் வந்து எழுப்பியதும்தான் கண் திறந்தான். "குட்மார்னிங் ரிக்கி" என்று டாக்டர் சொன்ன பொழுது ரிக்கியின் நரம்புகள் ஜில்லிட்டுவிட்டன. "என் பெயர் உங்களுக்கு எப்படித் தெரியும் டாக்டர்?" -குழறினான். "நான் பல்ஸ் பார்த்தவுடனேயே பேஷண்ட்டோட உடம்புல என்ன வியாதின்னு கண்டுபிடிச்சிருவேன். உன்னோட பல்ஸ், உன் ஃப்ளூட் இசைதான். உன்னுடைய இந்தத் திறமையைப் பத்தித்தான் நான் கோயம்புத்தூர் வரும்போதெல்லாம் ஜெனரேஷன்ஸ் அபார்ட்மெண்ட்ஸ்லெ இருக்கிற என் ஃப்ரண்ட்ஸ் எல்லோரும் அப்படிப் புகழ்ந்திருக்காங்க. பயப்படாதே. காபியைக் குடி. உன்னை உங்க வீட்டுக்கு நான் காட்டிக் கொடுத்திரமாட்டேன். நீ பட்ட கொடுமைகளை நான் கேள்விப்பட்டிருக்கேன். இப்ப எந்த நிலைமையிலே நீ வீட்டை விட்டு வந்திருக்கே, எல்லா விபரமும் எனக்குத் தெரியும். நீ செய்தது நியாயமான காரியம். ஆனா ஒண்ணு- நீ லெட்டர்ல எழுதி வச்சிட்டு வந்த மாதிரி தற்கொலை முயற்சியிலே மட்டும் ஈடுபடக்கூடாது. நீ உயிர்விட்டா உனக்குள்ள இருக்கிற அற்புதமான இசைஞானம் செத்து மடிஞ்சிடும்... அதுக்கு உன்னை அனுமதிக்கமாட்டேன்."

டாக்டர் பேசப்பேச ரிக்கியால் பதில் தர முடியவில்லை.

டாக்டரின் பேச்சு அவனது புல்லாங்குழல் இசைக்குச் சமமாக இருந்தது. அவரது இனிமையான பேச்சே அவருடைய சுந்தன உள்ளத்தை உரைத்துக் காட்டிவிட்டது. கண்களில் ஒதுங்கிய நீரைத் துடைத்தபடி "டாக்டர், நான் சாக விரும்பலே. அந்த எண்ணம் எனக்கு இருந்திருந்தா எங்க வீட்டுலேயே நான் இருந்திருப்பேன், ஏன்னா, சாகுறதுக்குச் சௌகரியமான இடம் எங்க வீடுதான். அந்த வீட்டுல எரியற நெருப்போட சூடு பொறுக்காமத்தான் ஓடிவந்தேன்."

டாக்டர், ரிக்கியின் பறக்கும் தலைமுடியை ஒதுக்கிவிட்டார், அவனுடைய கவலைகளை ஒதுக்கிவிடும் உத்திரவாதத்துடன்.

டாக்டரின் வீட்டோடு அவருடைய க்ளினிக்கும் இணைந்திருந்தது. இங்கே ராமய்யா போல ஒரு சமையல்காரர் பிரான்சிஸ். 'டாக்டர் ஹரிஹரன்' என்று உலோகத் தகட்டில் பெயர் பளிச்சென்று பிரகாசிக்கிற மாதிரி, அந்த வீட்டையும் அவ்வளவு சுத்தமாக வைத்திருந்தார் பிரான்சிஸ். பகலில் வரும் கம்பவுண்டர் மாரா, டாக்டர் ஹரிஹரனால் படித்து ஆளான ஒரு இருளர் இனத்து இளைஞன். இந்த இரண்டுபேரைத் தவிர, அவருக்கு மனைவியோ, பிள்ளைகளோ கிடையாது என்றுதான் முதல் நாள் சாயந்தரம் வரை நினைத்துக்கொண்டிருந்தான் ரிக்கி.

காலை டிபன் முடிந்ததும், "பிரான்சிஸ் துணையோடு ஊட்டியை முடிந்தவரை கொஞ்சம் சுற்றிப் பார்த்துவிட்டு வா. மிச்சத்தை எல்லாம் சாயந்தரம் பேசுவோம்" என்றார் ஹரிஹரன்.

லேக் ஏரியாவைச் சுற்றிப் பார்ப்பதற்குள்ளாகவே இருட்டத் தொடங்கிவிட்டது. "நான் இங்கேதானே இருக்கப் போறேன். மத்த இடங்களை சாவகாசமாகப் பார்த்துக் கொள்ளலாம். நீங்க 'குக்' பண்ணணும் இல்லையா" என்று பிரான்சிஸை இழுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்துவிட்டான் ரிக்கி.

கம்பவுண்டர் மாராவை ரிக்கிக்கு மிகவும் பிடித்துவிட்டது. அவனுடைய சுறுசுறுப்பு, நோயாளிகளிடம் காட்டும் உண்மையான கனிவு, டாக்டர் ஹரிஹரனைத் தன் தந்தைபோலக் கருதி அவன் நடந்துகொள்ளும்விதம் எல்லாமே அலாதிதான். "இன்னைக்கு ராத்திரி ரிக்கி நமக்கு எல்லாம் மியூசிக் ட்ரீட் கொடுக்கப் போறான். மாரா, நீ இன்னைக்கி மட்டும் லேட்டா வீட்டுக்குப் போ" என்று ஹரிஹரன் சொல்லிவிட்டார்.

ரிக்கியின் புல்லாங்குழலிலிருந்து காற்று வருகிறதா, இல்லை மலைத்தேன் சொட்டுகிறதா என்று மயங்கிவிட்டான் மாரா. "ரிக்கி



பாபு, நீங்க ஒரு நாளைக்கு எங்க எடத்துக்கு வந்து எங்க சாதிக்காரங்களுக்கு இதே மாதிரி புல்லாங்குழல் வாசிக்கக் காட்டணும்" என்று ரிக்கியிடம் நூறு தடவை சத்தியம் வாங்கிய பிறகே வீட்டுக்குப் புறப்பட்டான்.

டாக்டர் ஹரிஹரன், தான் வாங்கி வந்த புது ஸ்வெட்டரை ரிக்கியைப் போட்டுக்கொள்ளச் சொன்னார். அதற்கு மேல் ஒரு ஷால். அதற்குப் பாதுகாப்பாக ஒரு கம்பளிப் போர்வை. ரிக்கி, ஊட்டி குளிருக்குப் புதியவன். அவனுக்கு ஸ்வெட்டர் மட்டும் போதுமானதாகத் தோன்றவில்லை.

சாப்பாடு முடிந்து ரிக்கியுடன் உட்கார்ந்து பேசத் தொடங்கினார் டாக்டர் ஹரிஹரன். அப்பொழுதுதான் அவருடைய வாழ்க்கையில் அவருக்குள்ள உறவுகளையும் அந்த உறவுகளால் பிறந்த மன உளைச்சலையும் ரிக்கியால் தெரிந்துகொள்ள முடிந்தது.

"ரிக்கி! நான் தினம் தினம் பூஜிக்கிற தாரக மந்திரம் என்ன தெரியுமா? எதிர்பார்ப்பு இல்லாத அன்பை ஒருத்தருக்கொருத்தர் பரிமாறிக்கொள்ள வேண்டும் என்பதுதான். உலகத்திலேயே மிக மிக விலை உயர்ந்தது அன்பு ஒன்று தான். அதே நேரத்தில் மிகவும் எளிதாகக் கிடைக்கக் கூடியதும் அந்த அன்புதான். அந்த அன்பு கிடைக்கப் பெறாமல் தவிப்போர் ஒரு பக்கம். அந்த அன்பைத் தருவதற்கு மறுப்போர் இன்னொரு பக்கம்." அவர் பேசுவது எல்லாம் தன்னை நினைத்துப் பேசுவதுபோல உணர்ந்தான் ரிக்கி.

"இன்றைய உலகில் நடக்கும் யுத்தங்கள் முதல், குடும்பங்களில் இடம்பெறும் விரிசல்கள் வரை, இந்த இரு தரப்பினருக்கும் இடையே ஏற்படும் மோதல்களுக்கு எல்லாம் இந்த பரஸ்பர பிரச்சினைதான் காரணம். உன்னையே எடுத்துக்கொள். நீ அன்புக்காக ஏங்குகிறவன். உன் தகப்பனோ அந்த எளிய அன்பைக் கொடுக்க மறுக்கிறவர். மற்றவரிடம் அன்பைக் காட்டுவதனால் நாம் எதை இழக்கிறோம்? ஒன்றுமே இல்லை. இதை மட்டும் புரிந்து கொண்டால் ஒவ்வொரு மனிதனும் எவ்வளவு மகிழ்ச்சியாக வாழ முடியும் தெரியுமா? ஒன்றும் வேண்டாம்; ஒருவர் இன்னொருவரைப் பார்த்து, ஆத்மார்த்தமாக- முகத்தில் நிஜமான புன்னகையுடன், "சௌக்கியமா இருக்கீங்களா?" என்று கேட்பதன் மூலம், கேட்கப்படுகிறவர் மனம் எவ்வளவு பூரிப்பும் ஆறுதலும் அடைகிறது! எந்தச் செலவும் இல்லாமல் மற்றவரை நாம் மகிழ்ச்சிப்படுத்த இந்த எளிய அன்பு ஒன்றே போதும். இதை நாம் மறப்பதாலும் மறுப்பதாலும் அத்தனை அதர்மங்களும் மனிதர்களுக்குள் ஊடுருவிக்கொண்டு நிம்மதியைக் கெடுக்கிறது"-

கொஞ்சம் நிறுத்தி, எதையோ நினைத்தபடி மௌனமானார் டாக்டர்.

அவர்மீது பெருகிவரும் மரியாதையால் ஹரிஹரனை மனதிற்குள்ளாக வணங்கினான் ரிக்கி. வேடிக்கையாகவும், எதிலும் ஒட்டுதல் இல்லாதது போலவும் பேசுபவராகத் தோன்றிய டாக்டரா இப்படிப் பித்தளைச் சுவடியில் செதுக்குவது போலப் பேசுகிறார்? வாழ்க்கையின் அர்த்தத்தை முழுமையாகப் புரிந்து வைத்திருக்கும் அந்த மனிதர் மீண்டும் பேசத் தொடங்கியபோது, குருகுலத்து மாணவன் போல பக்தி சிரத்தையுடன் கேட்கத் தொடங்கினான் ரிக்கி. "ரிக்கி.. இதே ஊட்டியில்தான் என் மகள் கீதா குடும்பம் நடத்திக் கொண்டிருக்கிறாள்.."

ரிக்கி ஆச்சரியப்பட்டான். இவ்வளவு நேரம் கழித்து இந்த உண்மையைச் சொல்லும் அவர் குரலில் ஏன் இப்படியொரு சோர்வு?

"ரிக்கி, என் மகளும் அவ புருஷன் சித்தார்த்தும் ஆல்பர்ட் மெமோரியல் கான்வென்ட்டிலே மியூசிக் டீச்சர்சா இருக்காங்க. அவுங்களே தனியா ஒரு ஆர்க்கெஸ்ட்ரா ட்ரூப்பும் வச்சிருக்காங்க. தங்களோட குழுவிற்கு 'ஹார்மோனி' அப்படின்னு பெயர் வச்சிருக்காங்க. ஆனா புருஷன்-மனைவிக்குள்ளே மட்டும் குடும்பத்துல நல்ல ஹார்மோனி இல்லே; 'ட்யூனிங்' சரியில்லே. காரணம், ஏழு வருஷ தாம்பத்திய வாழ்க்கையிலே அவுங்களுக்குக் குழந்தைங்குற சுருதி கிட்டாத துர்பாக்கியம்தான்."

மகளின் வாழ்க்கைப் பிரச்சினையை இசையோடு பொருந்திய வார்த்தைகளைக் கொண்டே சுருக்கமாகச் சொல்லிவிட்டார் டாக்டர் ஹரிஹரன்.

"குழந்தை இல்லாத குறையை என் மருமகன் ஒரு பொருட்டாகவே நினைக்கவில்லை. அதுதான் விசித்திரம். ஆனால், கீதா அந்தப் பிரச்சினையைப் பெரிதுபண்ணிட்டிருக்கா. தன்னை விவாகரத்து செய்துவிட்டு, புருஷனை இன்னொரு திருமணம் செய்துகொள்ளச் சொல்லி வாதாடிப் போராடிக் கொண்டிருக்கிறாள். சித்தார்த் மனைவியை எதிர்த்துப் போராடுகிறார். பார்த்தாயா ரிக்கி, நான் உன்கிட்டே சொன்னதைவிட அன்பிற்கும் பாசத்துக்கும் வித்தியாசமான இன்னொரு பரிமாணமும் இங்கே இருக்கிறது. புருஷனும் மனைவியும் ஒருவரையொருவர் அதீதமாக நேசிப்பதன் விளைவுதான் இன்றைக்கு அவர்களுடைய வாழ்க்கையிலே வேதனையைத் தேவையில்லாமல் திணித்து விட்டிருக்கிறது. "இன்னும் ஒருவாரத்திற்குள் எனக்குக் கணவனிடமிருந்து விடுதலை வேண்டும்; இல்லையென்றால் நான்



தற்கொலைக்குத் தயாராகிவிடுவேன்" என்று கீதா என்னையும் சித்தார்த்தையும் கெடு வைத்து பீதியடைய வைத்திருக்கிறாள்."

அந்த ராத்திரி முழுதும் ரிக்கியால் தூங்க முடியவில்லை. ஒவ்வொருத்தர் வாழ்க்கையிலும் இயற்கை எத்தனை விதமான சோதனைகளையும், வேடிக்கைகளையும், விநோதங்களையும் நிகழ்த்திக்கொண்டிருக்கிறது. பெண் குழந்தை என்றால் பெற்றவர்களே சிசுஹத்தி செய்வதும், அதிகம் பெறக்கூடாது என்று அரசாங்கமே மக்களை மண்டியிட்டுக் கெஞ்சுவதும் இன்று சாதாரணம். ஆனால் இந்த டாக்டரின் மகள் குடும்பத்தில் குழந்தை இல்லாத குறை அவர்களின் வாழ்க்கையை இரண்டாகக் கிழித்தெறியப் போகிறது. அன்புக்கு அத்தனை விளக்கம் தந்தாரே டாக்டர். ஆனால் அந்த அன்பிற்கும் பலவீனம் உண்டா? இருக்கவே முடியாதே. ஹரிஹரன்தான் எத்தனை ஆளுமையோடு அன்பு என்பதற்கான பதத்தின் வலிமையை எடுத்துச் சொன்னார்.

'டாக்டரின் மகளும் அவள் புருஷனும் பாசத்தில் பக்குவப்பட்ட மனிதர்கள் என்பது உண்மையாக இருக்கும் பட்சத்தில் அவர்கள் பிரியமாட்டார்கள். அது நடக்கவும் கூடாது' ரிக்கி தன் வலதுகையால் நெஞ்சில் தட்டிக்கொண்டான் ஒருவித பிரார்த்தனையோடு.

அப்பா இந்திரஜித் நினைவு இப்போது குறுக்கிட்டது. இங்கு வந்தபிறகு அந்த சர்வாதிகாரியின் ஞாபகம் இப்பொழுதுதான் வருகிறது. இந்திரஜித்தை 'அப்பா' என்று நினைக்கக்கூட ரிக்கியின் மூளைக்குக் கசப்பாக இருந்தது. உடனே நினைவுகளின் பாதையை ராமய்யாவிற்குத் திருப்பினான்.

அந்தச் சிவப்புக் கடித உறை!? அதைப் பிரித்துப் படிக்க இன்னும் எத்தனை காலம் ஆகும்? அந்தக் கடிதத்தில் அப்படி என்ன ஒளிந்திருக்கிறது?

அதை இப்பொழுதே படித்தால் என்ன? வேண்டாம். அன்பான ராமய்யா ஏதோ நல்ல காரணத்தோடும், நோக்கத்தோடும்தான் தனக்கு அப்படியொரு காலக்கெடுவை நிச்சயத்திருக்க வேண்டும். ரிக்கியின் மனத்தில் எழும்பிய சிற்றலைகள் ஓய்ந்தன. ஆனால், கீதா, சித்தார்த் பற்றிய சிந்தனை மட்டும் நண்டுபோலக் குடைந்துகொண்டிருந்தது.

தூக்கம் வராமல் புரண்டு புரண்டு களைத்தவன் விளக்கைப் போட்டான். எழுந்து வந்து மேஜை முன்னால் உட்கார்ந்தான். நீண்ட நேரம் எதைப்பற்றியோ தீவிர எழுத்தாளன் மாதிரி யோசித்துக்கொண்டிருந்தான். ஒரு வெள்ளைத்தாள், பேனா, கடித உறை- இப்பொழுது அவனுக்கு மிக அவசரமாகத் தேவைப்பட்டது.

# 7

ஆல்பர்ட் மெமோரியல் கான்வென்ட் - வெள்ளைக்காரத் துரைகளின் காலத்தில் கட்டப் பட்ட பழமையான, ஆனால் கம்பீரமான தோற்றம் கொண்டிருந்தது. அந்த மாலை நேரத்தில்- கான்வென்ட்டின் உள்ளே நீள வாட்டான அழகிய ஹால்- பனிப்புகை படர்ந்த ஜன்னல் கண்ணாடி வழியாக- அந்தப் புகைப் படலத்தைக் கையால் துடைத்தபடி, வெளியில் நின்றவாறு தங்களை ரிக்கி என்ற ஒருவன் பார்ப்பது தெரியாமல், உள்ளே- கீதாவும் சித்தார்த்தும் மாணவர்களுக்கு வயலின் கற்றுக்கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள், அதீதமான சிரத்தையுடன்.

டாக்டர் ஹரிஹரன் வீட்டில் ரிக்கி பார்த்த ஃப்ரேம் போட்டு வைத்திருந்த போட்டோவில், திருமணக் கோலத்தில் அந்த இருவரும் எப்படி இருந்தார்களோ அப்படியேதான் இப்பொழுதும் மலர்ந்த பூக்களை நினைவூட்டும் முகத்தோடு காட்சி தருகிறார்கள் கீதாவும் சித்தார்த்தும். கீதா நல்ல சிவப்பு. ஊட்டிக் குளிர் அவள் முகத்திற்கு ஒருவிதக் கரும் பொன்னிறத்து நிறத்தைப் பூசியிருந்தது. அவளின் அழகிய முகத்திற்கு கூடுதல் வசீகரம் சேர்த்தது அவளின் புன்னகை. குழந்தைகளிடம் சிரித்தபடியே அவள் திருத்தம் கூறி அவர்களை வயலின் வாசிக்கக் கற்றுக் கொடுக்கும் நேரத்தில்- மனைவியை வாஞ்சையுடன் பார்க்கும்



சித்தார்த், உள்ளத்தில் கருதி பேதம் இல்லாத ஒரு அபூர்வ புருஷனாகத் தெரிகிறான். கூர்மையான நாசியின் கீழ் திருத்தப்படாத அடர்த்தியான மீசை, அளவான உயரம். கீதாவைப்போல அவனுக்கும் அழகான புன்னகை முகம். ஏழு வயது முதல் பதினாறுவரை அடங்கிய மாணவர்களும், மாணவிகளும் அறுபது பேர் இருப்பார்கள். மூத்தவர்களை சித்தார்த் கவனித்துக்கொள்கிறார். சின்னவர்கள் மத்தியில் கீதா. எல்லோர் கையிலும் வயலின்கள். கரும்பச்சை யூனிஃபார்மில், அத்தனைபேரும் உயரத்திற்கேற்றபடி வரிசைப்படுத்தப்பட்டு, இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள், இசையால் ஒன்றாகப் பிணைக்கப்பட்ட மாணவர்கள். சின்னக் குழந்தைகள் யாராவது அவள் சொல்லிக் கொடுத்தபடி வயலின் நரம்புகளை மீட்டிவிட்டால் கீதா ஓடிப்போய் தூக்கி முத்தமிட்டுப் பாராட்டுகிறாள். சித்தார்த்தும் போட்டி போட்டபடி மனைவியிடமிருந்து அந்தக் குழந்தையை வாங்கிக்கொண்டு வயலினை வாசித்துக்காட்டச் சொல்கிறார்.

ரிக்கி, அவர்களின் அப்பழுக்கற்ற நேசத்தைப் பார்த்துவிட்டு, 'இவர்களா பிரியப்போகிறார்கள்' என்று குழப்பமடைகிறான்.

இப்பொழுது- கீதாவும் சித்தார்த்தும் சேர்ந்து தங்களின் வயலின்களைக் கொண்டு ஆங்கிலத் தாலாட்டுப் பாடலின் ட்யூன் ஒன்றை இணைந்து வாசித்துக் காட்டுகிறார்கள் மாணவர்களுக்கு. ரிக்கியின் காலில் அந்த நேரம் தேள் ஏதாவது கொட்டியிருந்தால்கூட சொரணை இருந்திருக்காது. அந்தத் தம்பதி வாசித்த இசையின் மயக்கத்தில் உருகிப்போய் தன் கண்களை மூடிக் கொண்டான். 'எத்தனை தேன்கூடுகள் குடிகொண்டிருக்கிறதோ இவர்களின் இசையில்' என்று கவிதையாய் ரசிக்கத் தொடங்கிவிட்டான். திடீரென ஒரு சந்தேகம். ஒரு வயலினா? இரண்டு வயலின்களா? இரண்டுதான். கீதாவும் சித்தார்த்தும் சேர்ந்துதான் வயலின் நரம்புகளை மீட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் கண்ணை மூடிக்கொண்டு கேட்டால் ஒருத்தர் மட்டுமே வாசிப்பதுபோல சத்தியம் பண்ணத் தோன்றுகிறது. இசையின் மந்திரத்தில் இருவர் ஒருவராக இணைந்துவிடும் இவர்கள், வாழ்க்கைப் படகில் மட்டும் எதிரும் புதிருமாக உட்கார்ந்திருக்கிறார்கள் என்றால் எப்படி நம்ப முடியும்? முடியவே முடியாது. இல்லை- டாக்டர் மிகைப்படுத்தியிருக்கிறார். அல்லது- தன்னிடம் வேடிக்கை காட்டியிருக்கிறார். 'நாம் சொல்வதைக் கேட்டு இந்த ரிக்கிப் பயல் ஒருநாள் ஏமாற வேண்டும்.' என்று திட்டம் போட்டிருக்கிறார். ரிக்கி புரிந்துகொண்டான்.

மியூசிக் கிளாஸ் முடிந்துவிட்டது. மாணவர்கள்

புறப்பட்டுவிட்டார்கள். கீதாவும் சித்தார்த்தும் தங்கள் வயலின் பெட்டிகளை எடுத்துக்கொண்டு வெளியே வரப்போகிறார்கள். "எப்படியும் அவர்களிடம் பேசிவிட வேண்டும்" என்ற ஆசை ரிக்கிக்கு. அந்த ஹாலின் வெளிப்பக்கத்துச் சுவரின் மூலையிலிருந்து அவர்கள் எப்பொழுது ஹாலுக்குள்ளிருந்து வெளியே வருவார்கள் என்று எதிர்பார்க்கத் தொடங்கினான்.

'அவர்கள்' வந்துவிட்டார்கள். "என்ன பேசலாம், எப்படித் தொடங்கலாம்" என்று ரிக்கி ஒத்திகைப் பார்ப்பதற்கு முன், அவர்கள் இருவரும் வெளி கேட்டை நெருங்கிவிட்டார்கள். அக்கம்பக்கத்தில் யாருமில்லை.

ஒரு ஆட்டுக்கூட்டம் மட்டுமே கான்வென்ட்டை ஒட்டிய அமைதியான அந்த ரோடில் போய்க்கொண்டிருந்தது. வேகமாக பாதங்களை எடுத்து வைத்தான் ரிக்கி. அவர்களை நெருங்கியும் விட்டான்.

"முடியவே முடியாது. அந்த ரெஸ்டாரெண்ட் மெனு ஐட்டம் எதுவுமே எனக்குப் பிடிக்காது. வீட்டிலே வெஜிடபிள்ஸ் இருக்கு. கேக், ஃப்ரூட்ஸ் இருக்கு. எனக்குப் பிடிச்சதை நான் சமைச்சுக்குவேன்.."

"ப்ளீஸ் கீதா. நீ இன்னைக்குக் களைப்பாத் தெரியறே. அதனால் வீட்டுக்குப் போய் சமைக்கிற சங்கடம் எதுவும் உனக்கு வேண்டாம்."

"சங்கடம்னு நான் சொன்னேனா? என்னைக்குச் சொன்னேன்? கமான், சொல்லுங்க."

"எதுக்கு இப்படி ஆத்திரப்படுறே.. உனக்குச் சங்கடம்னு நீ என்னைக்குமே சொன்னதில்லே. கீதா, உனக்கு 'ரெஸ்ட்' வேணாமா, அதுக்காகத்தான் சொன்னேன்."

"நான் எனக்கு ரெஸ்ட் வேணும்னு உங்களைக் கேட்டேனா? என்னைக்குக் கேட்டேன், சொல்லுங்க."

"இல்லே.."

"அப்புறம் ஏன் தேவையில்லாத வார்த்தைகளை யூஸ் பண்றீங்க?"

"இப்ப நான் என்ன சொல்லிட்டேன்? ஏன் திடீர் திடீர்னு இப்படி டென்ஷன் வந்திருது உனக்கு? "

"ஆமா எனக்கு டென்ஷன்தான். உங்க மாதிரி எனக்குப் புத்தரா இருக்கத் தெரியாது. சாந்தம், கருணை, இரக்கம் எதுவுமே என்கிட்டே இல்லை."



"ப்ளீஸ் கீதா, கூல்டௌன்."

"நோ.. நோ.. இத்தனையும் என்கிட்டே கிடையாதுன்னு உங்களுக்குத் தெரியும்லே? அப்புறம் ஏன் டைவர்சுக்கு சம்மதிக்க மாட்டேங்குறீங்க? சொல்லுங்க, கமான் டெல் மீ."

ரிக்கியால் மேற்கொண்டு பின்தொடரவா முடியும்? அவன் எப்பொழுதோ அதிர்ச்சியில் வார்ப்பெடுக்கப்பட்டு இறுகிப்போய் நின்றுவிட்டான். வயலின் தந்திகள் அறுந்து சுருண்டு அவன் முகத்தில் அறைந்துவிட்ட மாதிரி சிலிர்த்து விட்டான்.

மாணவர்களிடம், இணைந்து- இழைந்து- ஒன்றாய்- ஒருவராய் இசைத்தவர்கள், இப்போது இரண்டாய்ப் பிளந்து, எதிராய்- பிசகாய்- கசப்பாய், சுருதிபேதம் கொண்டு அபஸ்வரமாய் ஒலிப்பதை அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

இதுதான் உண்மையா?

இந்த இருவரிடத்திலும் அன்பு என்பது செல்லரித்துக் கொண்டிருக்கிறதா?

இல்லை, இரட்டை வேஷம் போடுகிறதா?

-ரிக்கியால் தீர்மானிக்க சக்தி இல்லை.

ஹாலின் உள்ளே மாணவர்களுடன் இருந்தபோது, கணவன்-மனைவியின் அன்பான செயல்களில் எந்தவிதமான போலித்தனத்தையும் அவன் காணவில்லை.

இப்பொழுது அவர்கள் பேசிக்கொண்டு போகும் விதத்திலிருந்து டாக்டர் ஹரிஹரன் சொன்னதும் பொய் இல்லை என்ற முடிவுக்குத்தான் வந்தான் ரிக்கி.

"அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்" என்றார்கள். அது தவறு. அதற்கும் ஒரு உச்சவரம்பு தேவை. எல்லைக்கோடு அவசியம்.

கீதாவும் சித்தார்த்தும் அந்த வரம்பைத் தாண்டிவிட்டார்கள். 'தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்கிறோம்' என்பதை அவர்கள் உணரவில்லை. குழந்தைக்கு ஏங்கும் அவர்களே இப்பொழுது குழந்தைகளாகிவிட்டார்கள்.

அதுதான் உண்மை.

இந்தப் பெரிய குழந்தைகளின் சண்டையைத் தீர்க்க குழந்தைத்தனமான ஒரு வைத்தியம்தான் சரியானது என்று குறித்துக்கொண்டான் ரிக்கி. முந்திய இரவு, அவன் வேடிக்கையாக ஜோடனை செய்த நாடகம், நிச்சயம் நல்ல பலன் தரும் மருந்தாக இருக்கும் என்று நினைத்தபடி தன் பாண்ட் பாக்கெட்டைத் தொட்டுப் பார்த்தான். 'அந்தக் கடிதம்' பத்திரமாக இருந்தது.

டாக்டர் ஹரிஹரனின் பயம் நிறைந்த கேள்விக்கும் சந்தேகத்திற்கும் சமையல்காரர் பிரான்சிஸ் பதில் சொல்ல முடியாமல் தவித்தார். ரிக்கியின் புல்லாங்குழல் வாசிப்பைக் கேட்பதற்காகவே வழக்கத்தைவிட காலை எட்டு மணிக்கே வேலைக்கு வந்துவிட்டான் கம்பவுண்டர் மாரா. டாக்டரின் பரபரப்புக்கு அவனாலும் பதில் தர முடியவில்லை.

"என்ன மாரா, உனக்கும் தெரியலேங்குறே நீ கேட்டுக்கிட்ட மாதிரி உங்க குடியிருப்புக்கு ரிக்கி போயிருப்பானோன்னு ஒரு சந்தேகம் இருந்திச்சு. இப்ப நீயும் கையை விரிக்கிறே. நேத்து சாயந்தரம் ஊரைச் சுத்திட்டு லேட்டா வந்தான் ரிக்கி. ராத்திரி தூங்கப்போறதுக்கு முன்னால, "நான் காலையில சீக்கிரமா எந்திரிக்கனும் அங்கிள்"ன்னு எங்கிட்டே சொன்னான். நான் அதை ஒண்ணும் பெரிசா எடுத்துக்கலே. ஏதோ காலையிலே பத்துமணிங்கிறதுக்கு பதிலா எட்டு மணிக்கு எந்திரிச்சுக்கப் போறான்னுதான் நினைச்சேன். இன்னைக்கிக் காலையிலே பாத்து ஆறு மணிக்கே ஒரு ஆக்ஸிடெண்ட் கேஸ் வந்து நான் எந்திரிச்சுட்டேன். ஆனா ரிக்கி? அவன் பெட்டுல இல்லே. அதனால்கூட எனக்கு ஷாக் இல்லே. அவனோட லக்கேஜ் பையும், புல்லாங்குழலும் அவன் அறையிலே இப்பக் காணோம். ரூம் பூரா தேடிட்டேன்."

மாரா, டாக்டர் போலவே இப்பொழுது பயந்துவிட்டான். தங்களை விட்டு ரிக்கி நிரந்தரமாகப் பிரிந்து போய்விட்டானா? ஏன்? எதற்கு? தவித்துவிட்டான்.

"எனக்கு எதுவுமே புரியலையே" என்று தன் பக்கத்தில் இருக்கும் இருவரையும் பரிதாபமாகப் பார்த்தார் ஹரிஹரன்.

"டாக்டர், நான் பஸ் ஸ்டாண்டு பக்கம் போய்த் தேடிட்டு வர்றேன். தைரியமாக இருங்க. ரிக்கி இந்த ஊட்டியை விட்டு எங்கேயும் போயிருக்க முடியாது. அதை மட்டும் என்னால் நிச்சயம் சொல்ல முடியும். எங்க சாதிக்காரங்களுக்கு வேட்டை நாய்களைவிட மோப்பம் பிடிக்கிற சக்தி ரொம்ப ஜாஸ்தி. நான் ரிக்கியைக் கண்டுபிடிக்காம விடமாட்டேன்" என்று சபதம் செய்கிற தோரணையில் நம்பிக்கையோடு சொன்ன மாரா, டாக்டர் தன் முக அசைப்பால் தந்த அனுமதியுடன் அவசரமாகப் புறப்பட்டு விட்டான்.

அப்பொழுதுதான் அன்றைக்கு வந்திருந்த காலைப்பேப்பரை எடுத்துப் பார்த்தார் டாக்டர். அதைப் படிப்பது கூட தன்னுடைய மனக்குழப்பத்திற்கு மாற்று மருந்தாக இருக்கும் என்ற நினைப்போடுதான் படிக்கத் தொடங்கினார்.



முதல் பக்கத்தில் தலைப்புச் செய்தி வரிகளைப் பார்த்துவிட்டு, கண்களைத் தாழ்த்தி, கீழே உள்ள ஒரு புகைப்படத்தையும் அதை ஒட்டிக் காணப்பட்ட செய்தியையும் படித்தார். படித்ததும் வெடித்தார், "இப்படியும் ஒரு தகப்பனா, ரிக்கிக்கு?"- வெடித்த பின்னால் சிரித்தார்.

"பிரான்சிஸ், இங்கே பாத்தியா வேடிக்கையை.. இந்தப் படத்திலே உருத்தெரியாம கிடக்கே ஒரு பொணம்.. இது யாரு தெரியுமா? நம்ம ரிக்கி.."

அவர் சிரியோ சிரியென்று சிரிக்க. பிரான்சிஸ் மட்டும் விபரம் புரியாதவனாய் 'என்னங்கடா இது கூத்து' என்கிற மாதிரிப் பார்த்தான். "அழுகிப்போய் அடையாளம் காட்ட முடியாத நிலையில் கிணறு ஒன்றில் கண்டெடுத்த ஒரு பிணத்தைத் தன் மகன் 'ரிக்கி' என்று சத்தியம் பண்ணி போலீஸிடம் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார் ரிக்கியோட அப்பா" என்று டாக்டர் சொன்னபொழுது, "என்ன சார் அக்கிரமமா இருக்கு. எந்த அடையாளமும் ஆதாரமும் இல்லாம அவர் எப்படி இந்த மாதிரிச் சொல்ல முடியும்?" -பிரான்சிஸ் கேட்டான்.

"அந்த மனுஷனுக்குள்ளே இருக்கிற வக்கிரகுணமும், பேய்த்தனமும்தான் நீ கேக்குற அடையாளமும் ஆதாரமும். இப்பேர்ப்பட்ட பணக்காரன் கடவுள்மேலகூட பொய்க் கம்ப்ளெய்ண்ட் குடுப்பானுங்க. நம்ம போலீசும் அந்தக் கம்ப்ளெய்ண்ட்டை வாங்கிக்கிட்டு, "எந்தக் கடவுளுக்கு? விநாயகரா, பெருமாளா, சிவனா, பார்வதியா, முருகனான்னு கம்ப்ளெய்ண்ட்டுலே தெளிவா குறிப்பிடணும். அப்பத்தான் நாங்க வலை விரிச்சு அமுக்க சௌகரியமா இருக்கும்னு"னு சொல்லுவாங்க. நீ என்ன பிரான்சிஸ், செத்தவன் எல்லாம் உயிரோட வந்து வாக்குச் சாவடியிலே ஓட்டுப்போடுற இந்தக் காலத்துல போய் இந்த மாதிரிக் கேள்வியெல்லாம் கேட்டுக்கிட்டிருக்கே? இந்த நியூஸ்லேயும் நான் இப்பச் சொன்ன மாதிரியே போலீசும் கோமாளித்தனமா உளறியிருக்கு பாரு. "இது கொலையா, தற்கொலையா என்று போலீஸ் ஆராய்ந்து வருகிறது." எப்படி இருக்கு? செத்தது ரிக்கிதான்னு அப்பன்காரன் சொன்னதும், போலீஸ் அப்படியே மரத்துலேயிருந்து பறிச்சுப் போடுற மாங்காய்களைக் கோணிப்பையிலே வாங்கிக்கற மாதிரி ஏத்துக்கிட்டாங்க. இப்ப அந்த சாவுக்கான காரணத்தைத் தேடுறாங்களாம். அதாவது, அந்த மாங்காயை ஊறுகாய் போடலாமா? இல்லே, பழுக்க வைக்கலாமான்னு யோசிக்கிற மாதிரி."

சொல்லிவிட்டு மீண்டும் சிரித்த டாக்டர் ஹரிஹரன், "இந்த நியூஸைப் படிக்கிறதுக்குக்கூட அருவருப்பா இருக்கு. என் மகனோட பிரச்சினை இப்ப எனக்கு மறந்து போச்சு. ரிக்கி மாதிரியான வைரியத்தைப் பெத்துட்டு, மனுஷனா இருக்குற எந்தத் தகப்பனாச்சும் இப்படி அநாதைப் பொணமாகக் கிடக்கிற ஒன்னைப் பார்த்து 'இது என் மகன்தான்'னு சத்தியம் செய்வானா?"

திடீரென மறுபடியும் ரிக்கியின் கவலை டாக்டருக்கு.

"இந்த ரிக்கி எங்கே போயிருப்பான்" -புலம்பத் தொடங்கினார்.

"மாரா போயிருக்கான். எப்படியும் மோப்பம் பிடிச்சு ரிக்கியைக் கொண்டாந்து சேர்த்திடுவான் பாருங்க" பிரான்சிஸ் தைரியத்தைக் கொடுக்க, டாக்டர் வேறு கண்ணோட்டத்தில் பயப்படத் தொடங்கினார்.

"பிரான்சிஸ், இப்ப ரிக்கி திரும்பி வர்றான்னு வச்சுக்க. இனிமேதான் அவன் ஜாக்கிரதையா இருக்கணும். ரிக்கி உயிரோட இருக்கிறது அவனோட அப்பாவுக்குத் தெரியவே கூடாது. ஏதோ ஒரு பிணத்தைக் காட்டி 'இது என் மகனேதான். சந்தேகமே இல்லை'ன்னு சத்தியம் பண்ண தகப்பன், ரிக்கி உயிரோட இருக்கிறது தெரிஞ்சா போதும். ரிக்கியைத் தேடி வந்து கொலைபண்ணி, அதையும் உலகத்துக்குத் தெரியாமப் பண்ணிடுவான். இரக்கமில்லாத ஒருத்தன், கட்டிக் கிடக்கிற புறாவைக்கூட புலியைக் கொல்ற வெறியோடதான் வேட்டையாடுவான். பூவைப் பறிக்கிறதைக்கூட ஒருத்தனின் கழுத்தைச் சீவுற மாதிரித்தான் கருவிக்கிட்டு செய்வான். அந்தக் கொலைகாரன் கண்ணுலே நம்பகிட்டே இருக்குற ரிக்கி தென்படவேகூடாது. ரிக்கியை அந்தப் படுபாவி தீர்த்துக் கட்டிடுவான்."

சொல்லிக்கொண்டே போன ஹரிஹரனின் முகம் அடர்த்தியான வேதனையைக் காட்டியது. பயத்தில் அவர் முகம் வெளிறத் தொடங்கியது.



# 8

பெரும் புயலின் தாக்குதலால் கடல் அலைகள் திமிறிக் கொண்டு சித்தார்த்தின் பங்களாவினுள் பொங்கித் திரண்ட மாதிரியும், அப்படிக் கொந்தளிக்கும் அலைகள் சித்தார்த்தைப் புரட்டி எடுக்கிற மாதிரியும், அது போதாதென்று ஒரு பயங்கர சுறா வாயைப் பிளந்துகொண்டு சித்தார்த்தைச் சுற்றிச் சுற்றி வருவது போன்றதுமான நிலைமையைத் தோற்றுவித்து விட்டான் ரிக்கி. அய்யோ பாவமாய் அந்த வீட்டிற்குள் நுழைந்த ரிக்கி, மௌனமாய்க் கொடுத்த சித்தார்த்திடம் ஒரு கடிதம்தான் இப்பொழுது சித்தார்த்தின் இல்லத்தில் எழுப்பியிருக்கும் அதிர்ச்சி அலைகள்.

ஆத்திரத்துடன் ரிக்கியை வெளியே தள்ளிக் கதவைச் சாத்தப் பார்க்கிறார் சித்தார்த். நீதா தடுக்கிறாள். "ராஸ்கல்... Liar... Crooke... Black Mailer... நீ எத்தனை பேரை இந்த மாதிரி ஏமாத்தியிருக்கே. இப்பவே போலீஸைக் கூப்பிட்டு உன்னை என்ன செய்கிறேன் பார்" என்று கூச்சலிட்ட சித்தார்த் ரிஸீவரை எடுக்கவிடாமல் நீதா மறிக்கிறாள். "நீதா இந்தத் திருட்டு நாயை நம்பாதே. இந்த லெட்டர்லே எழுதியிருக்கிறதெல்லாம் பொய்... பொய்... படம் போட்ட பொய்... கட்டுக்கதை..." வீடே அதிரக் கத்துகிறார் சித்தார்த்.

"ஆனா நீங்க சொல்ற பொய், கட்டுக்கதை எல்லாமே நிஜமா இருந்தா என்ன தப்பு?" -கீதா தீர்க்கமாய்ச் சொல்கிறாள்.

"மேடம், சார்... நீங்க ரெண்டுபேரும் ஏன் சண்டை போட்டுக்கறீங்க? நான் ஒரு போஸ்ட்மேன் மாதிரி. ரொம்பக் காலத்துக்கு அப்புறம், நேரமும் ஞாபகமும் சேர்ந்து வந்து, இந்த லெட்டரை உங்கக்கிட்டே கொண்டாந்து குடுத்தேன். அவ்வளவு தான். இந்த லெட்டர்ல எழுதியிருக்கிறது என்ன ஏதுன்னு இதுவரைக்கும் எனக்குத் தெரியாது" -ரிக்கி கெஞ்சுகிறான்.

"இல்லை... இல்லை... இதெல்லாம் உன்னோட நாடகம்" சித்தார்த் சீறுகிறார்.

"சார்... இந்தக் கடிதத்தைக் காட்டி உங்க வீட்டுலே நான் இடம் பிடிக்க வரலே. உங்ககிட்டே எந்த உதவியும் கேக்கறதுக்கு நான் ஆசைப்படலே. ஆத்திரப்பட்டு என் மேல அபாண்டமாப் பழி சுமத்தாதீங்க. இதோ நான் போய்க்கிட்டேயிருக்கேன். இந்தக் கடிதம் பற்றி வெளியே யார்கிட்டேயும் நான் எதுவும் சொல்லமாட்டேன். ஐ பிராமிஸ்... கவலைப்படாதீங்க. நான் வர்றேன், குட்பை."

ரிக்கி தன் தோள்பை, ஃப்ளூட்டுடன் புறப்படுகிறான்.

ஓடி வந்து தடுக்கிறாள் கீதா.

"ரிக்கி, நான் உன்னை நம்புறேன். இந்தக் கடிதத்தை நம்புறேன். எங்களை விட்டுப் போகாதே."

"மன்னிச்சுக்குங்க மேடம். நான் வந்த வேலை முடிந்தது. உங்கள் குடும்பத்துலே அநாவசியமான குழப்பத்தை உண்டாக்க நான் தயாரா இல்லே."

கதவைத் திறந்துகொண்டு வெளியேறுகிறான் ரிக்கி. "அவனைக் கூப்பிடுங்க ப்ளீஸ்... ப்ளீஸ்..." புருஷனைக் கண்ணீரோடு கெஞ்சுகிறாள் கீதா.

"என்ன கீதா, அவனை நீயுமா நம்புறே...?"

"அதிலே உங்களுக்குச் சந்தேகமே வேண்டாம். இத்தனை காலமா நான் ஒரு தாய்ங்குற அந்தஸ்தை அடைய முடியாமப் போனதுக்கு, நீங்க ஒரு பெண்ணுக்கு செஞ்ச துரோகம்தான் காரணம்ங்கிறது இப்பத் தெரியுது."

"கீதா, நான் யாருக்கும் சொப்பனத்துலகூட துரோகம் நினைச்சதில்லே..."

"இப்படித்தான் தன்னைத் தேடிவந்த சகுந்தலைகிட்டே துஷ்யந்தனும் சொல்லியிருக்கான். கல்யாணத்துக்கு முன்னாலே, ஆண்கள், தங்களை அறியாம தூக்கத்திலே நடக்கிற வியாதியஸ்



தனைப் போல, சில தவறுகள் செய்றது சகஜம்தான்."

"கீதா... கீதா... நான் சொல்றத நீ நம்பமாட்டியா? இல்லாத ஒண்ணை நீயா நிச்சயம் பண்ணிக்கிட்டு என்னை குற்றவாளியாக்கிப் பேசுறியே?"

"அதான் சொன்னேனே... அறியாமல் செய்த வாலிப காலத்துத் தவறுகள் மன்னிக்கக்கூடாத பாவங்கள் இல்லே... அதுக்குப் பரிகாரம் தேடிக்கிறதுக்கு எல்லாம், பல பேருக்கு, அவங்க கல்யாணத்துக்கு அப்புறம் எந்தச் சந்தர்ப்பமும் வாய்க்கிறதில்லே. ஆனா ரிக்கி மூலமா அந்த அதிர்ஷ்டம் உங்களுக்குக் கிடைச்சிருக்கு. அதுக்காக சந்தோஷப்படுங்க."

"கீதா, அவன் என் மகன் இல்லே கீதா."

"எந்த ஒரு ஆம்பிளையும், உங்க மாதிரித் தங்களோட கடந்தகால சறுக்கலை, உடனே ஏத்துக்கமாட்டாங்க."

"அந்த மாதிரி ஒருத்தன் நான் இல்லை கீதா."

"ஏன் இப்படித் தவிக்கிறீங்க? இதுக்காக நான் உங்களை வெறுக்கல. இப்பத்தான் உங்களை அதிகப்படியா நேசிக்கிறேன். சிறுபிள்ளைத்தனமா உங்களைவிட்டு நிரந்தரமாப் பிரிய நினைச்ச என்னையே இப்ப தடுத்து நிறுத்திட்டான் இந்த ரிக்கி. இனிமே என்னைக்கும் உங்களை விட்டு பிரியமாட்டேன். இது நிச்சயம். ரிக்கியைக் கூப்பிடுங்க."

"போலீஸை வேணும்னா கூப்பிடுறேன்."

"அப்படியா, கூப்பிடுங்க... நான் ரிக்கிக்குச் சாதகமாத்தான் பேசுவேன். 'ஒரு மனைவியே, தன் கணவன் யாருக்கோ பெற்ற பிள்ளையை ஏத்துக்கத் தயாரா இருக்கா'ன்னு தெரியும்போது என் கட்சிதான் ஜெயிக்கும்."

"ஆனா, நான் உன்கிட்டே ஆதாரம் கேட்பேன்."

"ஆதாரமா? நீங்களும் நானும் காற்றைச் சங்கீதமாக்கி கேக்குறவங்களை மயங்கச் செய்கிறோமே, அதுக்கு என்ன ஆதாரம்? அந்தக் காற்றைக் கையிலே பிடிச்சுக் காட்டி, இதுதான் எங்க இசைக்கு ஆதாரம்னு நம்மாலே சொல்ல முடியுமா? அதை விடுங்க. இத்தனை வருஷக் குடும்ப வாழ்க்கையிலே நான் உங்களுக்குத் துரோகம் பண்ணியிருக்கேன்னு உங்ககிட்ட ஒருத்தர் சொல்லலாம். அதுக்கு, நான் பத்தினிதான், உத்தமிதான்னு நிரூபிக்கிறதுக்கு என்கிட்டே என்ன ஆதாரம் இருக்கு? சொல்லுங்க."

அப்பொழுதுதான் யாரும் எதிர்பார்க்காத அற்புதமான அந்த இசைச்சாரல் அடிக்கத் தொடங்கியது. கண்ணாடி ஜன்னலை

நோக்கி ஓடுகிறாள் சீதா. அங்கே, தங்கள் வீட்டுக் காம்பவுண்டுக்கு வெளியே, ஒரு சிறிய பாறை மேல் உட்கார்ந்தபடி கண்களை மூடிய நிலையில் புல்லாங்குழலை இசைத்துக்கொண்டிருக்கிறான் ரிக்கி. கண்ணனின் மாயக்குழல் இசைகேட்டு மெய்மறந்த மாந்தர்போல, ரிக்கியைச் சுற்றிச் சிறியவர்களும் பெரியவர்களுமான கூட்டம். அவனுடைய ஜீவனே இசைக்கின்ற மாதிரி அத்தனை உருக்கம்! இனிமை! அவனைச் சுற்றி நிற்கும் கூட்டமோ மந்திரப்பொடி தூவப்பட்டவர்கள் மாதிரி ரிக்கியின் இசை ரீங்காரத்தில் மயங்கிப் போய்ச் சுற்றிச் சுழன்றுகொண்டிருக்கிறார்கள். ஆவேசம் நிறைந்த சித்தார்த்கூட இப்போது சாந்தம் பெற்ற சித்தார்த்தனாகி விட்டார். கோபம் வெடித்த முகத்தில் அமைதியின் ஆதிக்கம்.

அந்தக் குழலிலிருந்து வருகின்ற காற்றுக்கு இத்தனை தித்திப்பா? இத்தனை வர்ணங்களா? இத்தனைக் கோணங்களா? இத்தனை உள்ளங்களா? இவ்வளவு உயரங்களா? இத்தனை ஆழங்களா?

"இந்த ஆதாரம் ஒன்று போதுமே... இந்த இசைஞானம் இவனுக்கு எப்படி வந்தது? இந்த மேதாவிலாசம் ஒன்றே போதும்-இவன், ஒரு இசை மேதைக்குப் பிறந்தவன் என்பதற்கு"

-என்றபடி உணர்ச்சி மேலிட்டவளாய் வெளியே ஓடும் சீதா கூட்டத்தை விலக்கிக் கொண்டு 'ரிக்கி' என்று வாஞ்சையோடு நெருங்கியபொழுது கண்களைத் திறக்கிறான் ரிக்கி. "ரிக்கி வா, நம்ம வீட்டுக்குள்ளே போகலாம்" என்று அவனைப் பேசவிடாமல், அவனுடைய புல்லாங்குழலைப் பெருமையுடன் தன் கையில் வாங்கிக்கொண்டு, இன்னொரு கையால் அவனை உரிமையோடு அணைத்துக்கொண்டு வீட்டிற்குள் விரைகிறாள் சீதா.

"ரிக்கி வா. நீ அவரிடம் எதுவும் பேசவேண்டாம். அவர் பேசுவதை நீ பொருட்படுத்தவும் வேண்டாம். வா இனி, இந்த வீடே உனக்குச் சொந்தமானதுதான்... உனக்கு வசதியான தனி அறையை ஒழுங்குபண்ணித் தருகிறேன். சத்தியமாகச் சொல்கிறேன் ரிக்கி. இனி இந்த வீட்டை விட்டு நீ எக்காலத்திலும் போக முடியாது. நீ என்னோட அன்பு மகன், உன்னை நான் போகவிடமாட்டேன்" -திணறிப்போய் நின்ற ரிக்கியை கைபிடித்து அழைத்துக்கொண்டு அங்குள்ள அறையின் உள்ளே போகிறாள் சீதா.

திகைத்து -திணறிப் பேச முடியாத நிலையில் அவர்கள் இருவரும் போவதையே பார்த்துக்கொண்டு நிற்கிறார் சித்தார்த். சராசரியாக ஒவ்வொரு நாளும், ஒரு நிமிடத்தில், உலகெங்கும் எத்தனை கொலைகள், தற்கொலைகள், கற்பழிப்புகள், பிறப்புகள், மரணங்கள் நிகழ்கின்றன என்று ஆராய்ச்சி நிறுவனம் புள்ளி



விபரம் தருகிறதே; அதையெல்லாம் கேட்கும்போதுகூட
வியப்படையாத சித்தார்த், தன் வீட்டினுள் நுழைந்து ரிக்கி
கொடுத்த கடிதம், அதில் அவர் படித்தது, அதனால் ஏற்பட்ட
எதிர்பாராத திருப்பமும்கூட. ஒரு நிமிடம்தான் என்று நினைத்துப்
பார்த்தபோது, 'ஆனால் இதைப்போன்ற ஒரு அதிர்ச்சி ஒரு நிமிட
அவகாசத்தில் உலகின் எந்த மூலை முடுக்கிலும் நடைபெற வழியே
இல்லை' என்று சத்தியம் பண்ணுகிறார் மனதிற்குள்.

இத்தனைக்கும் காரணமான அந்தக் கடிதத்தை- ரிக்கி
கொண்டுவந்த விதமே அலாதி. "சார், நீங்கதானே மிஸ்டர் சித்தார்த்.
இந்தாங்க, உங்களுக்கு ஒரு லெட்டர்" என்று ரிக்கி சொல்லித் தந்த
கடிதம் மேஜையில் கிடக்கிறது.

திறந்து கிடக்கும் அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டிருப்பது இதுதான்:

''மரியாதைக்குரிய திரு. சித்தார்த் அவர்களுக்கு. இக் கடிதம்
கொண்டுவரும் 'ரிக்கி' என்ற பிள்ளையின் ஏக்கத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்.
இவன் பிறந்து தவழத் தொடங்கிய நாள் முதலாய்த் தகப்பனால்
வெறுக்கப்பட்டவன். மறக்கப்பட்டவன். இதுவரை எப்படியோ காட்டுச்
செடிபோல வளர்ந்துவிட்டான். இனியும் தந்தையின் பாசம் எப்படி இருக்கும்
என்று தெரியாமல், தாய்ப்பாசம் கிடைக்காமல் இவன் வளரக்கூடாது. கருணை
கூர்ந்து இவனை ஏற்றுக்கொள்ளுங்கள். இவனை அனாதையாக்கி விடாதீர்கள்.
அந்தப் பாவத்தை நீங்கள் சுமக்கவேண்டாம். இவன் எக்காலத்திலும்
உங்களுக்குத் துரோகம் நினைக்க மாட்டான். உங்களைப் பரிசுத்தமாக
நேசிப்பான். உங்கள் நிழலைவிட்டு இவனைத் துரத்திவிடாதீர்கள். இவனுக்குத்
தேவை உங்களின் அன்பு மட்டுமே. அதை இவனுக்குத் தர மறுக்காதீர்கள்.

இப்படிக்கு.

(என் பெயர் எழுதத் தயங்குகிறேன். தங்கள் அன்பு மனைவியின் அன்புக்கும் மகிழ்ச்சிக்கும் நான் தீங்கு செய்ய நினைக்கவில்லை. தங்கள் அருமை மனைவியின் தாயன்பு இந்த 'ரிக்கி' என்ற பிள்ளைக்குக் கிடைத்திடப் பிரார்த்திக்கிறேன்")

இதுவரை, இங்கே நடந்தவற்றையெல்லாம் 'மோப்பம்' பிடித்துவிட்டு, ஒருத்தன் டாக்டர் ஹரிஹரனைத் தேடி ஓடுகிறான் என்பதை சித்தார்த்தோ, சீதாவோ, ரிக்கியோ அப்போது அறியவில்லை.

# ௧

அன்று ஞாயிற்றுக்கிழமை. மதர்மேரி கான்வென்ட்டின் காம்பவுண்டுக்கு வெளியே ஏராளமான கார்கள் நின்றுகொண்டிருக்கின்றன. ஹாஸ்டலில் தங்கிப் படிக்கும் தங்கள் பெண் பிள்ளைகளைப் பார்க்க வெளியூரிலிருந்து வந்திருந்த அப்பா அம்மாக்களும், உறவினர்களும், குடும்ப சினேகிதர்களும் காம்பவுண்டுக்கு உள்ளே பரவிக் காணப்படுகிறார்கள். தாங்கள் கொண்டு வந்திருக்கும் அன்பளிப்புகள், உயர்ந்த ரகப் பதார்த்தங்கள், பரிவான விசாரிப்புகள், விசாரணைகள், முத்தங்கள் அனைத்தையும் தங்கள் பெண்களிடம் அவர்கள் பரிமாற்றம் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்பொழுது-

தங்கள் காரை விட்டு இறங்கிய கீதா "நீயும் வா ரிக்கி, கூச்சப்படாதே" என்று ரிக்கியை அழைத்துக்கொண்டு உள்ளே போகிறாள். அப்போது, 'ஆன்ட்டி' என்று மகிழ்ச்சியில் கூவியபடி ஓடோடி வரும் ஒரு அழகிய மாணவி கீதாவைக் கட்டிப்பிடித்துக் கன்னத்தில் முத்தம் கொடுத்துவிட்டு, கீதா சொல்லத் தொடங்குவதற்கு முன் ரிக்கியை 'யார்?' என்பதுபோலப் பார்த்ததும்...

"அனிதா... உனக்கு ஒரு பெரிய சர்ப்ரைஸ். இந்த ரிக்கி யார்னு தெரிஞ்சா எனக்கு ஆயிரம்



முத்தம் குடுப்பே. முதல்லே, இதை வாங்கிக்க. உங்க அப்பா கல்கத்தாவிலிருந்து உனக்குக் கொடுத்து அனுப்பியிருக்கார்" ஒரு பெரிய பார்சலை அவளிடம் கொடுத்த கீதா, "அனிதா வா அந்த மரத்தடியிலே போய் தனியே உட்கார்ந்து பேசலாம். இங்கே இந்தக் கூட்டம் நம்மை நிம்மதியாய்ப் பேசவிடாது"

அந்த மரத்தடி நிழலில் உட்கார்ந்தபொழுது, ரிக்கி சுற்று முற்றும் பராக்குப் பார்த்தபடி நின்றுகொண்டிருந்தான். கீதா, ரிக்கியின் கையைப் பிடித்து இழுத்து தன் பக்கத்தில் அவனை உட்கார வைத்தாள். "ரிக்கி, இந்த அனிதாவோட அப்பா பெரிய பிசினஸ் மாக்னெட்" என்று கீதா முடிக்கவில்லை. அனிதா அவசரமாகவும் கோபமாகவும் குறுக்கிட்டாள். "ஆமா... எங்க டாடி ஒரு மாக்னெட்தான். காந்தம் மாதிரியேதான். அவர் என்கிட்டே வந்து ஒட்டமாட்டார். நானேதான் ஓடிப்போய் 'சக்'குன்னு அவர்கிட்டே ஒட்டிக்கணும். அவர்கிட்டே எனக்கு அஃபெக்ஷன் இருக்கோ இல்லையோ, அவரு அப்பாங்குறதுக்காக நான்தான் அவரைத் தேடி கல்கத்தா போய் ஒட்டிக்கணும். அவரும் என்னை உதறிவிடுறதுக்காக அவர் பிஸினஸ் விஷயமா போற நாடுகள்லேருந்து இப்படி ஏதாவது ப்ரசண்ட் அது, இதுன்னு மூட்டை கட்டி ஆன்ட்டிக்கு அனுப்புவார். ஆன்ட்டிக்கு போஸ்ட்மேன் ஜாப். ஆனா ஆன்ட்டிதான் உண்மையான 'மாக்னெட்.' தன்னோட அன்பிலேயும் சிரிப்பாலேயேயும் எல்லாரையும் தன் பக்கம் இழுத்திடு வாங்க."

"மிஸ் அனிதா, உங்களாலே தண்ணிக்குள்ள எவ்வளவு நேரம் மூச்சைப் புடிச்சிக்கிட்டு 'தம்' பிடிக்க முடியும்?" -திடீர் கேள்வி, ரிக்கியிடமிருந்து.

அனிதா புரியாமல் கீதாவைப் பார்த்தாள்.

ரிக்கி சிரித்தபடி புதிரை அவிழ்த்தான்.

"இப்படி மூச்சு விடாமல் பேசுறீங்களே, அதை வச்சுக் கேட்டேன்."

'ஹோய்' என்று விழுந்து விழுந்து சிரித்தாள் அனிதா. கீதாவும்தான்.

"அனிதா, இன்னைக்கி அடைமழைதான், போ. நீ இப்படிச் சிரிச்சு இதுவரைக்கும் நான் பார்த்ததே இல்லை. வாரத்துல ஒருநாள் நான் வரும்போது மட்டும்- மானேஜர் வீட்டுக் கல்யாணத்துக்கு வர்ற ஏழை கிளார்க் மொய் எழுதுற மாதிரி அழுதுகிட்டே சிரிப்பே. இன்னைக்கித்தான் மனசைத் தெறந்து சிரிச்சிருக்கே. இவ்வளவு தைரியமாவும் பேசியிருக்கே"

கீதா அப்படிச் சொன்னதும்தான், அனிதா, தான் அதிகம் பேசிவிட்டதாகவும், மிச்சம் மீதி இல்லாமல் சிரித்ததையும் உணர்ந்தாள். உடனே மௌனமாகிவிட்டாள்.

"ஐ அம் ஸாரி அனிதா. நீங்க சிரிச்சதுக்கு நான் காரணமாயிட்டேன். அதுக்காக ஃபீல் பண்றீங்களா?" ரிக்கி வருத்தப்பட்டான்.

மறுத்தாள் அனிதா. அந்த மறுப்பில் கலக்கமும் ஏக்கமும் இருந்தது. "நோ நோ... நீங்க... நீங்க... ஆங்... ரிக்கி... ரிக்கி... நான் இப்படி சிரிச்சது முதல் தடவையாக இருக்கலாம். அதுக்காக நான் ரொம்பவும் உங்களுக்கு நன்றி சொல்லணும். ஆனா இப்படிச் சிரிக்கிற சந்தர்ப்பம் எனக்கு நிரந்தரம் இல்லை. அதை நினைச்சுத்தான்..."

கீதா, அனிதாவை அணைத்துக்கொண்டாள்.

"ஜுக் ஹியர் அனிதா. இனிமே, இந்தச் சிரிப்பு எப்பவும் உன்கிட்டே இருக்கும். இந்த ரெண்டு வருஷமா உன்னை எங்க வீட்டுக்குத் தினம் தினம் வந்து அழைச்சிட்டுப் போக முடியாததை நினைச்சு நான் வேதனைப்படாத நாளே கிடையாது. இனிமே அந்த வேதனைக்கு அவசியம் இல்லே." ரிக்கியின் பக்கம் திரும்பினாள் கீதா.

"ஆமா ரிக்கி. பகல்பூரா நானும் அவரும் வேலைக்குப் போயிடுறோம். ஞாயிற்றுக்கிழமை ஒரு நாள்தான்... அன்னிக்குப் பார்த்து எங்க ஆர்க்கெஸ்ட்ரா ட்ரூப்புக்கு ரிகர்சல் வச்சிருப்போம். இல்லே, எங்க ரெண்டு பேருக்குள்ளே 'வாக்குவாதம்' நடத்திக்கிட்டு எங்க நிம்மதியைக் கெடுத்திட்டிருப்போம். அதனாலே அனிதாவை வீட்டுக்கு அழைச்சிட்டுப் போய் இவளுக்கு ஒரு நாளாவது முழுமையான சந்தோஷத்தைக் குடுக்க முடியாமல் போச்சு. இவளுடைய தனிமைக்கு என்னாலே மருந்து கொடுக்க முடியலே. ஆனா இன்னையிலேருந்து அந்தக் குறை மட்டும் இல்லே, எனக்கு வேற எந்தக் குறையும் இல்லாமப் போச்சு. நீதான் வந்துட்டியே. இனிமே தினமும் அனிதா நம்ம வீட்டுக்கு வரலாம்; மூச்சுவிடாமப் பேசலாம்; நீயும் ஒன்... டூ... த்ரீ...ன்னு எண்ணிக்கிட்டிருக்கலாம்."

இப்பொழுது ரிக்கி பளீரென சிரித்தான். அனிதா அழுதுவிட்டாள். "ஆன்ட்டி நீங்க சொல்றது உண்மைதானா? இதுதான் நீங்க சொன்ன சஸ்பென்ஸா?"

"இதுக்குமேலே இன்னொரு பெரிய சஸ்பென்ஸ"ம் இருக்கு அனிதா. நாளைக்கு கவர்ன்மெண்ட் ஹாலிடே. நேரத்தோட காலையிலேயே வந்து உன்னை எங்க வீட்டுக்கு அழைச்சிட்டுப் போயிடுறேன். அங்கே வீட்டுல வச்சு அது என்ன சஸ்பென்ஸ்ங்குறதை உனக்குச் சொல்கிறேன்."



மகிழ்ச்சியில் திக்குமுக்காடிய அனிதா, ரிக்கியை நன்றியுடன் பார்த்தாள். ஆனால் அப்பொழுதும் அந்தப் பார்வையில் ஒரு நம்பிக்கையின்மை மிருதுவாக ஓரம்கட்டியிருந்தது.

ரிக்கி, "வேண்டாம்... வேண்டாம்... போதும்... போதும் ஆன்ட்டி" என்று எவ்வளவோ கெஞ்சியும்கூட, பிடிவாதமாக, அவனுக்கு ஜீன்ஸ், பாண்ட்ஸ், ஸ்வெட்டர், ஷ", ஷர்ட்டுகள் என்று கீதா வாங்கிக் குவித்துவிட்ட பாக்கேஜ்கள் காருக்குள் நிறைத்துக் கொண்டிருந்தன. விடுமுறை என்று திறக்காத கடையையும் திறக்கச் செய்த கீதாவின் அன்பும் பிடிவாதமும் ரிக்கியைத் திகைக்கச் செய்தது.

வீடு திரும்புகையில், அனிதாவைப் பற்றியே நினைத்துக் கொண்டு வந்த ரிக்கி திடீரென்று கீதாவிடம் ஞாபகம் வந்து கேட்டான்- "ஆன்ட்டி, உங்க ஆர்கெஸ்ட்ரா ட்ரூப் பத்தி அனிதாவோட பேசிட்டிருக்கும் போது சொன்னீங்களே... அது எப்படி? என்ன மாதிரின்னு நான் தெரிஞ்சுக்கலாமா?" -அவனுடைய இயல்பான இசை ஆர்வத்திற்கு மிகுந்த உற்சாகம் தந்தது, கீதா சொன்ன பதில்.

"ஆமா ரிக்கி, நானும் அவரும் 'ஹார்மோனி'ங்குற பேருல ஆர்கெஸ்ட்ரா ட்ரூப் வச்சிருக்கோம். ஆனா வியாபார நோக்கத்தோட இல்லே. நல்ல காரியங்களுக்கு நிதி திரட்டுறதுக்குன்னு ஆரம்பத்துல ஆரம்பிச்சது. ஆனா நாளடைவிலே எங்க ட்ரூப்புக்கு பெரிய அங்கீகாரமும், மரியாதையும் கெடச்சிருச்சு. வெளிநாட்டு அம்பாஸடர்கள், மினிஸ்டர்ஸ், நம்ம கவர்னர்கள் இப்படிப்பட்ட வி.வி.ஐ.பி.ங்க ஊட்டிக்கு வந்தாங்கன்னா எங்க ட்ரூப்தான் அவங்களைக் கௌரவிக்கணும். இந்த நிலைமைக்கு எங்க ட்ரூப், ஸாரி... இனிமே அது நம்ம ட்ரூப்... இந்த அளவுக்குப் பெருமை அடைஞ்சிருக்குன்னா அதுக்கு நம்ம ட்ரூப்ல இருக்கிற ஒவ்வொரு மியூசிஷியனும் காரணம். அவங்களோட அபாரமான திறமை காரணம். எல்லாத்துக்கும் மேலே உங்க 'டாடி'யோட உழைப்பும் ஞானமும் காரணம்."

ரிக்கிக்கு அந்த 'டாடி' என்ற வார்த்தை தந்த அடி கொஞ்சம் வலித்தது. கீதா தொடர்ந்து சொன்னாள்: "சொன்னா நம்பமாட்டே ரிக்கி. நம்ம ட்ரூப்ல மியூசிக் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் வாசிக்கிற ப்ளேயர்ஸ் எல்லாம் யார் தெரியுமா? ஊட்டியிலே இருக்கிற போலீஸ் சூப்பரின்டெண்ட், டாக்டர்ஸ், லாயர்ஸ், பிஸினஸ் பீப்பிள் இவங்கதான். அவங்க எல்லோரும் சின்னப்பையன்களா மாறி உங்க டாடிகிட்டே திட்டு வாங்கிக்கிட்டு ரிகர்ஸ் பண்றத நீ

பார்த்தே ஒரே சிரிப்பா இருக்கும். ட்ரைவர், ஏன் காரை நிறுத்துறீங்க?" ட்ரைவர் மருதமுத்து எதிரே கையைக் காட்ட அங்கே அனிதா சைக்கிளில் நின்றுகொண்டிருக்கிறாள், மூச்சிரைத்தபடி அவள் சைக்கிளைத் தள்ளிக்கொண்டு காரிடம் வருகிறாள். "என்ன அனிதா, என்ன?" கீதா பதறியபொழுது, மூச்சிரைப்புக்கு, நடுநடுவே இடைவெளிவிட்டு, "ஆன்ட்டி... உங்ககிட்ட பேசிக்கிட்டிருக்கும்போது, என்னை அறியாம ரிக்கி கையிலிருந்த இந்த ப்ளூட்டை எடுத்து என் கையிலே வச்சிருந்திருக்கேன். நீங்க புறப்பட்டுப் போனதுக்கு அப்புறம்தான் தெரிஞ்சது. குறுக்கு வழியிலே உங்களைப் புடிக்கிறதுக்கு அடிச்சுப் புடிச்சு ஓடியாந்தேன்."

கீதா அவளிடமிருந்து ப்ளூட்டை வாங்கியபடி சிரித்துவிட்டாள். "ரிக்கி வந்த நேரத்துலேர்ந்து உனக்கு மட்டும் இல்லே, எனக்கும் எல்லோருக்கும் மூச்சு முட்டுது; உன்னை மாதிரியே பேச முடியலை. நீதான் நாளைக்கு வீட்டுக்கு வரப்போறியே. இந்த ப்ளூட்டாலே ரிக்கி நம்ம எல்லோரையும் மூச்சே நின்னு போகும்படி ப்ளே பண்றானா இல்லியா பாரு. ஹி இஸ் கிரேட் இன் ப்ளூட்."

"ரியலி?" முகமெல்லாம் ஆச்சரியம் தாங்கிய அனிதா, "இப்பவே விடிஞ்சிட்டா நல்லா இருக்குமே ஆன்ட்டி" என்றாள் உண்மையான ஆசையோடு. "அனிதா... மூச்சுவிடாமப் பேசுறது தப்பு இல்லே.. இப்படி மூச்சை அடக்கி வேகம் வேகமா மேடு, பள்ளம் பார்க்காமெ சைக்கிள் மிதிக்கிறது ரொம்பத் தப்பு. இதுலே 'ரிஸ்க்' அதிகம்.. நீங்களும் சொல்லுங்க ஆன்ட்டி..." என்று ரிக்கி சொன்னபொழுது, அனிதாவின் முகம் என்றுமில்லாத புதுவிதப் பிரகாசத்தை அடைந்தது.



A1294
6222270

# 10

"கதவைத் தட்டினான். திறந்தேன். "நீங்க மிஸ்டர் சித்தார்த்தாவா?"ன்னு கேட்டான். நான் தலையசைத்ததும் "இந்தாங்க உங்களுக்கு ஒரு லெட்டர் கொண்டு வந்திருக்கேன்"னு சொல்லி இந்த லெட்டரைக் குடுத்துட்டு அப்பாவி மாதிரி இங்கே, என் முன்னாலே நின்னான். படிச்சதும் எனக்கு வெறியே வந்திருச்சு. "டேய் நீ யாரு சொல்லு. இப்பவே உன்னைப் புடிச்சு லாக்கப்லே தள்றேன்"னு கத்தினேன். அவன் பயப்படவே இல்லை. ரொம்பவும் சுவாதீனமா "அப்படி என்ன சார் அந்த லெட்டர்ல இருக்கு"ன்னு என்னையே திருப்பிக் கேட்டான். அதுக்குள்ளே என்கிட்டேயிருந்து அவசரமா லெட்டரைப் பறிச்சுப் படிச்சா கீதா. அவ்வளவுதான்... அதை அப்படியே நம்பிட்டா. என்னோட எந்த வாதமும் அவகிட்டே எடுபடலே. அவனோ? மகாபுத்திசாலி "சார் உங்களை நான் ஏமாத்த வரலே. இப்பவே நான் வெளியே போறேன். என்னைத் தப்பா நெனைக்காதீங்க"ன்னு புறப்படுறான். எப்பேர்ப்பட்ட நடிப்பு. "உங்க அம்மா எங்கேடா"ன்னு கடைசியாக் கேட்டேன். பூமியைக் காட்டுறான். அவங்க அம்மா செத்துட்டாங்களாம்."

மருமகன் சித்தார்த் சொல்லச் சொல்ல, ஒரு கையில் சிகரெட்டுடனும், இன்னொரு கையில்

அந்தக் கடிதத்துடனும் அமைதியாக உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறார் டாக்டர் ஹரிஹரன். கீதாவும் ரிக்கியும் அப்போது வீட்டில் இல்லாததால் இவர்களால் மனம் விட்டுப் பேச முடிந்தது. ஹரிஹரன் முகத்தில் எந்தவிதமான பதட்டமும் இல்லாதது சித்தார்த்துக்கு எரிச்சலைத் தரவில்லை. எதற்கும், எந்தச் சமயத்திலும் பதற்றமே படாமல் பிடில் வாசிப்பவர் தன் மாமனார் என்பது சித்தார்த்துக்குத் தெரியும். எடுத்ததற்கெல்லாம் கண்ணில் வெங்காயம் பிழிந்த மாதிரி துள்ளிக் குதிப்பவர்களை 'எம்மோஷனல் இடியட்ஸ்' என்று வர்ணிப்பவர் ஹரிஹரன். ஆனால், இப்பொழுது அவருடைய தியான நிலைக்கு அடிப்படைக் காரணம், 'மோப்பம்' பிடித்த மாரா பிசிறு தட்டாமல் அவரிடம் வந்து தான் பார்த்தது, கேட்டதையெல்லாம் முன்கூட்டியே சொல்லிவிட்டதுதான். இருந்தாலும் மருமகன் சொல்வதை அதிசயத்துடன் கேட்கிறார்.

சித்தார்த் தனது கொந்தளிப்பைச் சொல்லச் சொல்ல ஹரிஹரனுக்கு 'ரிக்கி' பற்றிய வியப்புதான் திணறடித்துக் கொண்டிருந்தது. அப்புராணிப் புறாவாக இருந்த ரிக்கிக்கு இந்த மாதிரி குயுக்தியான விபரீத நாடகம் போடும் சாமர்த்தியமும், தைரியமும் எப்படி வந்தது? மகள் கீதாவின் குடும்பச் சிக்கலைப் பற்றி அவனிடம் அவர் சொன்னது உண்மைதான். ஆனால், அந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்காக இப்படிப்பட்ட திட்டமும் நாடகமும் நடத்த அவனுக்கு யார் கற்பித்தார்கள்? போன வாரம்கூட ஸ்டார் டிவியில் கலிபோர்னியாவில் 'பறவைகள் பழக்கப்படும்' விதத்தைப் பார்த்தது அவர் நினைவுக்கு இப்போது வந்தது. ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் முன்னிலையில் ஒரு ஆணும் பெண்ணும் புறாக்களைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் இயங்கும்படி பழக்கியிருப்பதை செயல்படுத்திக் காட்டினார்கள். மாய்ந்துபோனார் ஹரிஹரன். அவர்கள் பயிற்சி கொடுத்த புறா ஹெலிகாப்டரில் இருந்து பறந்து வந்து வேடிக்கைப் பார்க்கும் கூட்டத்தில் நிற்பவர் நீட்டிய கையில் இருந்த நாணயத்தை வாயால் பற்றிக்கொண்டு தன் தலைவியான பயிற்சியாளரிடம் கொண்டுபோய்க் கொடுக்கிறது. அவள் அந்தப் புறாவிடம், "பாவம்.. அந்த ஆள்... நீ அவரிடமிருந்து எடுத்துக்கொண்டு வந்த நாணயத்தை அவரிடமே கொண்டுபோய்க் கொடுத்துவிடு. அதுதான் நாணயம். இது உன்னுடைய பணம் அல்ல" என்று அறிவுரை சொன்னதும்.. அந்தப் புறா மீண்டும் பறந்துபோய் தான் பறித்து வந்த மனிதரின் கையில் அந்தக் காசை வைத்துவிட்டு அந்தப் பெண்ணிடம் திரும்பி வருகிறது. 'புறாக்களுக்குப் பழக்கமான இந்த நாணயம் நமது அரசியல்வாதிகளிடம்



இல்லையே' என்று பிரான்சிஸிடம் சொல்லிப் புலம்பினார் ஹரிஹரன்.

அந்தப் புறாவின் சாயலைத்தான் இப்பொழுது ரிக்கி எடுத்துக்கொண்டிருக்கிறான். இந்தக் குறுகிய காலத்தில், தங்கள் குடும்பத்தின் மீது இவ்வளவு அக்கறை காட்டி, கைதேர்ந்த நடிகனாக இவன் மாறிய ஜாலம் எப்படி? அந்த விந்தையிலும் மனிதநேயம் என்ற அச்சாணி அமைந்தது எப்படி?

"நமக்கு விடை தெரியாத அற்புதங்களைப் பார்க்கும் போதெல்லாம், நாஸ்திகக் கொடி தூக்குறவர்கள்கூட 'நமக்கு மேல் ஏதோ ஒரு சக்தி இருக்கிறது' என்று உதடு பிரியாமல் சொல்லிவிடுவார்களே.. அந்த சக்திதான் ரிக்கியை இப்படி இயங்க வைத்ததோ? அந்த ஹரிக்கே வெளிச்சம்" என்று இந்த ஹரிஹரன் நினைத்துக்கொண்டார்.

"சித்தார்த்.. இப்ப, அந்தப் பையன் எங்கே?" - அப்படிக் கேட்கும்போதே, தன்னுடைய தற்போதைய நடிப்பை நினைத்தும் அதிசயித்துக்கொண்டார்.

"என்னமோ ஷாப்பிங்காம், அவளை தோ அழைச்சிட்டுப் போயிருக்கா. ஆனா அங்கிள்.." நிறுத்தினார் சித்தார்த். தன்னையும் அறியாமல் சித்தார்த் என்ற அந்த இசைக்கலைஞன், தன் புலம்பலைத் தூரத்திவிட்டு ரிக்கியின் இசை ஞானத்தைப் புகழத் தொடங்கினான். "அவன் யாரோ, எப்படியோ, அதெல்லாம் கிடக்கட்டும். அவனோட ரத்தம் எல்லாம் இசை அணுக்கள் நிறைஞ்சது. தனது சுவாசக் காற்றுக்கெல்லாம் ஆயிரமாயிரம் வடிவங்களைக் கொடுக்கிறான். புல்லாங்குழலை நீங்கள் கும்பிடும் கண்ணபிரான்கூட இப்படி வாசித்திருக்க முடியாது. இவன் ஒரு ஞானக் குழந்தையா இருக்கணும். ஹி இஸ் எ சைல்டு ப்ராடிஜி. அதேசமயம், ஏன் இப்படி, இந்த வீட்டுக்குள்ள கிறுக்குத்தனமா நுழைஞ்சிருக்கான்.. அதான் புரியலே".

சித்தார்த், ரிக்கி அன்று தங்கள் வீட்டின் வெளியே கிடந்த பாறையில் உட்கார்ந்து பாடிய ராகத்தைப் பாடிக்காட்ட முயன்றார்.

"என்னாலேயே முடியல பாருங்க அங்கிள்" -தோல்வியை சந்தோஷமாக ஒப்புக்கொண்டார்.

"சித்தார்த், சில விஷயங்களைப் புரிஞ்சுக்காமலே நாம ரொம்பவும் அனுபவிச்ச ரசிக்கிறோம். அதுலே இந்த மியூசிக்கும் அடக்கம். உங்க பாட்டை- இல்லே, ஒரு காம்போசிஷனை, பாட்டு இல்லாம தாளத்தை மட்டும் ஆதார சுருதியா வச்சு நீங்க

சங்கீதமாக்குறதை ஊட்டியிலே இருக்கிற மேட்டுக்குடி மக்கள் மட்டும் இல்லே, இங்கே இருக்கிற பழங்குடிகள் கூட மெய்மறந்து ரசிக்கிறாங்க. ஏன்? அதனோட அர்த்தம் தெரிஞ்சா? இல்லே. சங்கீதத்தோட ரீங்காரத்துக்கு, ஐ மீன் வைபிரேஷனுக்குக் கட்டுப் படாத ஜென்மம் உலகத்தில் யாரும் இருக்க முடியாது. அதைப்போல மனித உயிர்கள்ளேயும், புரிஞ்சுக்க முடியாத, ஆனால், நம்மாலே அதிகமா நேசிக்கப்படுகிற அளவுக்குப் பல பிறவிகள் இருக்காங்க. அது மாதிரிதான் நீங்க சொல்ற ரிக்கியும் இருக்க முடியும்!" அப்படி அவர் சொல்லி முடிப்பதற்குள் வாசலில் கார் வந்து நிற்கும் அறிகுறி.

சித்தார்த் வாசலைப் பார்த்தார்.

ஹரிஹரன் வானத்தைப் பார்த்தார், ஜன்னல் வழியாய்.

கீதாவும் ரிக்கியும் சிரித்தபடி வருகிறார்கள்.



# 11

"அபாரம்டா ரிக்கி" என்று உதட்டை விரிக்காமலேயே, கையைப் பிரிக்காமலேயே 'கைதட்டினார்' ஹரிஹரன். கீதாவுடன் அங்கே வந்த ரிக்கி, அவரை ஒரு புதுமுகமாய்ப் பாவித்து, முகத்தில் எவ்விதச் சலனமும் இல்லாமல் அவரைப் பார்த்த ரிக்கியின் புதிய பார்வை அப்படி அபாரமாக இருந்தது.

"அப்பா இது யார் தெரியுமா?" -துள்ளி வந்தாள் கீதா. அந்த முகத்தில் எவ்வளவு ஆழமான குதூகலம்!

"நல்லாவே தெரியும்மா. இவ்வளவு நேரமா சித்தார்த் சொன்னதையெல்லாம் கேட்டதுக்கு அப்புறம்.." என்ற அவரை இடைமறித்தாள் கீதா.

"உங்களுக்கும் சந்தேகம் வந்திடுச்சா..?" குப்பென்று கோபம் வந்தது கீதாவுக்கு.

"எனக்கா? சந்தேகமா? நானே சந்தேகத்துக்கு அப்பாற்பட்ட டாக்டர்னு பேர் எடுத்தவன். எக்ஸ்ரே, ப்ளட் டெஸ்ட், அது, இதுன்னு பார்க்காம, பேஷண்ட்டோட முகத்தைப் பார்த்தே அவனுக்கு என்ன வியாதின்னு சொல்லிடுவேன்."

"ரிக்கி.. நீ அறைக்குப் போயி இதையெல்லாம் வச்சிட்டு வா.." என்று ரிக்கியை அனுப்பிவிட்டு தந்தையிடம் திரும்பினாள் கீதா.

"சரி... இப்பச் சொல்லுங்க. இந்த ரிக்கி கொண்டாந்த லெட்டர்ல உங்களுக்கு நம்பிக்கை இருக்கா இல்லியா?"

"நாலு செங்கல்லை ஒரு மரத்தடியிலே அடுக்கி வச்சு, தண்ணி தெளிச்சுட்டு, சந்தனம் குங்குமம் பூசி ரெண்டு பூவை அதுமேல வச்சவுடனே, நமக்குக் கடவுள் நம்பிக்கை வந்து செங்கல்லைச் சாமியா நினைச்சுக் கும்புட ஆரம்பிச்சிடுறோம். இந்த மாதிரி பூமியில பொறந்துட்டு, இந்தப் பையன் கொண்டாந்த கடுதாசியில எழுதியிருக்கிறதைப் படிச்சிட்டு இந்தப் பையனை என்னாலே எப்படி சந்தேகப்பட முடியும்? இவனை நானும் உன்னை மாதிரியே நம்புறேன்" -கீதா தன் புருஷனைத் தைரியமாகத் திரும்பிப் பார்த்தாள். சித்தார்த்துக்கு முகம் இறுகிவிட்டது. ஹரிஹரனைக் கோபமாகப் பார்த்தார்.

ஹரிஹரன் சித்தார்த்தின் ஆத்திரத்தைப் புரிந்துகொண்டு, "சித்தார்த், என்னுடைய நம்பிக்கையைத் தப்பா எடை போடாதீங்க. இந்தப் பையன் உங்களை 'அப்பா'ன்னு உரிமை தேடி வரலே. உங்க அன்புக்கு யாசகம் கேட்டு வந்திருக்கான்" என்றார்.

"என்னைத் தவிர இவனுக்கு வேற யாரும் அன்பு செலுத்துறதுக்கு ஆள் இல்லையா இந்த ஊரிலே? சொல்லுங்க அங்கிள்."

"பிச்சை எடுக்கிறவன்கூட எல்லார் வீட்டு முன்னாலேயும் நிக்கமாட்டான் சித்தார்த். கிடைக்கிற இடத்துலேதான் குரல் குடுப்பான். இவ்வளவு நேரம் இந்த ரிக்கியோட இசை ஞானத்தை நீங்க எத்தனை உயர்வாப் பேசுனீங்க. அந்த நேரத்திலே இவன் மேலே உங்களுக்கு வெறுப்பு வந்துச்சா?"

"விருப்பு வெறுப்பைப் பத்தி இப்ப நான் பேசலே. என் கேரக்டரையே களங்கப்படுத்துற மாதிரி இருக்கே இந்த லெட்டர். அதுக்கு என்ன சொல்றீங்க?"

"உங்க கேரக்டரைப் பற்றி நான் ஒண்ணும் தப்பா நினைக்கவே இல்லே."

"ஆனா இந்த லெட்டரை மட்டும் நம்புறீங்க. இப்ப எனக்குச் சந்தேகமா இருக்கு. இந்த நாடகத்துலே உங்களுக்கும் பங்கு இருக்குமோன்னு."

"நல்ல நாடகமா இருந்தா, மேடையிலே ஸ்கிரீனை இழுத்து-ஏத்துறவன்கூட பெருமைப் பட்டுக்குவான். தனக்கும் நாடகத்துலே பங்கு இருக்கிறதா நெனைச்சுக்குவான். அந்த வகையிலே பார்த்தா நீங்க சொல்ற இந்த நாடகத்துலே எனக்கும் பங்கு இருக்கு. ஏன்னா இந்த நாடகத்தாலே சந்தோஷப்படுற கீதாவுக்கு நான் தகப்பனா இருக்கேன். நீங்களும் நல்ல ஒரு ரசிகரா இருந்து பலமா கைதட்டுங்க. எந்தக் குழப்பமும் இல்லே, இதைப்போயி ஒரு



அயோத்திப் பிரச்சினையாக்கி உங்க நிம்மதியைக் கெடுத்துக் காதீங்க. புதுப்புது ராகபாவங்களை நீங்க கண்டுபிடிக்கிறீங்க. அதெல்லாம் எங்கேருந்து வந்ததுன்னு, கேட்டு, ரசிக்கிற யாரும் கேள்வி கேக்கறது இல்லே. அதைப்போல இந்த ரிக்கியையும் யாரோ ஒருத்தரோட அருமையான கீர்த்தனையா நெனைச்சுப் பாருங்க. அதனோட மூலத்தைப் பத்தின ஆராய்ச்சி அநாவசியம்."

கீதாவிற்கு அப்பாவைக் கட்டிப்பிடித்து முத்தம் கொடுக்கவேண்டும்போல் இருந்தது.

ஹரிஹரனின் குணாதிசயத்தைத் தெளிவாகத் தெரிந்து வைத்திருப்பவர் சித்தார்த். அவர் தனக்குச் சாதகமாகப் பேசவில்லை என்றாலும், அவருடைய பேச்சின் உள்ளடக்கமாக ஏதோ ஒன்று தனக்கு பக்கபலமாகவும், ஆதரவாகவும் இருப்பதை மட்டும் தெரிந்துகொண்டார். 'இந்த ரிக்கி, சித்தார்த்தின் மகன்' என்று பொருள்படும்படியாக அவர் எந்த ஒரு வார்த்தையும் போடாமல், 'ரிக்கிக்கு இருக்க இடம் கொடு' என்ற தோரணையில்தானே பேசினார்?' என்ற ஆறுதலோடு சித்தார்த் தன் அறைக்குள் போய்விட்டார்.

தன் அறையிலிருந்து வந்த ரிக்கி கீதாவின் பக்கம் வந்து நின்றான்.

"கீதா, இந்த ரிக்கியை என்னோடு அழைச்சிட்டுப் போகட்டுமா?"

"எதுக்குப்பா?"

"இவன் ப்ளூட் ப்ளே பண்றதைப் பத்தி மாப்பிள்ளை ஒரேயடியாப் புகழ்ந்தார். அது எந்த அளவுக்கு உண்மைங்கிறதை நான் தெரிஞ்சுக்க வேணாமா? அதுக்குத்தான்."

அப்பாவின் சங்கீத மோகம் தெரிந்ததே. கீதாவுக்கு அவர் கேட்டதைத் தட்ட வழியில்லை. இப்பொழுது தனக்கும் ரிக்கிக்கும் சப்போர்ட் பண்ணி அவர் பேசியதிலிருந்து அப்பாவை சந்தேகப்படவும் அவசியமில்லை.

"சீக்கிரமா அனுப்பிச்சிடுங்கப்பா" என்றாள் கீதா. ஆனால் 'ரிக்கி' என்கிற ரங்கராஜன் ரொம்பவும் பவ்யமாக, "இங்கே, இப்ப எனக்கு நிறைய வேலை இருக்கு. சாயந்தரம் சந்திக்கலாமே சார்" என்றபொழுது, டாக்டர் ஹரிஹரன், "அட வேஷக்காரப் பயலே. இப்படியெல்லாம் கொஞ்சமும் சளைக்காமல் எனக்கு நீ அந்நியம் போலப் பேசி நடிக்கிறதுக்கு எங்கேடா கத்துக்கிட்டே?" என்று மனசுக்குள் சிரித்தபடி, "ஓகே. ஈவினிங் சந்திப்போம்" என்றபடி புறப்பட்டார்.

# 12

அந்தச் சாயந்திரத்துக்குள் கீதாவை இப்படி அப்படி என்றில்லாமல் அசாத்தியமாய் வியப்படையச் செய்துவிட்டான் ரிக்கி.

டாக்டர் ஹரிஹரன் புறப்பட்டுப் போனதும்- கிச்சனுக்குள் ஏகமாய்ச் சத்தம் கேட்டு தன் அறையிலிருந்து ஒன்றும் விளங்காதவராய் வெளியே வந்தார் சித்தார்த். கீதாவுக்கும் ரிக்கிக்கும் கிச்சனில் கடுமையான போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்தது. கீதாவை கட்டாயப்படுத்தி உட்காரச் சொல்லிவிட்டு அவள் எவ்வளவு தடுத்தும் கேட்க மறுத்த ரிக்கி, சமையலைக் கவனிக்க ஆரம்பித்தான். கிச்சனில் எது, எது எங்கே இருக்கிறது என்று கேட்பதற்கு அவசியமில்லாமல் விதம் விதமான பிளாஸ்டிக் டப்பாக்களில் 'லேபிள்' போட்டு வைத்திருந்தாள் கீதா. அவளுக்கு முதலில் 'இது ஏதோ ரிக்கியின் தமாஷ்' என்றுதான் தோன்றியது. ரிக்கி ஒரு சமையல் கலைஞன் என்பது அவளுக்கு எப்படித் தெரியும்! சித்தார்த்தும் மனைவி மாதிரியே ஒன்றும் புரியாமல் தனது அறைக்குப் போய் விட்டார். ஆனால், நேரம் போகப்போக, சமையல் அறையிலிருந்து வெளிவந்த நளபாக வாசனை- சித்தார்த்தை எழுந்து உட்காரச் செய்துவிட்டது.

கீதாவோ ரிக்கியின் சமையல் நிபுணத்துவத்தைப் பார்த்து திக்குமுக்காடிவிட்டாள். இத்தனை



வருஷ காலத்தில் அவள் கண்கள் இமைக்காமல் நெடுநேரம் இருந்த நாள் இன்றாகத்தான் இருக்கும். எத்தனை எத்தனை புத்தம் புதிதான வகையறாக்களை ரிக்கி செய்து காட்டுகிறான்.

"ஆன்ட்டி இதைக் கொஞ்சம் டேஸ்ட் பண்ணிப்பாருங்க" என்று அவன் பீங்கான் தட்டில் கொடுத்த சாம்பிளை இடையிடையே அவள் ருசி பார்த்தபொழுது- மாய்ந்துபோனாள் ஆச்சரியத்தில். 'இந்த ரிக்கிக்குள் எவருக்கும் சுலபத்தில் கை வராத அபூர்வக் கலைகள்- அதுதான் இசையும் சமையலும்- இரண்டும் போட்டி போட்டுக்கொண்டு ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன' என்று நினைத்தாள். "ரிக்கி இதெல்லாம் நீ எப்படிக் கத்துக்கிட்டே" என்றாள் திரும்பத் திரும்ப. "ஒருநாளைக்குச் சொல்றேன்" என்றான் அவனும் திரும்பத் திரும்ப.

மத்தியானம் டைனிங்டேபிள் ஒழுங்குபடுத்தப்பட்டு, நடுநடுவே பூங்கொத்து ஜாடிகளால் அலங்கரிக்கப்பட்டு, அந்த இடமே மிக நவீனமாய்க் காட்சி தந்ததை சித்தார்த் விசித்திரமாகப் பார்த்தார். ரிக்கியின் சமையல் புராணத்தை கீதா காலட்சேபம் பண்ணிக் கொண்டிருக்க, அதைக்கேட்க விரும்பாதவர்போல் முகத்தைக் கடுமையாக வைத்துக்கொண்டு ஊமைபோல சாப்பிடத் தயாரானார் சித்தார்த்.

"சாப்பாடு வேண்டாம்" என்று கோபத்தோடு மறுப்பார் என்றுதான் முதலில் கீதா நினைத்தாள். அப்படி நடந்து கொண்டால், வீட்டைவிட்டு ரிக்கி வெளியேறும் வரையில் அவர் வெளியில்தான் சாப்பிட வேண்டியதிருக்கும் என்பது சித்தார்த்துக்குத் தெரியும். 'வீட்டுக்குள் வந்த பையன் விளையாட்டாய் நடந்துகொண்டு விளைவித்த குழப்பத்தைத் தானும் விளையாட்டாய் எடுத்துக்கொள்வது போலக் காட்டிக்கொள்ள வேண்டும் என்பது, அவர் சாப்பிட வந்ததின் மறுபக்க நோக்கங்களில் ஒன்று. மூடி வைக்கப்பட்டிருந்தவைகளைத் திறந்தபோது ஆவி பறக்க வந்த மணம் சமைத்தவற்றின் தனிச் சுவைக்கான கட்டியமாக இருந்தது. ரிக்கியின் தயாரிப்புகளை கீதா ஒவ்வொன்றாக எடுத்து அவரது பிளேட்டில் வைத்தபொழுது- அவையெல்லாம் சித்தார்த்திற்குப் புதுமையாக இருந்தது. அவர் சாப்பிடத் தொடங்கிய பொழுது, ரிக்கி நாகரிகமாகத் திரும்பிக்கொண்டு சிறிதாக ஒரு தும்மல் போட்டான்.

"உன்னை யாரோ நினைக்கிறாங்க" என்றாள் கீதா, சூடான தண்ணீர் க்ளாஸை அவனிடம் நீட்டியபடி. தற்சமயம், ரிக்கி தொடர்ந்து புரையேறும் அளவிற்கு அவனை நினைத்து நினைத்து அவனுடைய சமையல் திறனை மனதார வியக்கிறவர் தன் புருஷனே என்பது கீதாவிற்குத் தெரியாது.

"என்னைக்காவது ஒருநாள் இப்படி வகை வகையா ரசிச்சு ரசிச்சு சாப்பிடுவேன்னு நான் கனாதான் கண்டிருப்பேனா? அதுவும் நம்ம ரிக்கி கையாலே" என்று ஒரு குழந்தையைப்போல கணவனிடம் சீதா சொன்னபோது- "இன்னும் கொஞ்சம் போடு சீதா" என்று சொல்லத் தவித்தார் சித்தார்த். கௌரவம் பிரம்பை நீட்டியது. ஆனால் சீதாவே "இன்னும் கொஞ்சம்.. இன்னும்" என்று அவருடைய தட்டில் வைத்தபொழுது "போதும் போதும்" என்று ஒப்புக்கு நடித்தாரே தவிர, மனைவியின் கையைத் தட்டிவிடவில்லை. இந்த நளபாகக் கலையில் இவனுக்கு இத்தனை நேர்த்தியும் பக்குவங்களும் எப்படித்தான் கிடைத்தனவோ! சித்தார்த் சாப்பிட்டு முடித்து தன் அறைக்குத் திரும்பியதும் அப்படித்தான் யோசித்தார். அவன் கொண்டு வந்து தந்த கடிதக் குழப்பம் எல்லாம் அவருக்கு அந்த நிமிஷங்களில் மறந்தே போய்விட்டது. ஆனால், மறுபடியும், "இவன் யார்? எதற்காக இந்த வீட்டிற்குள் நுழைந்து நாடகமாடுகிறான்? இவன் முகமூடி எப்போது கிழியும்?" என்ற குழப்பம் அவருக்குள் உச்சம் பெற்றது.

மறுநாள் காலை- தன் தோழி ஒருத்தியுடன் வந்த அனிதாவுக்கோ பலகோடி பெறுமான ஆச்சரியங்கள்! ரிக்கியின் சிறப்பு வகை டிபன் வகையறாக்கள், களங்கமில்லாமல் சிரித்தபடியே சுறுசுறுப்பாகப் பரிமாறிக்கொண்டே பேசும்விதம், மற்றவர்களின் மகிழ்ச்சியைக் கண்காணித்து ஆனந்தப்படுவதில் அவனுக்குள்ள ஈடுபாடு எல்லாம் அனிதாவை வியக்கச் செய்தன. ஹரிஹரன், மாரா, பிரான்சிஸ் இருவரையும் அழைத்துக்கொண்டு, அனிதா வந்து அரைமணி நேரம் ஆனபிறகே வந்தார். டாக்டரின் வலது இடது கைகளான மாராவும், பிரான்சிஸும் சரியான கில்லாடிகள். தன்னுடைய அந்த இரண்டு புறாக்களையும் நன்றாகவே பக்குவமாய் பயிற்சி கொடுத்து இப்போது அழைத்து வந்திருக்கிறார் டாக்டர். ரிக்கியை அவர்களுக்கு அவர் அறிமுகம் பண்ணிவைத்தபோது, 'அப்போவ்' அவர்கள் என்ன மாதிரி நடந்துகொண்டார்கள்! பிரம்மாதமாய் நடித்துவிட்டார்கள்!

"என் பேரு மாரா. டாக்டர்கிட்ட கம்பவுண்டரா இருக்கேன். நான் அய்யா தயவுலே படிச்சு இந்த நிலைக்கு வந்தவன். நான் இருளர் இனத்தைச் சேர்ந்தவன்."

ரிக்கி, மனசுக்குள் "சூப்பர் ஆக்டிங்டா மகனே" என்று சொல்லிக் கொண்டான்.

"நான் பிரான்சிஸ். நான் தஞ்சாவூர்க்காரன். டாக்டர் சாருக்கு நான்தான் சமையல், காவல் எல்லாம்."

"கொப்புறானே" என்று ரிக்கி கூவிவிட்டான்.



"எங்க ஊர் பேச்சாச்சே இந்தக் 'கொப்புறானே', இது உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"சேலமா, மதுரையா, திருநெல்வேலியா, ராமநாதபுரமா, கோயம்புத்தூரா, தஞ்சாவூரா எந்த ஊரா இருந்தாலும், அந்த ஊர்க்காரங்களோட ஒருநாள் பழகிட்டாப் போதும். நான் அப்படியே அவுங்க ஊர் தமிழ்லே பேசுவேன்" -ரிக்கி அப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அனிதா அவனிடம் வந்து விட்டாள். அனிதாவைத் தூரத்திலிருந்து காட்டி தன் அப்பாவிடம் என்னமோ சொல்லிக்கொண்டிருந்தாள் சீதா. அவன் ரிக்கி வந்தது முதல் சிரிக்கத் தொடங்கிய அதிசயத்தைச் சொல்வதாய் இருக்கும்.

"ரிக்கி.. நீங்க வந்து.." இழுத்தாள் அனிதா.

"டேய் ரிக்கின்னு சொல்லு அனிதா. என்னை வா, போன்னு சொல்றவங்களைத்தான் எனக்குப் புடிக்கும்" -உண்மையாகவே சொன்னான் ரிக்கி.

"நேத்து ப்ராமிஸ் பண்ணது ஞாபகம் இல்லையா?"

அங்கே ஹாலின் ஓரத்தில் இருந்த மாஸ்டர் பியானோ மீது சாய்த்து வைத்திருக்கும் அந்தப் புல்லாங்குழலைக் காட்டினாள் அனிதா.

இத்தனைக்கும் மத்தியில் அதிகம் பேச விரும்பியும், பேச முடியாதவராய் நின்று கொண்டிருந்தார் சித்தார்த். நேற்றுவரை வெறிச்சோடிக் கிடந்த வீடு- இன்று பேச்சும் சிரிப்பும் ஆனந்தமுமாய் நிறைந்துவிட்டிருந்த மாற்றப் பொலிவை நினைத்து ஆச்சரியப்பட்டார். "நிம்மதியாய் உறங்க முடியாமல் தவித்த இந்த வீட்டில் இப்படி ஒரு உற்சவமா?" என்ற உச்சகட்ட உற்சாகம் அவருக்குள் ரகசியமாய்க் கசிவதை மற்றவர்கள் அறியமாட்டார்கள்.

ரிக்கி, புல்லாங்குழல் எடுத்துவிட்டான்.

"ஆன்ட்டி எனக்குப் பக்கவாத்தியம் நீங்கதான். நீங்க பியானோவுல உக்காருங்க" -ரிக்கி சொன்னபடி சீதா பியானோ விடம் போய் உட்கார்ந்தாள்.

"நான் கடம் வாசிப்பேன். என்னையும் சேர்த்துக்க முடியுமா?" கெஞ்சினார் டாக்டர். சிரித்தபடி சம்மதித்தான் ரிக்கி.

மாரா ஓடிப்போய் ஹாலில் பூக்களைச் சொருகி அழகுபடுத்தியிருந்த மண்பானையைக் கடமாக மாற்றி எடுத்து வந்து டாக்டரிடம் தந்தான்.

சித்தார்த்தின் கைகள் பரபரத்தன, தனது வயலினைத் தொடுவதற்கு. ஆனால் 'வீம்புக் கயிறு' அவர் கைகளைக் கட்டிவிட்டது

கையில் ஏதோ புத்தகம் ஒன்றைப் எடுத்துப் படிப்பதுபோல பாவனை செய்தார். அனிதாவோ ரிக்கியின் விரல்களும் உதடுகளும் நிகழ்த்தப்போகும் மாயாஜாலத்தை எதிர்பார்க்கும் பரபரப்பில் இருந்தாள். அவள் அழைத்து வந்தவன் அனிதாவின் சிநேகிதியாகத் தோன்றவில்லை. அனிதாவின் கட்டாயத்தால் துணைக்கு வந்தவன் போல, உற்சாகமாய் இருப்பவர்களையும் மந்தப்படுத்திவிடும் எரிச்சல் முகத்தோடு தெரிந்தாள். "அவள் மனசுக்குள் அப்படி என்ன குறை இருக்கிறதோ" என்று நினைத்துக்கொண்டாள் சீதா.

புத்தகத்தில் கண்களை வைத்திருந்த சித்தார்த் திடுக்கிட்டுக் கீழே குனிந்தார்.

அங்கே ரிக்கி அவர் காலைத்தொட்டு கண்களில் ஒற்றியபடி சித்தார்த் தன்னைச் சமாளிப்பதற்குள்..

"யூ ஆர் எ கிரேட் மாஸ்டர் இன் மியூசிக். உங்க இடத்துல ப்ளே பண்றதுக்கு நான் பெருமைப்படுறேன்" என்று எழுந்து நின்று சொன்ன ரிக்கி, சித்தார்த்தின் கண்களில் தெரிந்த திவ்யமான ஆச்சரியத்தையே ஆசீர்வாதமாக ஏற்றுக்கொண்டு புல்லாங்குழலை வாசிக்கத் தொடங்கினான்.

ரிக்கி இசைக்கத் தொடங்கிய ராகத்தைக் கேட்ட மாத்திரத்தில் சித்தார்த் புத்தகத்தைத் தூக்கியெறிந்துவிட்டு சப்பணம் போட்டு கீழே உட்கார்ந்துவிட்டார். அவன் அங்கே வந்த நாள் முதல், ரிக்கியை எரிக்கும்படி பார்த்தவர், இப்போது இமைக்காமல் பார்க்கிறார். ஒரு இசை பயிலும் மாணவனைப் போல நெஞ்சில் கைகட்டி அப்படி என்ன ராகம் வாசித்துவிட்டான் ரிக்கி?

'தோடி'.

அந்த அற்புத ராகத்தை- இந்த 'ரிக்கி' புல்லாங்குழலில் கொண்டு போகிறானே.. என்ன தெளிவு.. எத்தனை துல்லியம்.. நாதம் எத்தனை சுத்தம்! பரிசுத்தம்! சித்தார்த் கிறங்கிப்போனார், புளகாங்கிதத்தில்; 'எங்கிருந்தோ வந்தான் கண்ணன்' என்று அவர் உதடுகள் உச்சாடனம் பண்ணத் தொடங்கிவிட்டன. தன்னால் நான்கு தந்திகளை வைத்துக்கொண்டு வயலினில் வருடிப் பார்க்கும் அந்தத் தோடியை, புல்லாங்குழலின் ஆறு துளைகளின் மூலம் அந்தத் தோடியையே மயக்கிக் கொண்டிருக்கிறான் ரிக்கி. பாதிவரை ரிக்கிக்கு ஈடுகொடுத்த ஹரிஹரனும், சீதாவும் தங்கள் பக்கவாத்தியத்தை நிறுத்திக் கொண்டுவிட்டார்கள். அவர்களால் ரிக்கியிடம் தாக்குப்பிடிக்க முடியாதது ஒரு காரணம். ரிக்கியின் மாயநாதத்தில் அவர்கள் சிக்கிச் செயலற்றுத் தங்களை மறந்தது மறுகாரணம். 'அந்த வாசிப்பில்தான் எத்தனை நுணுக்கம், லாவகம். காற்று அலைகளைத் தன் மந்திர விரல்களாலும் பூவிதழ்



உதடுகளாலும் எப்படியெல்லாம் உருகச் செய்கிறான். ஒலியின் மென்மையை கைதேர்ந்த சிற்பியைப்போல எப்படி வருடுகிறான் ஆனந்தத்தின் ஊடே சோகரசத்தையும் கூடக்கலந்து தருகிறான். ஏன்? தன்னைச் சுற்றியிருக்கும் இந்த அன்புள்ளங்கள் தனக்கு நிரந்தரம் இல்லை என்ற ஏக்கமோ? இல்லை, இதுநாள்வரை அவன் அனுபவித்தறியாத பாசப்பிணைப்புகளின் ஐக்கியமா! சித்தார்த்தும் சீதாவும் அப்படித்தான் நினைத்தார்கள். "ரிக்கி.. நீயும் உன் நாதமும் போல எங்களோடு நீ நிரந்தர பந்தமாகிவிட்டாய். நீ ஒரு கொலைகாரனாய் இருந்தாலும் சரி, நேர்த்தியான- கூர்மையான- நிகரில்லாத, இசைக்குப் பிறந்தவன் நீ! இசைக்கப் பிறந்தவன் நீ! இனி, எங்கள் உள்ளம் எல்லாம் உன் கைப் புல்லாங்குழலாக இருக்கும்'' -மனதிற்குள் உரத்த சிந்தையாய்ச் சத்தியம் பண்ணிக்கொண்டிருந்தார் சித்தார்த்.

அங்கே, எல்லோரும் சொல்லி விளக்க முடியாத தியான நிலைக்குப்போய், அந்த ஹால் முழுவதும் ஒரு ஸ்தபதியின் கலைக்கூடம்போல, அசையாத பதுமைகள் நிரம்பியது போல ஆகிவிட்டது.

ரிக்கி வாசித்து முடித்தான். உதட்டிலிருந்து புல்லாங்குழலை எடுத்த பிறகு ரிக்கிக்கு மட்டுமே தன் கானம் முடிந்தது தெரிந்தது. மற்றவர்கள் எல்லாம் சில விநாடிகள் கழித்தே சுயஉணர்வுக்குத் திரும்பினார்கள்.

முதலில் ஓடோடி வந்து அந்த மகனைக் கட்டிப் பிடித்து உச்சி முகர்ந்து அவன் கன்னத்தில் வாஞ்சையோடும் பெருமிதத்தோடும் முத்தம் கொடுத்தவள் சீதா. ரிக்கிக்கு இதையெல்லாம் தன் மனதிற்குள் செய்கிறவளாய்க் கண்மூடித் திறந்தாள் அனிதா.

சித்தார்த், ஒருகாலை முன் வைத்தவர், நின்றுவிட்டார். அவருக்கு இப்பொழுது 'அவனை என்ன சொல்லிப் பாராட்டுவது' என்று தோன்றவில்லையே தவிர, சுயகௌரவப் பிரச்சினையோ, தான் மனம் மாறிவிட்ட தோரணையைக் காட்டிக்கொள்ள வேண்டாம் என்ற எண்ணமோ கிடையாது.

மாரா ஓடிவந்து ரிக்கியைத் தோளில் தூக்கிக்கொண்டு சுற்றிச் சுற்றி கூத்தாடத் தொடங்கினான்.

"ரிக்கி தம்பி, உன்னை எங்க சாதி ஜனத்துக்கிட்ட கொண்டு போயி, உன்னோட மகிமையைக் காட்டுறேன் பாரு. அப்புறம் என்ன நடக்கும் தெரியுமா? உன்னை கிருஷ்ணபரமாத்மாவா நினைச்சு எங்க இனத்தார் எல்லாம் உன்னைப் புடிச்சு வச்சுக்குவாங்க அப்புறம் நீ இங்கே வரவே முடியாது."

மாராவுக்கு அவன் வாசித்த ராகம் ரிக்கியைப் போலவே என்ன ஏதென்று தெரியாது. தெரிந்திருக்க வேண்டிய அவசியமும் இல்லையே. அதைத் தெரிந்துகொண்டவர் மாதிரி ஹரிஹரன் சொன்னார்.

"ரிக்கி, ஜாதி, மதம், மொழி, நாடு, எல்லை, எல்லாவற்றையும் தாண்டி மக்களை இணைக்கிற சக்தி இசைக்கு மட்டுமே சாத்தியம். ஏன்னா, அது கடவுளோட பாஷை. பராசக்தியோட தாய்ப்பால் நீ ரிக்கி இல்லே, ஞானசம்பந்தர். அதனாலதான் இந்த தெய்வீகக்கலை உனக்குள்ளே ஊத்தெடுத்திருக்கு." தன் தாயின் நினைவு வந்து ரிக்கி கண் கலங்கினான்.

அனிதா ஒருபக்கம் முகவாட்டத்துடன் தனியே உட்கார்ந்திருந்தாள். ரிக்கி அதைப் பார்த்து மாராவின் தோளை விட்டு இறங்கினான். சீதாவிடம் அனிதாவைக் காட்டினான். சீதா அனிதாவிடம் ஓடினாள்.

"என்ன அனிதா, என்னாச்சு உனக்கு?"

"ஒண்ணுமில்லே ஆன்ட்டி."

"அப்புறம் எதுக்கு அழறே?"

"எனக்கே தெரியலே."

இப்பொழுதுதான் சித்தார்த் அனிதாவிடம் வந்தார். அங்கிருந்தவர்கள் எல்லாம் தன்னையே வேடிக்கை பார்ப்பதை உணர்ந்த அனிதா எழுந்தாள். அவள் முகம் நிமிர்த்தவில்லை.

"என்ன அனிதா?" -அவள் முகத்தைத் தூக்கி அன்போடு கேட்டார் சித்தார்த்.

"அங்கிள், இதுமாதிரி, இவ்வளவு சந்தோஷமான நேரம் இதுக்கு முன்னாலே எனக்குக் கிடைச்சது இல்லே." அவள் இப்படிச் சொன்னது தனக்கும் பொருத்தமானதே என்று சித்தார்த் நினைத்தார். சீதாவும் அப்படித்தான் நினைத்தாள் என்பது அனிதாவுக்குத் தெரியுமா?

'இந்த வித்தையை நிகழ்த்திக் காட்டிய நிஜத்தின் பிறப்பிடம் ரிக்கியின் அன்பு மனம்தான்' என்று ஹரிஹரன் உள்ளுக்குள் வியந்தார்.

அனிதாவின் கூந்தலை சீதா வாஞ்சையுடன் வருட, "ஆன்ட்டி! எனக்குத் தினம் தினம் இந்த அதிர்ஷ்டம் கிடைக்குமா? அது எப்படி முடியும்?" என்று அனிதா கண் கலங்கியபொழுது தான் ரிக்கியும் தடுமாறி விட்டான். அனிதா அப்படிச் சொன்ன அர்த்தத்தோடுதானே அவனும் இவ்வளவு நேரம் வாசித்தான். அனிதாவின் ஏக்கத்திற்குத் தீர்வு சொல்ல வேண்டிய தகுதி



இப்பொழுது உண்மையிலேயே யாருக்கு உண்டு என்பதை சீதாவும், ஹரிஹரனும், ஏன் சித்தார்த்தும்கூட நொடிப்பொழுதில் தெரிந்துகொண்டார்கள். ரிக்கி அந்தத் தீர்ப்பைத் தீவிரமாக எதிர்பார்த்தான்.

'எப்பேர்ப்பட்ட பொதுப் பிரச்சினை இது? இதற்கு ஒரு முடிவு சொல்லவேண்டிய கட்டாயம் அனிதாவின் மூலம் வந்தது சாதாரண நிகழ்ச்சி அல்ல. இதற்கெல்லாம் காரணம் -ரிக்கிடம் இறைவன் ஒப்படைத்திருக்கும் கலைத்திறனும் மனிதமும்தான்' என்று பரிபூரணமாக நம்பினார் ஹரிஹரன்.

"அனிதா... இப்ப நான் சொல்லட்டுமா" என்று சொல்லி இடைவெளிவிட்ட சித்தார்த், கொஞ்சம் நிதானித்து, "உன்னோட ஏக்கத்தைப்பற்றி என்னைவிட உங்க ஆன்ட்டிக்கு அதிகமாத் தெரியும். இந்த நாள் மாதிரி தினம் தினம் உனக்குக் கிடைக்கிறதுக்கு உங்க ஆன்ட்டியே பொறுப்பு. கவலைப்படாதே" என்ற சித்தார்த் சீதாவைத் தனது பார்வையால் அருகில் அழைத்தார்.

'தன்னுடைய தீர்ப்பை எவ்வளவு திறமையாக சீதாவின் பக்கம் தன் மருமகன் திருப்பிவிட்டார்' என்பதில் ஹரிஹரனுக்கு அமோக மகிழ்ச்சி. சித்தார்த்தின் நிரந்தர அங்கீகாரம் ரிக்கிக்குக் கிட்டி விட்டது என்பதை சீதா புரிந்துகொண்டாள்.

ரிக்கியைக் கடந்து போகும் தருணத்தில் சித்தார்த் நின்றார். தன்னைப் பார்க்கவே கூச்சப்பட்டுக் கொண்டிருக்கும் ரிக்கியிடம், "உன்னை மாதிரிக் கலைஞன் இப்படி வளைந்து நிற்கக்கூடாது. நிமிர்ந்து நிற்க வேண்டும்" என்று அவன் மோவாயைத் தொட்டுச் சொல்லி, அவன் முகத்தை நிமிர்த்திப் புன்னகைத்துவிட்டுக் கடந்து போனார். அவரது பேச்சில் ஒரு நேர்மையான கலைஞனின் உண்மையான பாராட்டு இருந்தது. அதேநேரத்தில்... 'வளைந்து நிற்கக்கூடாது' என்ற வார்த்தைகளின் மூலம், தனது வீட்டிற்குள் ரிக்கி பிரவேசித்த முறை எப்படி முறையற்றது என்பதையும் ஆதங்கத்துடன் வெளிப்படுத்திவிட்டார் என்றுதான் ஹரிஹரன் அர்த்தப்படுத்திக்கொண்டார்.

மதியச் சாப்பாடு இவ்வளவு சீக்கிரத்திலா என்று ஹரிஹரன் யோசிக்கும்பொழுதே... ரிக்கி கூடுவிட்டுக் கூடு பாய்ந்த மாதிரி- தன் புல்லாங்குழலை எடுத்து வைத்துவிட்டு சுறுசுறுப்பான சமையல்கார வேஷத்தைப் போட்டுக்கொண்டு- டைனிங் டேபிளை அழகுபடுத்தி எல்லோருக்கும் பரிமாறத் தொடங்கிவிட்டான். அனிதாவிற்குத் துணையாக வந்த சிடுமூஞ்சிகூட இப்பொழுது முகமலர்ச்சியோடு- அனிதாவோடு போட்டி போட்டுக்கொண்டு ரிக்கிக்கு உதவியாகச் செயல்படத்

தொடங்கினாள். எல்லோரையும் உட்காரச் சொல்லிவிட்டு அனிதாவும் ரிக்கியும் சாப்பிடாமல், மற்றவர்களைக் கவனிப்பதிலேயே மும்முரமாக இருப்பதைக் கண்டு,

"இப்ப நான் யார் வீட்டுலே சாப்பிடுறேன்னு தெரியலே இதுலே விருந்தாளிங்க மாதிரி நாம்ப. விருந்து குடுக்கறவங்களா ரிக்கியும் அனிதாவும். அதனாலதான் இந்த சந்தேகம்" என்று வேடிக்கையாகப் பேச நினைத்த அப்பாவைப் பார்த்து சிறிதளவு கோபத்தோடு கீதா பதில் கொடுத்தாள்.

"இது ரிக்கி வீடுதான். அதுலே உங்களுக்குச் சந்தேகம் வேண்டாம்."

அந்தப் பதிலில் பரம திருப்திப்பட்ட ஹரிஹரன், ரிக்கியின் சமையல் ஆற்றலைப் புகழ்ந்து- பிரான்சிஸின் சமையலைத் திட்டித் தீர்த்து, கடைசியில் அனிதா-ரிக்கி இருவரையும் உட்காரச் சொல்லி கீதா பரிமாறி மகிழ்ந்தாள். ஹரிஹரன் தனது வீட்டிற்குப் புறப்படும் பொழுது ஏற்கெனவே கீதாவைக் கேட்டுக்கொண்ட மாதிரியே ரிக்கியைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு புறப்பட்டார். அதற்கு, அவர் சொன்ன காரணம்- "ஒண்ணுமில்லே கீதா.. ரிக்கியை இப்ப நான் அழைச்சிட்டுப்போறது எதுக்குன்னா, யாராச்சும் வயசான அம்மாவா பார்த்துக் கூப்பிட்டு ரிக்கிக்குத் திருஷ்டி சுத்திப் போடணும். அது ரொம்ப ரொம்ப முக்கியம்" என்றார்.

அதற்கு ஆமோதித்து கீதா உடனடியாகச் சம்மதித்தாலும், "உடனே பத்திரமா அனுப்பி வச்சிடுங்கப்பா" என்று கீதா அழுத்தமாகச் சொன்னாள்.

"வா அனிதா, உன்னை வழியிலே 'ட்ராப்' பண்றோம்." என்று ரிக்கி அழைத்தபோது, அந்த அழைப்பில் இருந்த நெருக்கமான அன்பும் அக்கறையும் அனிதாவிற்குத் தந்த வெட்கமும், மகிழ்ச்சியும் எப்படிப்பட்டது என்பதை கீதா மட்டுமே உணர்ந்தாள். ஆனால், "அனிதா இங்கே என்னோடு இருக்கட்டும். அனிதாவின் ஃப்ரண்டை மட்டும் நீங்க ஹாஸ்டலில் 'ட்ரஸ்' பண்ணுங்க" என்றாள் கீதா.

அவர்கள் புறப்பட்டுச் சென்றதும், தனது அறைக்குள் அனிதாவை அழைத்துச் சென்ற கீதா, நேற்று அவளுக்குக் கொடுத்திருந்த வாக்குறுதியை மறக்காமல் அந்த 'சஸ்பென்ஸ்' என்னவென்பதை அனிதாவிடம் ஒரு குழந்தையின் குதூகலத்தோடு போட்டு உடைத்தாள். 'எதிர்பாராத அந்த உண்மையை' அறிந்த மாத்திரத்தில் அனிதா உறைந்து போனாள். எதுவும் பேசமுடியாது கீதாவின் மடியில் படுத்து அவள் அழுது தீர்த்தாள் ஆனந்தத்தோடு.



# 13

ஹரிஹரன் வீட்டை விட்டு அன்று இரவு நகர மறுத்துவிட்டான் மாரா. ஹரிஹரன் எப்பொழுதுமே மாரா, பிரான்சிஸ் இருவரையும் வேலையாட்களாய் நினைத்ததில்லை. அவர்கள் இருவருமே தன் குடும்பத்தினர்தான் என்று நினைக்கிற மனப்பாங்கு அவருடையது. அதனால் அவர்களையும் பக்கத்தில் உட்காரச் சொல்லி, சித்தார்த்தின் வீட்டினுள் ரிக்கி பிரவேசித்தது முதல் நடைபெற்ற எல்லா நிகழ்ச்சிகளுக்கும் காரணமான அடிப்படை நோக்கத்தை ரிக்கியிடம் விவரமாக இப்போது கேட்க அவசரப்பட்டார்.

"இப்படியெல்லாம் நடந்துகொள்ள உனக்கு அவசியம் என்ன?"

"ஆன்ட்டியும் அவுங்க ஹஸ்பெண்டும் வச்சிருக்கிற ஆர்க்கெஸ்ட்ரா ட்ரூப்புக்கு என்ன பெயர் சொன்னீங்க?"

"ஹார்மோனி!"

"அவங்களோட ஆர்க்கெஸ்ட்ராவுலே, அவங்க ரெண்டு பேரும் ஒருத்தருக்கொருத்தர் புரிந்துகொண்டு, எத்தனை அழகா இணைஞ்சு, இசைக்கிறாங்க. அந்த ஒருங்கிணைந்த கீதம்- ஹார்மோனி எல்லாம் ஆன்ட்டி வீட்டுல இல்லவே இல்லேன்னு தெரிஞ்சப்ப நான் எடுத்த அதிரடி நடவடிக்கைதான் இது."

"இந்த தைரியம் உனக்கு எப்படி வந்துச்சு?"

"ஒரு உயிரைக் காப்பாத்தனும்னு வெறி வந்துட்டா முடவன்கூட சமுத்திரத்துலே நீச்சல் அடிப்பான்னு படிச்சிருக்கேன்."

"இதுலே எவ்வளவு ரிஸ்க் இருக்கு தெரியுமா?"

"நீங்க அன்புக்கு எத்தனை வலிமை இருக்குன்னு சொல்லிக் குடுத்தீங்க. அப்புறம் ரிஸ்க்கைப் பத்தி நான் ஏன் கவலைப்படணும்?"

"சரி. நீயே எழுதி அவுங்ககிட்டே கொடுத்த கடிதத்துலே, உன்னைப் பெத்த தாய்க்கு எப்பேர்ப்பட்ட அவப்பெயரை உண்டாக்கிட்டே அது உனக்குத் தெரியுமா?"

"சார், திருப்பி வேண்ணாலும் அந்த லெட்டரை இன்னும் பல தடவைப் படிச்சுப் பாருங்க... ஒரு பெண் தன் மகனை அவனுடைய தகப்பன்கிட்ட அனுப்பின அர்த்தமே அதுலே சுத்தமா கிடையாது. யாரோ ஒரு ஏழை, அது ஆணோ, பெண்ணோ, தன்னோட மகனுக்கு இரக்கம் காட்டி அடைக்கலம் கொடுக்கும்படியா உங்க மருமகனைச் கெஞ்சுற மாதிரித்தான் எழுதியிருக்கேன்."

தன்னைத் திகைத்துப் பார்த்த ஹரிஹரனிடம் தொடர்ந்து ரிக்கி சொன்னான்-

"எனக்கும் உங்களுக்கும் பிறந்த பிள்ளைதான் இந்த ரிக்கி'ங்குற பொருள் படும்படியா அந்த லெட்டர்லே நான் எழுதலே. ஆனா, லெட்டரைப் படிச்சதும் அவுங்களுக்கு ஏற்பட்ட மன அதிர்வுலே, அவுங்களா அப்படித் தீர்மானிச்சுக்கிட்டாங்க. ஏற்கெனவே அவுங்களுக்கு இருந்த கசப்பான மனநிலையிலே, ஆழமாப் படிக்காம, அவசரமா வேற அர்த்தம் எடுத்துக்கிட்டாங்க. அதை நான் எதிர்க்கவும் இல்லே, மறுக்கவும் இல்லே. காரணம், நான் எதிர்பார்த்ததே அதைத்தான். அதுதான் உண்மை. மென்மையானவங்களுக்கு திடீர் அதிர்ச்சி ஏற்படும்போது அவங்களுடைய நிதானம் காணாமப் போயிடும்னுதான் படிச்சிருக்கேன். இனி அவங்க ரெண்டு பேரும் பிரியமாட்டாங்க. ஆன்ட்டியோட புத்திர ஏக்கம் ஜெயிச்சிடுச்சு. என்னை அவங்களோட தத்துப் பிள்ளையா நான் நினைக்கிற மாதிரி, நீங்களும் நினைச்சுக்குங்க டாக்டர் சார்."

"எத்தனை காலத்துக்கு உன்னாலே இப்படி நீடிக்க முடியும்? நீ யாருங்குற உண்மை அவங்களுக்கு என்னைக்காவது ஒருநாள் தெரியாமப் போகாது ரிக்கி."

"அப்படி அவுங்க தெரிஞ்சுக்காம இருக்குறதுக்கு உங்களோட ஒத்துழைப்பு எனக்கு இருந்தாப் போதும்."



"அது எப்படி?"

"இன்னைக்கி மாதிரியே, என்னை முன்னே பின்னே தெரியாத மாதிரி நீங்களும், மாரா, பிரான்சிஸ்ஸும் தொடர்ந்து நடிச்சா போதும்."

"நாங்க நடிக்கலாம். உன்னைத் தெரிஞ்ச வேற யாராவது உன்னைக் காட்டிக் குடுத்துட்டா?"

"என்னைத் தெரிஞ்சவங்கள்லாம் எங்க வீட்டு ராமய்யா, கல்யாணி, அவுங்களோட எஜமான், எஜமானிதான். ஆனா, ஜெனரேஷன்ஸ் அப்பார்ட்மெண்ட் ஜனங்களும் சரி, ராமய்யா கல்யாணியும் சரி, எங்க அப்பா காட்டுன அழுகின பிணத்தை நான்தான்னு இப்பவும் நம்பிட்டிருக்காங்க. இப்ப என்னைத் தெரிஞ்சவங்க நீங்க மூணு பேரும்தான். அதனாலதான் உங்க உதவியைக் கேக்குறேன். ஆனா ஒண்ணு மட்டும் நிச்சயம் சார். சீதாம்மாவோட தாய்மையான பாசத்துக்கு முன்னாலே நான் அவங்க வயித்துலே பிறந்தவனாவே என்னை நினைக்கிறேன். அவங்களோட குடும்ப சந்தோஷத்துக்காக மட்டும் இல்லே, எனக்குக் கிடைச்சிருக்கிற இன்னொரு தாயான அவங்களை விட்டும் நான் என்னைக்குமே ஓடமாட்டேன் சார்."

"ரிக்கி.. பெத்த தகப்பனா இருந்தும் என்னாலேயே என் மகனோட எதிர்காலத்தைக் காப்பாத்ற வழி தெரியாம தவிச்சிக்கிட்டிருந்தேன். என்னோட வேடிக்கையான பேச்சு, சிரிப்பு எல்லாம் செயற்கையான ஒண்ணுங்குறது யாருக்குமே தெரியாது. ஆனா எங்கிருந்தோ வந்த நீ மட்டும் என் மனசைப் புரிஞ்சிக்கிட்டு, என் மகளுக்கு மகனா வந்து என் வேதனையைப் போக்கிட்டே. இது எப்படி இருக்குன்னா.. மழை, வெள்ளத்தாலே மத்தவங்கள்லாம் மடிஞ்சு பரிதவிக்கிறப்ப, என் வீட்டுக் கிணறு மட்டும் நிறைஞ்சு வழியுதேன்னு சந்தோஷப்படுறவன் மாதிரி! நீ உன்னையே அடமானம் வச்சு, உனக்கு வரப்போற சிக்கலையும் பாதிப்புகளையும் சந்திக்கத் தயாராகி, அவுங்க ரெண்டுபேரையும் ஒண்ணு சேர்த்து வைக்கப் போறதைப் பார்த்து நான் சுயநலத்தோட சந்தோஷப்படுறதும் அப்படித்தான் இருக்கு."

ஹரிஹரன் முதன்முறையாக இப்படி மனம் திறந்து வெளிப்படையாகப் பேசின விதத்தை இன்றுதான் பார்க்கிறார்கள் மாராவும் பிரான்சிஸ்ஸும்.

போன் அடித்தது.

ஹரிஹரன் எடுத்தார். சீதாதான்.

"என்னப்பா இன்னும் எவ்வளவு நேரத்துக்குத்தான் ரிக்கிக்கு

திருஷ்டி சுத்திட்டிருப்பீங்க.. மழை போட ஆரம்பிச்சிருச்சு. ஸ்வெட்டர் கூட போடாம அவன் வந்திருக்கான். உடனே இப்பவே ரிக்கிய உங்க காரிலே கொண்டாந்து விடுங்க. நான் வாசல்லியே நிப்பேன், குடையே பிடிக்காம. ஞாபகத்துலே வச்சுக்குங்க.." ஹரிஹரன் பதில் சொல்வதற்குள் பொறுக்காமல் அந்தத் தாய் உள்ளம் போனை வைத்துவிட்டது. ஹரிஹரன், கண்களில் துளிர்த்த நீரைத் துடைத்துக்கொண்டார்.

"ரிக்கி என் மகளுக்குக்கூட உனக்குக் கிடைச்ச மாதிரியான தாய்ப்பாசம் கிடைச்சதில்லே. அவ பிறந்து மூனு வருஷத்துலேயே அவங்க அம்மா இறந்துட்டா. வாப்பா, சீக்கிரம் போகலாம் 'உங்க அம்மா குடைபிடிக்காம மழையிலே நிற்கிறாளாம்."

ஹரிஹரன் சொல்லி முடிப்பதற்குள் ஓடோடிப் போய்க் காரில் உட்கார்ந்துவிட்டான் ரிக்கி.

கோயம்புத்தூர் 'ஜெனரேஷன்ஸ்' அபார்ட்மெண்ட் காம்பவுண்டுக்குள் ஹரிஹரனின் கார் வந்து நின்றது. ஊட்டியிலிருந்து வருகிற வழியெங்கும், இப்பொழுது, லிஃப்டில் மூன்றாவது ஃப்ளோருக்குப் போய்க் கொண்டிருக்கும் பொழுதும்கூட, டாக்டரின் மனத்தில் திரும்பத் திரும்ப ஒரே ஒரு கேள்விதான்; அவரால் சரியா, தப்பா என்று முடிவு செய்ய முடியாத ஒன்றாய் அது நிலைகுத்தி நிற்கிறது. ரிக்கி இறந்து விட்டான் என்று நினைத்துக்கொண்டிருக்கும் எல்லோருக்கும், ரிக்கி இப்பொழுது ஊட்டியில் உயிரோடு இருப்பதைச் சொல்வது பல விபரீதங்களை உருவாக்கும். ஆனால் தனது சிநேகிதர்களில் ஒருவருக்கு மட்டும் தெரிவிக்க வேண்டும் என விரும்புகிறார். அந்த ஒருத்தர் விஸ்வநாதய்யர். ஓய்வு பெற்ற கல்லூரிப் பேராசிரியர். ஞானஸ்தர். கண்ணியமானவர். அவரிடம் உண்மையைச் சொல்வதன் மூலம் ரிக்கியின் எதிர்காலப் பாதுகாப்புக் குறித்து ஒரு நல்ல முடிவுக்கு வரலாம். ஆனால், என்னதான் விஸ்வநாதய்யர் ஹரிஹரன் சொல்வதை மற்றவர்களிடம் மறைத்தாலும் அவருடைய மனைவியிடம் சொல்லாமல் இருப்பாரா? அங்கேதானே எந்த ஆண்பிள்ளையும் தோற்றுப் போகிறான். அதை நினைத்துப் பயந்துகொண்டு விஸ்வநாதய்யரிடம் சொல்லாமலே விட்டுவிட்டால், நாளைக்கே ரிக்கியைப் பொறுத்தவரை ஏதாவது வில்லங்கம் முளைத்தால், "எல்லாம் முத்தின பின்னாலே பேஷன்ட்டைக் கொண்டாந்திருக்கீங்களே, கொஞ்சம் முன்னாடியே கொண்டு வந்து காட்டியிருக்கக்கூடாதா? இப்பொழுது என்னால் என்ன செய்ய முடியும்?" என்று பலபேரிடம் தனது டாக்டர் தொழிலில் தான் வழக்கமாய்ச் சொல்லி வரும்



கைவிரிப்புப் பேச்சுத்தான் அவரது நினைவிற்கு வந்தது.

"வாங்க வாங்க.. லோகி, இங்கே யார் வந்திருக்கா பாரு"- ஹரிஹரனை வரவேற்ற விஸ்வநாதய்யர் உற்சாகத்தோடு மனைவியைக் கூப்பிட்டார். 'லோகி' என்ற லோகநாயகி காப்பியுடன் சிரித்துக் கொண்டு வருவாள் என்று நினைத்தால், அந்த அம்மாள் துக்கக் கலக்கம் போகாத மனுஷிமாதிரி, "வாங்க சௌக்கியமா?" என்று சுரத்தே இல்லாமல் மாமூல் உபசரணை செய்தாள்.

"என்ன விஸ்வம்? அவங்களுக்கு உடம்புக்கு ஏதாச்சும் முடியலையா?" -ஹரிஹரன் அப்படி நினைத்துத்தான் கேட்டார். அப்புறம் விஸ்வநாதய்யர் விபரம் சொன்னதும்தான் ஹரிஹரனுக்குப் புரிந்தது.

"அந்தப் பையன் ரங்கராஜன் போனதுலேருந்து, இந்த அபார்ட்மெண்ட்டுலே எல்லோரும் அவா அவா ஆத்துலே இன்னமும் துக்கம் கொண்டாடிண்டிருக்கா. இப்ப உங்களைப் பார்த்ததும் இவளுக்கு நீங்களும் துக்கம் விசாரிக்க வந்த மாதிரித் தோணிருக்கு. நீங்களும் இங்கே வர்றப்ப எல்லாம் அவனைப் பத்தித்தானே நாம பேசுவோம்."

ஹரிகரன் குழம்பிவிட்டார். "யார் அந்த ரங்கராஜன்" என்றார்.

"அதான் ஹரி.. ரிக்கி! அவனோட முழுப்பேரு ரங்கராஜன் ஆச்சே. ஷார்ட்டா செல்லமா 'ரிக்கி'ன்னு, யாரு அவனை அப்படிக் கூப்புட ஆரம்பிச்சாங்கன்னு இதுவரைக்கும் யாருக்கும் தெரியாது."

பத்திரிகையில்கூட 'ரிக்கி' என்கிற 'ரங்கராஜன்' என்று வந்திருந்ததைப் படித்த ஞாபகம் இப்பொழுதுதான் ஹரிஹரனுக்கு வந்தது.

"நீங்க அந்த ரிக்கி ஃப்ளூட் வாசிக்கறதைக் கேக்கணும்னு ரொம்ப ஆசைப்பட்டீங்க. கடைசிவரை அது நிறைவேறாமலே போயிடுத்து. காப்பி சாப்பிடுங்கோ."

ஹரிஹரன் நிலைதான் பரிதாபம். தினம் தினம் அவர் இப்பொழுது ரிக்கியின் முகத்தைப் பார்ப்பதையும், அவனுடைய கானத்தைக் கேட்பதையும், இவர்களிடம் சொன்னால் எப்படியிருக்கும்? "நடப்பது எதுவுமே தெரியாத இவர்கள் இப்போது எனக்காகப் பரிதாபப்படுகிறார்கள்." என்று நினைத்துக் கொண்டார். மீண்டும் ஹரிஹரனுக்கு அந்தச் சந்தேகம். இவர்களிடம் சொல்வதா, இல்லை மறைப்பதா? எது சரி?

"ஹரி.. நீங்க பேப்பர்ல படிச்சிருப்பீங்களே.. ரிக்கியோட டெத்தைப் பற்றி?"

"படிச்சேன்."

"கொலையா தற்கொலையான்னு குழம்புறதாச் சொன்ன போலீஸ், இப்ப 'தற்கொலை'ன்னு ஸ்டேட்மெண்ட் குடுத்திருக்கா..."

"அது எப்படி? முதல்லே அந்தப் பிணம் ரிக்கிதானான்னு அவுங்க எப்படி முடிவுக்கு வந்தாங்க?" -ஆத்திரப்பட்டார் ஹரிஹரன்.

"ஹரி... ரிக்கியோட அப்பா நினைச்சதைச் சாதிக்கிறதுல மஹா அரக்கன். அவன் மனசு வச்சான்னா, இந்தப் புரபஸர் வைத்தியநாதய்யர்தான் என் மகனைக் கொன்னுட்டான்னுகூட கேஸை ஜோடனை பண்ணிடுவான். அந்த மாதிரியான பேர்வழிக்கு ஏத்தாப்ல அந்த அதர்ம பத்தினி காமினி. அவளோட சைத்தான் மூளையிலே கால்வாசிகூட, பம்பாய் பூரா குண்டு வச்சு நாசம் பண்ணவாளுக்கு இருக்க முடியாது. அவ திட்டம் போட்டான்னா புருஷன்காரனையே பஜ்ஜி பண்ணிடுவா. இப்ப மட்டும் என்ன... ரிக்கி இல்லேன்னு ஆனதுக்கு அப்புறம் அந்த வீட்டுக்குள்ளே அந்த ராட்சஷி என்னென்னமோ செஞ்சிட்டிருக்கிறதா புரளி வந்திட்டிருக்கு."

"என்ன புரளி?"

"புரளின்னாலே அதுல தம்பிடி அளவுக்கு உண்மை இருக்கும். அதை உங்ககிட்டே சொல்லி வதந்தியைப் பரப்ப எனக்கு இஷ்டம் இல்லே."

-வைத்தியநாதய்யர் எதையோ சொல்லத் தயங்குவதை ஹரிஹரன் புரிந்துகொண்டார்.

இப்பேர்ப்பட்ட மனுஷனிடம் ரிக்கி உயிரோடு இருப்பதைச் சொல்லாமல் இருப்பது நல்லது என்று முடிவு பண்ணிவிட்டார் டாக்டர் ஹரிஹரன். மற்ற ஃப்ளாட்களில் இருந்த இதர நண்பர்கள் வந்து, தான் எதையாவது உளறிவிடுவதற்குள் அங்கிருந்து போய்விடுவது நல்லது என்று நினைத்தார். ஆனால், அவர் புறப்பட்டு வந்த நோக்கத்தில் ஒன்று மிச்சமிருக்கிறதே.

"ஏன் மிஸ்டர் வைத்தி... ரிக்கி வீட்டுலே ராமய்யான்னு ஒரு சமையல்காரர் இருக்காரா?"

"ஓ... கிருஷ்ண பக்தரா? அவர் பெயர் உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"நம்ம ஃப்ரண்ட்ஸ், இங்கே, எப்பவோ ரிக்கி பத்திப் பேசினப்போ, எங்கிட்டே சொன்ன ஞாபகம்!"

"அந்த ராமய்யா சாதாரண சமையல்காரர் இல்லே. ஒரு மகா



புருஷன். எங்க மாதிரி ஆசார வேஷம் போடுற மனுஷா எல்லாம் அவர்கிட்டேதான் மனுஷான் எப்படி நிஜமா வாழணும்னு கத்துக்கணும். நீங்க கேட்டா நம்பமாட்டேள். ரிக்கி இறந்துட்டான்னு தெரிஞ்சதும் 'என் ரிக்கி சாகலே, அவன் சாகமாட்டான்'னு புலம்பிட்டு, பித்துப்பிடிச்ச மாதிரி இன்னைக்குவரைக்கும் அந்தக் கிருஷ்ணன் கோயில்லேயே விழுந்து கிடக்கிறார். ரொம்பவும் அன்பான எஜமானியாட்டம் நடிச்சுட்டு அந்த காமினி மட்டும் அப்பப்ப கோயிலுக்குப் போயி அந்த ராமய்யாவைப் பார்த்துட்டு வந்திட்டிருக்கா. எல்லாம் வேஷம்."

"அந்த ராமய்யாவை நான் பார்க்கணுமே?"

"எதுக்கு நீங்க பார்க்கணும்?"

"ராமய்யாவுக்குப் பூர்வீகம் எல்லாம் ஊட்டிதான்னு நம்ப நண்பர் வின்செண்ட் அடிக்கடி எங்கிட்டே சொல்லியிருக்கார். அதான் அவரைப் பார்த்தா, என்னாலான உதவிய அவருக்குச் செய்ய முடியும். அதுவும், நீங்க எல்லோரும் நேசிச்ச அந்த ரிக்கிக்கு செய்யற மாதிரியான ஒரு திருப்தி உங்களுக்கும் கிடைக்கும். அந்த ராமய்யாவை ஊட்டியிலே இருக்கிற அவரோட பந்துக்களோட என்னாலே சேர்த்துட முடியும்."

-அபாரமாய் புளுகி சமாளித்து ஜெயித்துவிட்டார் ஹரிஹரன்.

"உங்களுக்கு நல்ல மனசு ஹரி. அந்த ரிக்கி உயிரோட இருந்தவரைக்கும் அவனுக்கு ஆறதலாகவும், பக்கபலமாகவும் இருந்தது ராமய்யாதான். வாங்க, இப்பவே போகலாம். ஆனா, ஒரு கண்டிஷன்... உங்களைக் கோயில்வரை அழைச்சிட்டுப்போய் ராமய்யாவைக் காட்டிட்டு ஓடி வந்திடுவேன். நீங்க மட்டும் தனியாய்ப் போய் அவர்கிட்டே பேசுறது உத்தமம். ஏன்னா நான் ராமய்யாகிட்டே பேசுறதை யாராவது பார்த்துச் சொல்லிட்டா போச்சு. அதுக்கு ஆயிரம் அர்த்தம் எடுத்துட்டு அந்த துர்தேவதை காமினி எனக்கு என்ன கெடுதல் செய்வான்னு சொல்ல முடியாது."

அவர் அப்படிப் பின்வாங்கிப் பேசியதும் ஹரிஹரன் எதுவும் சொல்லவில்லை.

"அப்பேர்ப்பட்ட தைரியசாலியா நீர்...? உன்னை மாதிரி ஜென்மங்கள் இருக்குறதாலேதான் இப்பல்லாம் அதர்மம் சத்தியத்தை முதல் ரவுண்ட்டிலேயே 'நாக்-அவுட்' பண்ணிடுது" -உள்ளுக்குள் கொதித்தார் ஹரிஹரன்.

# 14

கிருஷ்ணன் கோயிலில் இத்தனை நாளாய் தவம் கிடந்த ராமய்யா, ஹரிஹரன் சொன்னதையெல்லாம் கேட்டதும் கண்ணீர்விட்டபடி, "கிருஷ்ணா... கிருஷ்ணா... என் பிரார்த்தனை வீணாப் போகலே. எங்க ரிக்கியை நீதான் இந்த நல்லவங்ககிட்டே கொண்டு சேர்த்திருக்கே. பகவானே..." குழந்தைபோல விம்மிவிட்டார் ராமய்யா. "இப்பவே நான் தம்பியைப் பார்க்கணுங்களே" -ராமய்யா கையெடுத்துக் கெஞ்சியபொழுது, "அவசரப்படாதீங்க. நேரம் வரட்டும். உங்ககிட்டே மட்டும்தான் அவன் உயிரோட இருக்கிறதப் பத்தி ரிக்கி சொல்லச் சொன்னான். அதுதான் ஓடிவந்தேன். இப்ப, நீங்க மறுபடியும் ரிக்கி வீட்டுக்கு வேலைக்குப் போய்ச் சேரணும்."

"எதுக்குய்யா அந்த நரகத்துக்கு?"

"காரணம் இருக்கு. ரிக்கி இருக்கிறது அந்த காமினிக்கோ அந்த மனுஷனுக்கோ எப்பவாவது தெரிய வந்தா மறுபடியும் ரிக்கிக்கு அவுங்களாலே சோதனைகள் தொடங்கிவிடும். அப்படி அவங்களுக்குத் தெரியும் பட்சத்திலே, என்னை நீங்க தொடர்பு கொண்டீங்கன்னா_ ரிக்கியை பத்திரப் படுத்த எனக்குச் சௌகரியமா இருக்கும்."

"வாஸ்தவம்தான்யா. ரிக்கி செத்துட்டதை இவங்களே நிச்சயப்படுத்தினவுடனே அந்த காமினி செஞ்ச முதல் காரியம் என்ன தெரியும்ங்



களா? ரிக்கிக்கு சேரவேண்டிய சொத்து பங்கையெல்லாம் அந்தப் பொம்பளை தன் பேருக்கு எழுதி வாங்கிருச்சு. நீங்க சொன்ன மாதிரி ரிக்கி விஷயம் அவளுக்குத் தெரிஞ்சா ரிக்கிய ஆளைவச்சு தீர்த்திடுவா. இப்ப ரிக்கி அப்பாவோட நிலைமையே மோசமா இருக்கு. சொத்து பத்து ஒண்ணுகூட இப்ப அவர் பேருலே இல்லே. அந்த ஆளை சதாகாலமும் குடிக்கவச்சு, அவரைக் கண்ட கண்ட பத்திரத்துலயும் கையெழுத்து வாங்கிருச்சு. நாளைக்கே காமினி அவரை வெளியே போடான்னா ரிக்கி அப்பா தெருவுக்கு வாவேண்டியதுதான். தற்சமயம் அந்த அரக்கி அதைச் செய்யாம இருக்கக் காரணம்- அவளுக்கு மட்டும் ரிக்கி சாகலேங்குறது தெரியும். அவ சொல்லித்தான் யார் பிணத்தையோ தன் பிள்ளைன்னு இந்த ஆள் போலீஸ்கிட்ட சத்தியம் பண்ணிச் சொன்னார். அதுமட்டும் இல்லே_ ரிக்கி அம்மாவை அந்த ஆள் எப்படி மோசடி பண்ணி, கோர்ட்டுலே கேவலமான பொய்யைச் சொல்லி சாகடிச்சாருங்குற உண்மை காமினிக்குத் தெரியும். அதுக்குப் பயந்துதான் அந்த மனுஷி சொல்றதுக்கெல்லாம் அந்த ஆள் ஆடிக்கிட்டிருக்காரு. இப்பக்கூட என்னை இங்கே வந்து அந்தக் காமினி அப்பப்ப வந்து எட்டிப் பார்க்குறது ஏன்? ரிக்கி அம்மா இறந்த காரணம் எனக்கும் தெரியும்ங்கறதாலதான்."

ஹரிஹரனுக்கு இது புதிய சேதியாக இருந்தது. ராமய்யாவே சொன்னார். "சார், உங்களுக்குத் திகைப்பா இருக்கா? இதுக்கு நான் சாட்சி. தன் அம்மா எதுனாலே தற்கொலை பண்ணிக்கிட்டாங்க; அதெல்லாம் ரிக்கிக்கு தெரியவே தெரியாதுய்யா. இங்கேருந்து ரிக்கி போகும்போது, ஒரு சிவப்புக் கவர்லே வச்சு இதைப்பத்தியெல்லாம் விளக்கமாக எழுதின ஒரு கடுதாசியை ரிக்கிக்கிட்டே குடுத்தேன். நீ பெரிய ஆளா நிமிர்ந்து நின்னதுக்கு அப்புறம் அதைப்படிச்சுப் பாருப்பான்னு சொல்லியிருக்கேன்."

ஊட்டிக்குத் திரும்பிய ஹரிஹரன் நேராக மகள் வீட்டிற்குத்தான் போனார். ராமய்யா கொடுத்து அனுப்பிய செம்பருத்திப் பூக்களும் அவரோடு பத்திரமாக வந்திருந்தன.

'அந்தச் சிவப்பு நிறம் கொண்ட கடித உறையை ரிக்கியிடமிருந்து அவனுக்குத் தெரியாமல் மறைத்துவிட வேண்டும்' என்பதுதான் ஹரிஹரனின் இப்போதைய நோக்கம்.

பங்களாவினுள் அவர் நுழைந்தபொழுது தோட்டக்காரரும் வாட்ச்மேனுமான மல்லையாதான் இருந்தான்_ மற்றவர்கள்?

"சார், அய்யாவும் அம்மாவும் ரிஹர்சல் ஹாலுக்குப் போயிருக்கார்கள்" -மல்லையா, கன்னடம்.

"ரிக்கி?"

"இப்போ அனிதா வந்தாள், அவள்கூட ரிக்கியும் போயிருக்கார்."

"சரி, இந்தப் பூவையெல்லாம் ரிக்கி ரூம்ல வைக்கணும்" செம்பருத்திப் பூக்கள் கொண்ட பிளாஸ்டிக் கூடையுடன் வீட்டினுள் நுழைந்தார் ஹரிஹரன்.

ரிக்கியின் அறைக்குள் பூக்களை வைத்தவருக்கு, ரிக்கியின் பெட்டியிலிருந்து ராமய்யா குறிப்பிட்ட அந்த அந்தரங்கக் கடிதத்தைக் கைப்பற்றுவது சுலபமாக இருந்தது.

ராமய்யா அவரிடம் ராஜலட்சுமி அம்மாளின் துயரமான முடிவை விபரமாகச் சொன்னதைக் கேட்டது முதல், அந்தக் கடிதத்தைத் தப்பித் தவறி ரிக்கி படிக்க நேரிட்டால், அது ரிக்கியின் தற்போதைய சுபாவத்தைத் தலைகீழாக மாற்றி அவனின் எதிர்காலத்தையே நாசமாக்கிவிடும் என்று பயந்தார். எந்தக் காலத்திலும் தாயின் மரணத்துக்கான கசப்பான காரணங்களை ரிக்கி அறியவே கூடாது என்பது அவருடைய அறிவுபூர்வமான முடிவு. 'கடிதத்தை உடனே எரித்துவிடலாமா' என்று நினைத்தவர், 'வேண்டாம்' என்று தீர்மானித்து தன் பாக்கெட்டில் பத்திரப்படுத்திக்கொண்டு புறப்பட்டுவிட்டார்.

"மல்லையா... நான் ரிஹர்சல் ஹாலுக்குப் போறேன்..." என்றபடி காரில் ஏறி உட்கார்ந்தார்.

ரிஹர்சல் ஹால், ஆல்பர்ட் மெமோரியல் கான்வென்ட்டிற்குப் பக்கத்தில்தான். அந்த நீண்ட பெரிய ஹாலில்தான் சித்தார்த் இசைக் குழுவினரின் இசை நிகழ்ச்சிகள் நடைபெறுவது வழக்கம். "மிஸ்டர் சித்தார்த், வருகிற 15-ம் தேதி தென்னாப்பிரிக்க நாட்டு அரசு அதிகாரிகளுடன் அவர்களுடைய கலாச்சார தூதுக்குழு ஊட்டிக்கு வருகிறார்கள். அவர்கள் எனக்கு கூறிய விண்ணப்பமே உங்கள் இசை நிகழ்ச்சியைக் கேட்கவேண்டும் என்பதுதான். இதன்மூலம் அவர்கள் விருப்பத்தை நிறைவேற்றுவதோடு- ஊட்டியின் கௌரவத்தையும், மதிப்பையும் மேலும் மெருகூட்டிக் காட்டும் சந்தர்ப்பமாக இது அமையும் என்று நம்புகிறேன்"- இப்படி மாவட்ட கலெக்டர், சித்தார்த்துக்கு அன்பான கோரிக்கையை விட்டிருந்தார். அதற்கான ஒத்திகைதான் இப்பொழுது தீவிரமாக நடந்துகொண்டிருக்கிறது. போலீஸ் உதவி கமிஷனர், பிரபலமான டாக்டர்கள், ஆடிட்டர்கள், அட்வகேட்டுகள்... இப்படி அடுக்கிக் கொண்டே போகக்கூடியவர்களின் கைகளில் இசைக் கருவிகள். சித்தார்த் அவர்களைப் பக்குவப்படுத்தும் பணியில் கடுமையாக ஈடுபட்டிருக்க, வயலின் வாசிப்பவர்களின் பகுதியில் சீதா... அந்த



வி.ஐ.பி.க்களான இன்ஸ்ட்ருமென்ட் ப்ளேயர்கள் தங்கள் தகுதி, வயது அனைத்தையும் மறந்து பள்ளிக்கூடப் பையன்கள் மாதிரி அடக்க ஒடுக்கமாக, கொஞ்சம் நடுக்கமாகவே, சித்தார்த்தின் பயிற்சிக்குக் கட்டுப்பட்டிருக்கிறார்கள். சித்தார்த் வழக்கத்திற்கு மீறிய உற்சாகத்துடன் இப்பொழுது காணப்படுகிறார். அதற்கெல்லாம் காரணம்? ரிக்கியின் வருகைக்குப் பிறகு, வீட்டில் விடியும் நாளெல்லாம் மகிழ்ச்சி என்பது பிரவாகம் எடுத்தோடுகிறது. முன்னைவிட தன் மனைவி சீதா இணை சொல்ல முடியாத மன மலர்ச்சியில் திளைப்பது ஒன்று போதுமே சித்தார்த்தின் இதயத்துக்கு.

இன்றுவரை ரிக்கியுடன் அவர் வாய்விட்டு சகஜமாகப் பேசாவிட்டாலும், அவனுடைய அப்பழுக்கற்ற உயர் வகை அன்பைக் கண்டு தன் மனதிற்குள்ளேயே அவனுடன் பேசிக்கொள்கிறார். எல்லாவற்றையும்விட, "இவன் எப்பொழுது சிரித்துப் பார்க்கப் போகிறோம்" என்று புருஷன்-மனைவி இருவருமே அனிதாவை நினைத்துத் தவித்துக்கொண்டிருந்த தவிப்பு எல்லாம் மறைந்துபோய், இன்று அனிதாவின் அலாதியான முகமலர்ச்சியை அவர்களால் இப்போது தினம் தினம் பார்க்க முடிகிறது. அவளை ஹாஸ்டலுக்குப் போகவிடாமல் முடிந்தவரை தங்கள் வீட்டிலேயே சித்தார்த் கட்டிப் போட்டுவிடுவார். காரணம், அவளின் பெருக்கெடுக்கும் மகிழ்ச்சியைப் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும் என்ற ஆவல். அதே நேரம் அவள் அங்கே இருந்தால்தான் எல்லோருமாகக் கூடி உட்கார்ந்து பேசிச் சிரித்துக்கொண்டிருக்க முடியும். அவள் ஹாஸ்டல் போய்விட்டால், ரிக்கி சமையல்கட்டினுள் புகுந்துவிடுவான், சீதாவுக்கு உதவியாக. ஏதோ அவர்களுக்கு எதிரிபோல தான் மட்டும் தனி அறையில் உட்கார்ந்திருக்க இப்போதெல்லாம் சித்தார்த்தால் இயலவில்லை.

இது எல்லாவற்றிற்கும் ஊடே, "இந்த அற்புத இளைஞன் எதற்காக இப்படி அபாண்டமாக ஒரு நாடகத்தை ஆடி தங்கள் வீட்டினுள் நுழைந்தான்?" என்ற உறுத்தல் மட்டும் அவரைக் குடைந்து கொண்டிருக்கிறது. சீதாவுக்கோ, தானும் ஒரு தாய் என்கிற உன்னத ஸ்தானத்தைப் பெற்றுவிட்டோம் என்ற பெருமைக்குரிய மகிழ்ச்சி.

டாக்டர் ஹரிஹரன் உள்ளே வந்து பார்வையாளர்கள் வரிசையில் உட்கார்ந்துவிட்டார்.

அவர் கண்களும் ரிக்கியைத்தான் தேடுகின்றன.

'அந்த இசை விற்பன்னன் இந்த நேரத்தில் இங்கே அல்லவா

இருக்க வேண்டும்! இந்த நேரத்தை விட்டுவைக்க மாட்டானே.. அனிதாவோடு எங்கே போயிருப்பான்?"

அனிதா நினைப்பு வந்ததும், ஹரிஹரனுக்கு கொஞ்சம் சங்கடமாக இருந்தது. அவர்களுடைய தேவகானம் போன்ற நட்புக்கு எந்தவித இடைஞ்சலும் எவர் மூலமாகவும் வந்துவிடக்கூடாதே.. தொட்டுக்கூடப் பேசாமல், இதயத்தின் இசையால் மட்டுமே வலுவாகத் தங்களை இணைத்துக் கொண்டிருக்கும் அவர்களுடைய பவித்திரமான காதலுக்கு வரப்போகும் நாட்கள் நல்ல அங்கீகாரத்தைத் தரவேண்டும் என்று மானசீகமாய்ப் பிரார்த்தித்துக் கொண்டார்.

ரிட்டயர்டு ஜட்ஜ் வெங்கிடபதி ஃப்ளூட்டில் வித்தகர்தான். ஆனால் இப்பொழுது சித்தார்த் தந்திருந்த புது வகையான 'நோட்ஸை' வாசிக்கச் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார். சித்தார்த் பொறுமை இழந்துவிட்டார். எவ்வளவு நேரம்தான் வெங்கிடபதி இப்படித் திணறிக்கொண்டு, எல்லோரையும் இப்படிக் காக்க வைத்துக்கொண்டு, நேரத்தைப் போக்கிக் கொண்டிருப்பார். கீதா மனதுக்குள் சிரித்துக்கொண்டாள். "நல்லாப் படுங்கள் பாடு.. ரிக்கியை அழைச்சிட்டு வரலாம்னு நான் சொன்னப்ப, ரொம்பவும் இளக்காரமா தேவை இல்லேன்னு சொன்னீங்களே, அதான் இந்தத் தண்டனை."

"மிஸ்டர் வெங்கிடபதி, நீங்க நெர்வஸா இருக்கீங்க. வேணும்னா வீட்டுக்குப்போயி ரிகர்ஸ் பண்ணிப் பாத்துட்டு ரிலாக்ஸ்ட்டா வாங்க. நான் மத்தவங்களை இப்ப கவனிக்கிறேன்" -சித்தார்த்தின் மென்மையான கோபத்தில் அந்த நீதிபதி நடுங்கத் தொடங்கினார். "இந்தத் தடவை கரெக்ட்டா வாசிச்சுடுறேன் சார்" -மீண்டும் அவர் தடுமாற, அப்போது- எங்கிருந்தோ ஹாலின் ஒரு பகுதியிலிருந்து சித்தார்த், வெங்கிடபதிக்குத் தந்த அந்த நோட்ஸை யாரோ மிக மிகத் துல்லியமாக, சித்தார்த் எதிர்பார்த்ததைவிட மிக நேர்த்தியாக புல்லாங்குழலில் இசைப்பதைக் கேட்டதும், அங்கிருந்த அத்தனை பேரும் ஆச்சரியத்தில் மிரண்டுவிட்டார்கள். யார் அது? யார்? எல்லோரும் ஆளுக்கொரு பக்கம் முகம் திருப்பிப் பார்க்க- மேலே பால்கனியின் பக்கம் கீதா பார்த்துவிட்டாள். அங்கே ரிக்கி!!! கண்களை மூடியபடி தன் புல்லாங்குழலில் சித்தார்த்தின் கஷ்டமான அந்த நோட்ஸை சிரமமே இல்லாமல் அதை மேலும் மெருகூட்டி அழகாய் வாசித்துக் கொண்டிருக்கிறான். அவன் பக்கத்தில் அனிதா. அவன் வாசித்து முடித்தான்.

அத்தனை பேரும் அதிர்ச்சியிலிருந்து மீண்டு கைதட்டத் தொடங்கினார்கள். "ரிக்கி! கீழே வா" என்று கூவினாள் கீதா.



கரவொலி தொடர்ந்துகொண்டிருக்கிறது. சித்தார்த் ஆச்சரியப் படவில்லை. "தோடியையே விரலுக்குள் முடக்கியவனுக்கு இது சாதாரணம்" என்று அவர் உள்ளுக்குள் கர்வப்பட்டிக்கலாம்.

ஆனால் வெங்கிடபதிக்கும் மற்ற ஆட்களுக்கும் ரிக்கி பற்றின விஷயம் தெரியாதே. தெரிந்தால் என்ன ஆவது?

கீழே இறங்கி ரிக்கி வந்ததும் கீதா அவனைக் கட்டிக்கொண்டு, பெருமையாக, "இது யார் தெரியுமா? எங்க பையன் ரிக்கி. எங்க சன்"- கீதா கூறியது மற்றவர்களுக்குப் புரியவில்லை. எல்லோரும் சித்தார்த்தைப் பார்த்தார்கள். அவருக்கோ பொறியில் மாட்டிக்கொண்ட நிலை.

"எங்கள் மகன் ரிக்கியோட இசைஞானம் எப்பேர்ப்பட்டதுன்னு உங்க யாருக்கும் தெரியாது. ஏன், எங்களுக்கே இத்தனை வருஷம் கழிச்சுத்தான் தெரியும். எங்க குடும்பத்துக்கு மட்டுமில்லே, இசை உலகத்துக்கே வரப்பிரசாதமா எங்க ரிக்கி வந்து சேர்ந்திருக்கான். போகப்போக இவன் எப்பேர்ப்பட்ட ஞானக்குழந்தைன்னு நீங்க தெரிஞ்சுக்குவீங்க" -என்று மனைவி கீதா மற்றவர்களிடம் சொல்வதை ஹரிஹரனும் மௌனமாக நின்றபடி மனசுக்குள் ஆமோதித்தார். ஆனால் குழம்பிப்போன எல்லோருக்கும் பதில் சொல்ல அங்கே சித்தார்த்தைக் காணோம்.

வெங்கிடபதியின் காதில் மட்டும் ரகசியமாக ஏதோ சொன்னாள் கீதா. சொல்லிவிட்டு அனிதா ரிக்கியுடன் கீதா புறப்பட்டுச் சென்றதும், வெங்கிடபதி சந்தோஷம் தாங்காமல் அந்த உண்மையைத் தனது சக நண்பர்களுடன் பகிர்ந்துகொண்ட பொழுது- அத்தனை பேருக்கும் உற்சாகம். ஏதோ தங்கள் வீட்டில் ஒரு மங்கள காரியம் நிகழ்ந்துவிட்ட மாதிரியும், ரிக்கியும் தங்கள் வீட்டு அதிசயப் பிள்ளை மாதிரியும் நினைத்துப் பெருமைப்பட்ட அவர்கள் சித்தார்த்தை நேரில் போய்ப் பாராட்டி மகிழ அவர் வீட்டிற்குப் படையெடுத்து விட்டார்கள்.

# 15

வீட்டிற்கு வந்த இசைக்குழுவினர், சித்தார்த்தை நேரிடையாகவோ, மறைமுகமாகவோ எதையும் கொச்சையாகக் கேட்டு அவரை சங்கடப் படுத்திவிடவில்லை. அப்படிப்பட்ட நாகரிகம் தெரிந்த படிப்பாளிகளும், அதிகாரிகளும் சித்தார்த்திடம் ஒரேயொரு கோரிக்கையை மட்டுமே முன்வைத்தார்கள். சித்தார்த் தனது நண்பர்களின் ஆசை வேண்டுகோளை எதிர்பார்க்கவில்லை. ஆனால், அவர்கள் அவரிடம் ரிக்கி பற்றி 'விசாரணை' செய்வார்களோ என்ற நெருக்கடியான நிலைமை தவிர்க்கப்பட்டுவிட்டது என்ற ஆறுதலோடு, அந்த நண்பர்கள் கேட்டுக் கொண்டதை "ஓ' தாராளமாகச் செய்யலாமே" என்று சம்பிரதாய முறையில் உடனே சம்மதித்து விட்டார். ஆனால், தனது சம்மதத்தால் நிகழப்போகும் பின் விளைவுகளைப் பற்றி அவர் அப்போது யோசிக்கவில்லை. அதைப்பற்றிக் கேள்விப்பட்டதும் பதட்டம் அடைந்தவர் டாக்டர் ஹரிஹரன் மட்டும்தான்.

"அப்பா! நம்ம ரிக்கியோட திறமையும் பெருமையும் வெளி உலகத்துக்குத் தெரியப் போகுது" என்று கீதா ஓடி வந்து சொன்னபோது ஹரிஹரனுக்கு ஒன்றும் மட்டுப்படவில்லை. கீதா மாய்ந்து மாய்ந்து அதை விவரித்தபோதுதான் ஹரிஹரனுக்கு அந்தப் பதட்டம் தோன்றியது. ஆனால், வெளியே காட்டிக்கொள்ளவில்லை.



அந்த காமினிக்கும் அவள் புருஷனுக்கும் தெரியாமல் கொஞ்ச நாளைக்கு ரிக்கியை வெளி உலகத்துக்குக் காட்டாமல் வைத்திருக்க எண்ணிய ஹரிஹரன், மகள் வந்து சொன்னதைக் கேட்டு முழுமனதோடு சந்தோஷப்பட முடியாமல் போனதற்கு இதுதான் காரணம். அதேசமயம் மகளின் கட்டுக்கடங்காத மகிழ்ச்சிக்கு திருஷ்டியாக ஏடாகூடமாக எதையும் சொல்லிவிடவில்லை. "ரொம்ப சந்தோஷம் கீதா" என்று வாழ்த்தி வழியனுப்பி வைத்தார். "என்ன சார்.. என்ன.. கீதாம்மா இவ்வளவு சந்தோஷமாப் போறாங்க" என்று ஓடிவந்த மாராவிடம் ஹரிஹரன் எதையும் மறைக்கவில்லை.

"மாரா.. வர்ற 15-ம் தேதி வெளிநாட்டுலேருந்து வர்றாங்களே கலாச்சார தூதுக்குழு? அவங்க முன்னாலே நம்ம ஹார்மோனி ஆர்கெஸ்ட்ரா.."

"இசைக் கச்சேரி நடத்தப்போறாங்க, தெரியுமே."

"அவசரப்படாதே.. ஆனா வழக்கம்போல இல்லே. இந்தத் தடவை ரிக்கியோட புல்லாங்குழல்தான் அவுங்க கச்சேரிக்கு ஹைலைட்டா இருக்கப்போகுதாம். ஆர்க்கெஸ்ட்ரா ஆளுங்களே சித்தார்த்தைக் கெஞ்சி சம்மதிக்க வச்சிட்டாங்களாம்."

"வெரிகுட்.. வெரிகுட் சார்.."

"என்னத்த வெரிகுட். கேக்குறதுக்கு நல்லாத்தான் இருக்கு. ஆனா கேக்கக்கூடாதவங்களுக்கு இந்த விஷயம் எட்டுச்சுன்னா என்ன ஆகுறது? அதைப்பத்தி யோசிச்சியா?

"என்ன சார், புரியலையே நீங்க சொல்றது?"

தன் மனதில் முளைவிட்ட சஞ்சலத்தை அவனிடம் ஹரிஹரன் விவரித்தார்.

ஆனால் அவன் தனது இனத்துக்கே உரித்தான முரட்டுத்தனத்தோடு சொன்னான் :

"ரிக்கி என்ன கைக்குழந்தையா சார். அவுங்க வந்து பறிச்சிட்டுப்போறதுக்கு? அப்படியே ரிக்கி உயிரோட இருக்கிற விஷயம் தெரிஞ்சாலும் அவுங்களாலே என்னைத்தக் கிழிச்சிட முடியும்? ரிக்கி செத்துட்டான்னு அவுங்களே ஒரு பொணத்துக்குக் கொள்ளி வச்சிட்டு உலகத்தை நம்ப வச்சதுக்கு அப்புறம் எந்த ரூட்ல வந்து இங்கே நம்ப ரிக்கிய சொந்தம் கொண்டாட முடியும்? அவுங்க மட்டும் இந்த ஊட்டி எல்லைக்குள்ளே அடி எடுத்து வைக்கட்டும், எங்க சாதி சனம் எல்லாத்தையும் ஈட்டிங்களோட வந்து குவிச்சிடுறேன் பாருங்க."

மாராவின் பேச்சில் கோபம், ஆத்திரம் எல்லாம் சீறிக் கொண்டு வந்தாலும், அவனுடைய வாதத்தில் உள்ள உண்மை

கனை ஹரிஹரனால் புரிந்துகொள்ள முடிந்தது. அதனால் கொஞ்சம் ஆறுதலும் கிடைத்தது.

கிச்சனில் கீதாவிற்கு உதவி செய்துகொண்டிருந்த அனிதாவின் முகத்தில் இன்று ஒரு மாதிரியான சோர்வு தெரிந்தது.

"என்ன அனிதா டல்லா இருக்கே?" கீதா கண்டுகொண்டாள்.

"ஒண்ணுமில்லே ஆன்ட்டி."

"உன் மனகல இருக்கிறதை நான் சொல்லட்டுமா? ஒத்திகை ஆரம்பிச்ச நேரத்திலிருந்து ரிக்கியோட நீ அதிகமாப் பேச முடியல. அதானே.. நல்ல குழந்தை நீ."

"இல்லே ரிக்கிதான் எங்கிட்ட பேசறதே இல்லை."

"தலைக்கு இந்தக் கையாலே பூ வச்சா என்ன? அந்தக் கையாலே பூ வச்சா என்ன? நீ எப்படிச் சொன்னாலும் உன் கவலைக்குக் காரணம், ரெண்டுபேரும் பேசிக்க முடியலேன்னுதான். இப்ப நீயும் நானும் சந்தோஷமா இருக்க வேண்டிய நேரம். புரியலையா. என்னைக்குமே ரிக்கியோட பேசாம விரதம் இருந்தாரே உங்க அங்கிள்.. இப்பப் பாரு.. அவர் ரூம்ல ரிக்கியோட தனியா உக்கார்ந்து ரிகர்சல் பார்த்துட்டிருக்காரு. இது இப்படியே நீடிச்சதுன்னா நமக்கு எந்தக் குறையும் இருக்காது. இந்தா, இந்த டீயைக் கொண்டு போய் ரிக்கிக்கும் அங்கிளுக்கும் குடுத்துட்டு வா."

தங்களின் இசைக்குழு நடத்தவிருக்கும் இசை நிகழ்ச்சியில் ரிக்கியின் புல்லாங்குழலே பிரதான இடத்தைப் பெறப்போகிற புதுமையான அனுபவத்தை சித்தார்த் மிக ஆழமான ஈடுபாட்டோடு அனுபவித்து செயல்படத் தொடங்கிவிட்டார்.

ரிக்கியைப் பற்றின பழைய சிந்தனைகளுக்கெல்லாம் தாழ்ப்பாள் போட்டுச் சாத்திவிட்டு, ரிக்கியை ஒரு இணையற்ற இசை ஞானஸ்தனாக மட்டுமே பார்த்து, 'நோட்ஸ்' எழுதியபடி அவ்வப்பொழுது ரிக்கி ஆர்வமாக வாசிக்கும் சில ராகங்களை -அவை ஹிஸ்துஸ்தானி சங்கீதத்தின் பிரசவங்களாக அமைவதை, வியந்தபடி. ஒத்திகை பார்த்துக் கொண்டிருக்கிறார் சித்தார்த்.

'டீ' கொண்டு வந்த அனிதாவைப் பார்த்ததும், கண்ணை மூடியபடி அலை அலையாய் ரிக்கி பரவவிடும் இசையின் ரீங்காரத்தை இடர்ப்படுத்த வேண்டாம் என்ற எண்ணத்தோடு, கண் ஜாடையால் 'டீயை வைத்துவிட்டு அவனைத் தொந்தரவு செய்யாமல் போய்விடு' என்று சித்தார்த் எச்சரிக்க, அனிதா துவண்டுவிட்டாள். கீதா சொன்னதுபோல அனிதா குழந்தைதான். 'தான் உள்ளே வருவதையே சித்தார்த் விரும்பவில்லை'



என்பதுபோல அர்த்தம் கற்பித்துக் கொண்டவன் அவசரமாக டீ ட்ரேயை வைத்துவிட்டு, மறுபடியும் கிச்சனுக்குப் போகாமல் கண்கலங்கியபடி நேராகத் தன் ஹாஸ்டலுக்குச் சென்றுவிட்டாள் என்பது கீதாவுக்குத் தெரியாது.

மறுநாள் ரிகர்ஸல் ஹாலில் 'கிராண்ட் ரிகர்ஸல்'. அனைத்து அதிகாரிகளும் பிரமுகர்களும், அவர்கள்தான் ஹார்மோனி இசைக்குழுவினர், ரிக்கியின் வாசிப்புக்கு ஈடுகொடுத்தும்- அவனைப் பின்தொடர்ந்தும் போட்டியிட்டும் காட்ட வேண்டிய ஒத்திகை.

பிரான்சிஸை மட்டும் க்ளினிக்கில் விட்டுவிட்டு, மாராவைத் தவிர்க்க முடியாமல் அவனுடன் சேர்ந்து அங்கே வந்திருந்தார் டாக்டர் ஹரிஹரன். உதவி கலெக்டரோ, ஆபீஸ் ப்யூன் மாதிரி தன்னை எளிமைப் படுத்திக்கொண்டு இசைக்கலைஞர்களுக்கு ஓடியோடி அவர்களுக்குத் தேவையானவற்றைக் கவனிப்பதோடு அவர்களு டன் வந்திருக்கும் குடும்பத்தாரையும் கவனித்துக்கொண்டிருந்தார். அத்தனை உற்சாகம் அவருக்கு. வயலின் செக்ஷனில் இரண்டு லேடி டாக்டர்களுடன் இருக்கிறாள் கீதா. சித்தார்த் கண்டக்ட் பண்ணிக்கொண்டிருக்கிறார். ஆனால், கீதாவோ, சித்தார்த்தோ அனிதா அங்கே வரவில்லை என்பதைக் கவனிக்கவில்லை. அந்தக் குழந்தை, மீண்டும் தான் ஒரு அனாதையாகிவிட்ட மாதிரி நினைத்துக் கொண்டு ஹாஸ்டலில் உட்கார்ந்து அழுதுகொண்டிருக்கிறாள்.

இசைக்குழுவினர் ரிக்கியோடு பின்தொடர முடியாத போதெல்லாம் கீதாவிற்குப் பெருமை நெஞ்சக்குள் அடங்கவில்லை. சிரிக்கத் தொடங்கினாள். சித்தார்த் பார்வையாலேயே மனைவியை எச்சரித்தார். 'கிட்டத்தட்ட ஒருமணி நேரம் ரிக்கி தொடர்ந்து வாசித்திருப்பான்' என்று தெரிந்து பதறிய கீதா கணவனிடம் கொஞ்சம் இடைவெளி விடச்சொல்லி, சூடான பாலுடன் அவனை நெருங்கி அவன் கைகளைத் தொட்டபோது, கீதா நொறுங்கிவிட்டாள். ரிக்கியின் உடம்பு அக்னியாய்ச் சுடுகிறது. இந்த ஜுரம் எப்பொழுதிலிருந்து என்பதை அவளால் இப்பொழுது யூகிக்க நேரம் இல்லை. விஷயம் மற்றவர்களுக்குப் பரவியபோது அத்தனை பேரும் ரிக்கியை ஓடி வந்து சூழ்ந்துகொண்டார்கள்.

"ரிக்கியை உடனே என் கிளினிக்குக்குக் கொண்டுபோறேன்" என்ற ஹரிஹரன், ரிக்கி 'வேண்டாம் வேண்டாம்' என்று சொல்லியும் கேட்காமல் மற்றவர்கள் உதவியோடு அவனைத் தன் காரில் கீதா, சித்தார்த், மாரா துணையுடன் கிளினிக்கை நோக்கி விரைந்தார்.

கலெக்டர், மனம் நொந்துவிட்டார். விழா என்ன ஆகுமோ என்ற பயம் அவரைப் பிடித்துக்கொண்டது.

"இது டைஃபாய்டும்மா கீதா" -ஹரிஹரன் ரிக்கியை நன்றாகப் பரிசோதித்த பிறகு சொன்னபோது, கீதா கட்டுப்படுத்த முடியாமல் அழத் தொடங்கிவிட்டாள். "இதுக்கு ஏன்ம்மா பயப்படுறே இப்படி? ரெண்டே நாள்ல இவனை எந்திரிச்சு ஓட வைக்கிறேன் பார்" - இப்படி ஹரிஹரன் சொல்லியும்கூட மனம் பொறுக்காமல் தன் அறைக்குள் ஓடி உட்கார்ந்துகொண்டு விம்மத் தொடங்கிவிட்டாள். சித்தார்த்தும் அவளை ஆறுதல்படுத்த முயன்று தோற்றுப் போனார். "உங்களுக்கென்ன, ரிக்கிக்கு இப்படி ஏதாச்சும் நடக்கக்கூடாதது நடந்து உங்களை விட்டு ஒழிஞ்சாப் போதும்னுதானே நினைப்பீங்க" என்று அவள் எதிர்பாராத ஒன்றைச் சொன்னபொழுதுதான் சித்தார்த் நிலைதடுமாறிவிட்டார். தன்னைப் பற்றி இந்த விபரீதமான சிந்தனை கீதாவிடம் இருக்கும் என்று அவர் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. ஆத்திரத்தை அடக்கிக்கொண்டார். அவள் தவிப்பின் தீவிரம்தான் அவளை அப்படிப் பேச வைத்துவிட்டது என்று உணர்ந்த மாத்திரத்தில் அவளைப் பச்சாதாபத்துடன் பார்த்தார்.

"கீதா, ரிக்கியைப் பத்தி இப்படி ஒரு எண்ணம் என் மனசுக்குள்ளே இருக்குறதா நீ நம்புறது, உன் கண்ணையே உனக்கு எதிரியா நினைக்கிற மாதிரி இருக்கு. கீதா- இப்ப நான் என்ன நினைச்சிட்டிருக்கேன் தெரியுமா? ரிக்கிக்கு வந்த டைபாய்டு எனக்கு வந்திருக்கக்கூடாதா? இல்லை, கொடுமையான ஒரு விபத்தே எனக்கு வந்து சேர்ந்திருக்கக்கூடாதா? இசை நிகழ்ச்சியிலே என் இடத்தையும் பூர்த்தி செஞ்சு, ரிக்கி மட்டும் தனி ஒருத்தனா மேடையிலே நின்னு, அவனுக்குக் கிடைக்கப்போற புகழுக்கெல்லாம் அவன் ஒருத்தனே காரணம்ங்கிறதை எல்லோரும் தெரிஞ்சுக்கணுமே...! இதுதான்... இதுதான் என்னோட பிரார்த்தனை."

கீதா கணவனின் பேச்சைக் கேட்டு சிலிர்த்துவிட்டாள். தன் புருஷனுக்குள்ளே இப்படியொரு பெருந்தன்மையான லட்சிய வெறியா? ரிக்கியின் தனிப்பெருமை, தனி ஆவர்த்தனம் வாசிக்கவேண்டும் என்பதில் கணவனுக்குள்ள தீவிரம் அவளை உலுக்கிவிடுகிறது.

கணவனின் கைகளைப் பிடித்துக்கொண்டு தன் அழுகையைக் குறைத்துக் கொண்டவளாய், "இப்ப என்ன செய்யப்போறீங்க?" என்றுதான் கேட்டாள்.



"வேற வழி- வழக்கமான பாணியிலேதான் நம் ட்ரூப்பைக் கொண்டு நான் சமாளிக்க வேண்டும்" -ஏக்கமாய் விடை தந்தார் சித்தார்த்.

"நான் ரிக்கி பக்கத்திலேயே இருக்கேன். நீங்க போயி நிகழ்ச்சி மாறுதலுக்கு மத்தவங்களைத் தயார் பண்ணுங்க. ரிக்கியோட பெருமையை உலகம் தெரிஞ்சுக்கிற நாள் என்னைக்காவது ஒருநாள் வந்தே தீரும்."

சித்தார்த் தள்ளாடும் மனதுடன் புறப்பட்டுச் சென்றார்.

# 16

'ஹார்மோனி' ஆர்கெஸ்ட்ரா குழுவினர் வாடி வதங்கிவிட்டார்கள், ரிக்கியின் குழலோடு இணைந்து சந்தனக் காற்றாய், ஜவ்வாது மணமாய் இசைக்கத் துடித்த வைர தினம் கைநழுவிப் போய்விட்டதே என்று.

உதவி கமிஷனர் விஜயபாஸ்கர், அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலத்தில் பல எண்ணெய்க் கிணறுகளுக்குச் சொந்தக்காரரான தனது சேலத்து கோடீஸ்வர நண்பர் ரங்கமணிக்கு விசேஷ அழைப்பு விடுத்திருந்தார்.

வெங்கிடபதி ஹாங்காங்கில் உள்ள தனது உறவினரைக் கட்டாயம் வரும்படி சொல்லியிருக்கிறார்.

கிடார் வாசிக்கும்- தேயிலை, காபி எஸ்டேட் அதிபர் மாயவநாதன், லண்டனில் தங்கிப்படிக்கும் தன் மகனையும், மகளையும் கண்டிப்பாக வரும்படி கட்டளையிட்டதோடு, ஸ்டார் டிவி நிறுவனத்தோடு தொடர்புகொண்டு தங்கள் இசை நிகழ்ச்சியைக் கவரேஜ் பண்ணும்படி செய்ய- ஹாங்காங்கில் இருக்கும் தனது வியாபார நிறுவனத்திற்கு உத்தரவிட்டிருந்தார். வயலினிஸ்ட் அம்புரோஸ், மேல்நாட்டு ஹாஸ்பிட்டல்களுக்கு மாதம் ஒரு தடவையாவது கட்டாயமாகப் போகவேண்டிய நிலையில் உள்ள புகழ்பெற்ற டாக்டர். அவரின் அழைப்பை ஏற்று வரவிருக்கும் வெளிநாட்டு இசை வல்லுநர்கள் எத்தனை பேர்!



கலெக்டர், அவர் பங்கிற்கு 'தூர்தர்ஷனை' சொடுக்கிவிட்டிருந்தார். டிக்கெட்டு விற்பனையோ, வழக்கமான இசை மண்டபம் வேண்டாம் திறந்தவெளி அரங்குதான் சரிப்பட்டு வரும் என்ற நிலையைத் தோற்றுவித்துவிட்டது.

ஊட்டியில் தனது இனத்தாரான தோடர், கோத்தர், வலையர், இருளர் போன்ற அத்தனைப் பழங்குடி மக்களையும் ஊர்வலமாய் வரும்படி தடபுடல் ஏற்பாடுகளைச் செய்து முடித்திருந்தான் மாரா. தான் லென்ட்டில் படிக்கிற எல்லா மாணவர்களும் கேட்டுக்கொண்டதின் பேரில், முன்கூட்டியே பொதுவிடுமுறை நாளைத்தான் நிகழ்ச்சிக்காக நிச்சயித்திருந்தார்கள்.

அடிவாரத்திலிருந்த ஊர்களிலிருந்தும், கிராமங்களிலிருந்தும் வருகின்றவர்கள் மரங்களில்தான் பரண் கட்டிக்கொண்டு தங்கவேண்டும் என்ற நிலை. அந்த அளவிற்கு இசை நிகழ்ச்சிக்கு வருகின்றவர்களின் கூட்டம். ஹோட்டல்கள் எல்லாம் நிரம்பிவிட்டன. ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் கூடாரங்கள் போட்டுக்கொண்டு தங்கத் தொடங்கிவிட்டனர் வெளியூர் மாணவர்களும், விசேஷ போலீஸாரும். மலைராணி ஊட்டிக்குத் திருமண நாள் மாதிரி ஊட்டி நகரமே மேளம் கொட்டிக் குதூகலித்துக்கொண்டிருந்தது.

இத்தனையும் எதற்காக? யாருக்காக?

ரிக்கி என்ற ஞானக்குழந்தை, 'சைல்டு ப்ராடிஜி' என்று வர்ணிக்கப்பட்ட அந்த இளைஞனின் இசை மகிமையைக் கேட்கும் ஆர்வத்தில்தான்- துடிப்பில்தான். அந்த அளவிற்கு ரிக்கியைப் பற்றிய ஆச்சரியமும் எதிர்பார்ப்பும் எல்லாத் திக்கிலும் பரவிவிட்டிருந்தது. ஏற்கெனவே ஹார்மோனி இசைக்குழுவிற்கு ஊட்டியில் பெரிய செல்வாக்கு. இப்போது ரிக்கியும் அவர்களோடு இணைகிறான் என்பதால் பரபரப்பு என்பது கேள்வி கேட்பார் இல்லாமல் திகைக்கும்படி அதிகமாகிவிட்டது. ஆனால், ரிக்கியின் தற்போதைய நிலைமை வெளியே திரண்டு கொண்டிருப்பவர்களுக்கு எப்படித் தெரியும்? பெரும்பரபரப்பை ஏற்படுத்தியிருக்கும் இசை நிகழ்ச்சியில் திடீரென எதிர்பாராத மாற்றத்தை இந்த மக்கள் கண்டால், மேடையில் ரிக்கியைக் காணாமல் திகைத்தால், அந்தக் கூட்டம் ஏமாற்றம் தாங்காமல் எப்படிப்பட்ட விபரீதங்களைச் செய்துவிடுமோ? அதை உத்தேசித்து போலீஸ் கமிஷனர் தீவிரமான பாதுகாப்பு ஏற்பாடுகளை முன்கூட்டியே செய்யத் தொடங்கிவிட்டார்.

அவசர ஒத்திகையின்போது -தனது சகாக்களிடம் முடிந்தவரை உற்சாகத்தை உண்டுபண்ண முயன்றுகொண்டிருக்கிறார் சித்தார்த். தானும் சோர்ந்துபோய் உட்கார்ந்துவிட்டால்

மற்றவர்களின் நிலை என்ன ஆகும் என்ற நியாயமான பயம் அவருக்கு.

ரிக்கியின் இசையைக் கேட்க ஊட்டியில் நடக்கும் அத்தனை ஆர்ப்பாட்டங்களையும் கேட்டு அறிந்து வைத்திருந்த அனிதாவுக்கு -காய்ச்சலில் படுத்திருக்கும் ரிக்கியின் முனகல் சப்தம் மட்டும் அறியாத ஒன்றாய் -கேட்காத ஒன்றாய் இருக்கிறது.

ஆனால் மாராவின் மோப்ப குணம் 'அனிதா' கண்ணிலேயே படவில்லையே என்பதை உணர்ந்ததும் திடுக்கிட்டது. அதுவும், இந்தச் சமயத்தில் ரிக்கியின் அருகில் அனிதா இல்லையே? ஏன்?

"இதுவரைக்கும் நீங்க கேள்விப்படலே இல்லையா?" என்று மாரா ஹாஸ்டலுக்கு ஓடிவந்து சொன்னபோதுதான் அவளுக்கு ரிக்கியின் நிலைமை தெரிந்தது. க்ளினிக்கை நோக்கி காற்றாக மாறி ஓடத் தொடங்கினாள் அனிதா. மாராவால் கூட அவளுக்கு ஈடுகொடுத்து ஓட முடியவில்லை.

ரிக்கி கண் திறந்தபொழுது- அவனின் இரு கைவிரல்களையும் தன் கைகளால் மிருதுவாக வருடியபடி, கண்ணீர்க்கோலத்துடன் அவன் பக்கத்தில் உட்கார்ந்திருந்தது அனிதாதான்.

"அனிதா...!" எழுந்து உட்கார முயன்றவனின் தோளை மென்மையாகப் பிடித்து மீண்டும் படுக்க வைத்துவிட்டாள் கீதா.

"ரிக்கி நீயும் அனிதாவும் பேசிட்டிருங்க. நான் ஒரு ஃபோன் பண்ணிட்டு வர்றேன்" என்று இங்கிதமாக நகர்ந்துவிட்டாள் கீதா.

"அனிதா- நீயும் கீதா ஆன்ட்டியும் ஏதாச்சும் உங்களுக்குள்ளே பேசி வச்சிக்கிட்டீங்களா?"

"என்ன ரிக்கி சொல்றே?"

"வேற... என்னைப் பார்த்து ஆன்ட்டியும் நாள்பூரா அழுதிட்டிருக்காங்க. இப்ப நீ- நான் என்ன, சாகப்போறேன்னு நெனைச்சிட்டீங்களா?" -பலவீனமாய்ச் சிரித்தவனின் உதடுகளைத் தன் விரல்களால் போர்த்திவிட்டாள் அனிதா.

"என்ன பேச்சு இதெல்லாம்? வேற பேசத் தெரியாதா?" என்றாள். அவனுடைய வாயை மூடிக்கொண்டிருந்த அவளுடைய விரல்களுக்குள்ளே தன் உதடுகளால் உரசியபடி பேசினான் ரிக்கி.

"உன்னோட விரல்களையே ஃப்ளூட்டா நெனைச்சு 'ப்ளே' பண்ணட்டுமா?"

அவளுடைய விரல்களின் நடுவே தன்னுடைய உதடுகளைக் குவித்து, மெல்லிதாய் புல்லாங்குழல் வாசிப்பைப்போல் 'விசில்' பண்ணத் தொடங்கினான் ரிக்கி.



'கப்' -அவன் வாயை அழுத்தி மூடினாள் அனிதா. பல் பதியாமல் அவள் விரலைக் கடித்தான் ரிக்கி. கையை எடுத்துக்கொண்டாள் அனிதா.

"இப்போது கீதா ஆன்ட்டி வந்துவிடக்கூடாதே" என்று நினைத்து திரும்பிப் பார்த்த அனிதாவின் கண்களில் பட்டது அந்தப் பூக்கள். பக்கத்து மேஜையிலிருந்த ஒரு பெரிய எவர்சில்வர் பாத்திரத்தில் நிறைந்திருந்த செம்பருத்திப் பூக்களைப் பார்த்துவிட்டு,

"இந்தப் பூ... இவ்வளவு பூவும் எதுக்கு? யாருக்கு?" என்று அனிதா கேட்ட பொழுதுதான், தலையைத் திருப்பிப் பார்த்தான் ரிக்கி. மேஜையில் இருந்த ஏராளமான அந்தச் செம்பருத்திப் பூக்களை ஆச்சரியத்துடன் பார்த்தான் ரிக்கி.

செம்பருத்திப் பூக்கள்!!!

இத்தனை நாளும் இல்லாமல், இன்றைக்கு, இங்கே எப்படி? அவன் சுயநினைவு இல்லாமல் கிடந்தபோது ராமய்யா பூக்களுடன் அவனைப் பார்த்துவிட்டுச் சென்றது அவனுக்கு எப்படித் தெரியும்? இருந்தும், அந்தப் பூக்களைத் தனக்கு அறிமுகப்படுத்தின ராமய்யாவின் நினைவு இப்போது வந்தபொழுது அவன் கண்களில் நீர் கட்டியது. ரிக்கியின் கண்கள் திடீரென கலங்குவதைக் கண்டதும் அனிதா பதறிவிட்டாள்.

"என்ன ரிக்கி? என்ன? என்ன?"

"அன்னைக்கி நீ அழுதப்ப, அதுக்கான காரணத்தைச் சொன்னியே- அதே மாதிரியான காரணத்தை இப்ப நானும் நெனைச்சுக்கிட்டேன், அதான்..."

"அப்ப, நீயும் என்னை மாதிரி, இந்த சந்தோஷம் எல்லாம் நிரந்தரம் இல்லேன்னு நினைக்கிறியா?"

"ஆமா..." ரிக்கியின் குரலும் கண்ணீர் ஆனது.

"ரிக்கி.. ரிக்கி..." அந்தப் பேதைப்பெண் ரிக்கியின் நெஞ்சில் தலையைக் கவிழ்த்தபடி "உன்னாலேதான் இனிமே என் வாழ்க்கையிலே சந்தோஷம் நிரந்தரமா இருக்கும்னு நம்பிக்கிட்டிருந்தேன்- நீயே இப்படி அவநம்பிக்கையோட சொல்றப்ப, இனிமே நான்- எனக்கு... என்ன அர்த்தம் இருக்கு சொல்லு?" -அனிதா மனம் உடைந்து தடுமாறி அழத் தொடங்கிவிட்டாள்.

சிரமப்பட்டு எழுந்து உட்கார்ந்த ரிக்கி, அனிதாவின் கண்களைத் துடைத்துவிட்டபடி, "அனிதா என்னை மன்னிச்சிடு. நான் ஏதோ பழைய நினைப்பிலே- அதுவும் இந்தச் செம்பருத்திப் பூக்களைப் பார்த்ததும் அப்படிப் பேசிட்டேன்."

கண்களைத் துடைத்து அவனை ஏறிட்டுப் பார்த்தாள் அனிதா. ரிக்கியின் பேச்சு அவளுக்குப் புரியவில்லை.

"அது என்ன பழைய நினைப்பு? இந்தச் செம்பருத்திப் பூக்களைப் பார்த்ததும் உனக்கு மனசுலே திடீர்னு அப்படி என்ன வேதனை?" -பரிதாபமாகக் கேட்டாள் அனிதா.

"அதையெல்லாம் நம்ப கல்யாணத்துக்கு அப்புறம் உனக்குச் சொல்றேன்" என்ற ரிக்கியின் கழுத்தை இறுக்கமாகக் கட்டிக்கொண்டாள் அனிதா. அவனது நெற்றியோடு வைத்து தனது நெற்றியை இப்படியும் அப்படியும் தேய்த்தாள்.

"உள்ளே வரலாமா?" என்று வெளியிலிருந்து கீதாவின் குரல் கேட்டதும் இருவரும் நல்ல பிள்ளைகள்போல் விலகி உட்கார்ந்து கொண்டார்கள்.



# 17

எல்லோரும்... எல்லோரும்... ஆவலாய் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் அந்த அற்புதமான இசை நிகழ்ச்சிக்குரிய நேரம் நெருங்கிவிட்டது.

அந்த திறந்தவெளி அரங்கமே மக்கள் கூட்டத்தால் மூச்சுத் திணறிக் கொண்டிருக்கிறது. இசை நிகழ்ச்சிக்காக அமைக்கப்பட்டிருந்த பிரம்மாண்டமான மேடையின் திரைக்குப் பின்னால் சித்தார்த்தும் மற்றவர்களும் தயார் நிலையில் இருந்தாலும் மனத்தளவில் கலக்கத்துடன் காணப்படுகிறார்கள். 'இந்நேரம் திட்டமிட்டபடி ரிக்கி மட்டும் இங்கே இருந்தால் ஊட்டியின் உயரமே அவன் காலடியில் மண்டியிட்டுக் கிடக்குமே' என்று மனம் புலம்பிக் கொண்டிருக்கிறார் சித்தார்த். 'ரிக்கி வரவில்லை' என்பது திரண்டிருக்கும் கூட்டத்திற்குத் தெரிந்துவிட்டால், அதனால் எதிர்பாராத குழப்பம் எதுவும் மூண்டால், அதைச் சமாளிப்பது எப்படி என்பது குறித்து போலீஸாரை முறைப்படி எச்சரித்திருந்தார் கலெக்டர். வெளிநாட்டு அமைச்சர்களும் அவர்களது கலாச்சார தூது கோஷ்டியும் மிகுந்த ஆவலுடன் வந்துவிட்டது.

நிகழ்ச்சி தொடங்கிட இன்னும் சில நிமிடங்கள் தான். திரைக்குப் பின்னால் நிற்கும்

கலைஞர்களிடம் செயற்கையான சுறுசுறுப்பு. அப்பொழுது தான் எதிர்பாராத அந்த அதிசயம் நிகழ்ந்தது. தன் கண்களாலேயே நம்ப முடியாதபடித் தனக்கு முன்னால் வந்து நின்ற ரிக்கியை வியப்போடு இறுகத் தழுவிக் கண் கலங்கினார் சித்தார்த்.

"இந்த நிலைமையிலே எக்காரணத்தைக் கொண்டும் நிகழ்ச்சிக்குப் போகக்கூடாதுன்னு நான் எவ்வளவோ சொன்னேன். இவன் என்னையும் கீதாவையும் ஏமாற்றிவிட்டு இங்கே ஓடிவந்திருக்கிறான் சித்தார்த்'' என்று பின்னாலேயே ஓடி வந்த ஹரிஹரன் விளக்கினார்.

"அங்கிளுக்கு என்னாலே எந்தக் கெட்டப் பேரும் வந்திடக்கூடாதுன்னு ரிக்கி சொன்னப்ப, என்னாலேயும் ரிக்கியைத் தடுக்க முடியலே" என்றாள் அனிதா.

"ஆனா.. ஒண்ணு மட்டும் நிச்சயம். தனக்கு கிடைக்கப்போற நல்ல பெயருக்காக ரிக்கி இங்கே ஓடி வரலே" என்று பெருமையுடன் புதிய விளக்கம் தந்தாள் கீதா.

இசைக்குழுவினருக்கு கல்யாண சந்தோஷம். ரிக்கியைச் சூழ்ந்துகொண்டார்கள். நிகழ்ச்சி முடியும்வரை டாக்டர் ஹரிஹரன், ரிக்கியின் பாதுகாப்புக்காக மேடையிலேயே இருக்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டார்கள்.

''யு ஆர் கிரேட் ரிக்கி'' என்ற சித்தார்த், தன் கண்கள் கலங்குவதைக்கூட மறைக்காமல் தன்னை மறந்தார்.

"அனிதா.. கடைசிவரை நீயும் மேடையிலேயே உட்கார்ந்திரு" என்று கீதா கூறியபொழுது, அனிதாவின் முகத்தில் தனக்கு அளிக்கப்பட்ட தனிப்பட்ட அங்கீகாரத்தின் பெருமைப் பூரிப்பு பிரகாசித்தது.

உடனே நிகழ்ச்சியில் மாற்றத்திற்கான ஏற்பாடுகளைச் சடசடவெனச் செய்தார் சித்தார்த். ரிக்கியைப் பிரதானப்படுத்தி அவர் ஏற்கெனவே அமைத்து, ஒத்திகையும் பார்த்த இசை அமைப்பை, இப்போது, மீண்டும் கையில் எடுப்பதில் அவருக்கு அதிகச் சிரமம் இல்லைதான். இந்தச் சமயத்தில் ஹரிஹரனுக்கு மட்டும், வெளியில் சொல்ல முடியாத ஒரு பயம். இந்த மாபெரும் கூட்டத்தில் ரிக்கிக்கு ஆபத்தை விளைவிக்க, அபாயகரக் காமினியின் கைக்கூலிகள் எங்கே, எந்த மூலையில் காத்திருக்கிறார்களோ..?

ரிக்கி புல்லாங்குழலை கையில் எடுத்தவுடன், சித்தார்த்தையும் கீதாவையும் சேர்ந்து நிற்கச் சொல்லி, அவர்களின் காலைத் தொட்டு நமஸ்கரித்தபொழுது, சித்தார்த் மனம் நெகிழ்ந்து சிலிர்த்தார். கீதா, ரிக்கியை அணைத்து அவன் நெற்றியில் முத்தமிட்டுக்



கண்கலங்கினாள். பிறகு இசைக் குழுவினர் அனைவரிடமும் தனித்தனியே சென்று அவர்களின் ஆசியைக் கோரியபொழுது அவர்கள் அவனைக் கட்டியணைத்துக் கொண்டார்கள். ஹரிஹரனிடம் வந்து அவர் காலைத் தொட்டபொழுது, "உன் இசையைப் போலவே உன் மனமும் எவ்வளவு உயர்ந்தது என்பது எனக்கு மட்டுமே தெரியும். உன்னுடைய தாய் ராஜலட்சுமி அம்மாளை மனதிற்குள் வணங்கி விட்டு இசைக்கத் தொடங்கு" என்றார் அவன் காதில். கடைசியாக அனிதாவிடம் வந்தான் ரிக்கி. தங்களைச் சுற்றி அத்தனை பேர் நிற்பதைப் பற்றி அனிதா கவலைப்படவில்லை. அவனுடைய இரு கன்னங்களிலும் சொல்ல இயலாத தவிப்போடு, அழுத்தமாக முத்தமிட்டாள். "ரிக்கிக்குத் தரப்பட்ட பெஸ்ட் ட்ரீட்மெண்ட் இதுதான்!" - என்று நினைத்தார் ஹரிஹரன்.

திரை விலகியது. நிகழ்ச்சி தொடங்கிவிட்டது. ஊட்டி மலையே அதிர்ந்து குலுங்கும்படி அந்த ராட்சதக் கூட்டம் "ரிக்கி.. ரிக்கி.." என்று ஆனந்தக்கூச்சல் எழுப்பியது. இந்தப் புதுமையான நிகழ்ச்சிக்குக் காரணகர்த்தாவான ரிக்கியின் அதீதத் திறமையைச் சித்தார்த் விளக்கமாய்ப் பேசியபொழுது, மீண்டும் மீண்டும் அத்தனை பேரும் எழுந்து நின்று கை தட்டினார்கள்.

ரிக்கி தனது மாயக்குழலை எடுத்து இசைக்கத் தொடங்கிவிட்டான். வெளிநாட்டு விருந்தினர்களும் மற்ற இசை ரசிகர் கூட்டமும் தங்களை மறந்தனர். ஏதோ மாய உலகில் தாங்கள் சஞ்சரிப்பதாக உணர்ந்தார்கள். தனது அற்புதக் குழல் ஓசையால் அந்த இருட்டு இரவிலும் பௌர்ணமியைக் கொண்டு வந்து அனைவரையும் குளிர வைத்தான். ஒவ்வொரு இடைவெளியின் போதும் கூட்டத்தினர் எழுந்து நின்று "ரிக்கி.. ரிக்கி.." என்று ஒரே குரலில் மனம் மயங்கி -கண்கசிந்து- வாழ்த்திக் கரவொலி எழுப்பினர். மறுபடியும் அவன் இசைக்கத் தொடங்கியதும், மந்திரத்தில் கட்டுண்டவர்கள் மாதிரி, சுவாசிக்க மறந்தவர்கள் போல பதுமைகளாக மாறினர். அவர்கள் நெஞ்சமெல்லாம் ரிக்கியின் குழல் இசை நிறைந்து ததும்பியது. மலைராணிக்கே பொறாமையாக இருந்திருக்கும்; தன்னைவிட இந்த இளைஞன் மக்கள் கண்ணில் உயர்ந்துகொண்டுப் போகிறானே என்று. கடைசியில் நிகழ்ச்சி முடிவடைந்தபொழுது கூட்டத்தினர் மேடையை முற்றுகையிட வெறிபிடித்து முன்னேறிய சமயம், போலீஸாரால் அவர்களைக் கட்டுப்படுத்துவது பெரும் சோதனையாகப் போய்விட்டது. வெளிநாட்டு விருந்தினர் மேடைக்கு வந்து ரிக்கியின் மாயத் திறமையைப் பாராட்டிய

விதத்தைக் கண்டு சித்தார்த்தும் கீதாவும் சந்தோஷக் கண்ணீர் வடித்த அதே சமயம், அவர்களின் மனசில் இன்னொரு பயம் -இந்த நிமிஷமே ரிக்கியை இவர்கள் தங்கள் நாட்டுக்குத் தூக்கிக் கொண்டு போய்விடுவார்களோ என்று. ரிக்கிக்கு ஏராளமான பரிசுகளை அள்ளிக் கொடுத்த விருந்தினர்கள் தங்கள் நாட்டுக்கு ரிக்கி அவசியம் வரவேண்டும் என்று அன்புடன் வேண்டிக் கேட்டுக் கொண்டார்கள். இப்போது, "ரிக்கி பேசவேண்டும்" என்று மலையே அதிரும்வண்ணம் மக்கள் உற்சாகக் குரல் எழுப்பினர்.

நன்றி தெரிவித்துப் பேசவந்த ரிக்கி, மக்கள் வெள்ளத்தின் முன்னால் பேச முடியாமல் தவித்தான். அந்த அளவுக்கு நீண்ட நேரக் கைதட்டல். கடைசியில் அவன் சித்தார்த்-கீதா இருவரையும் தன்னுடன் சேர்த்து இணைத்து நிற்க வைத்து, "உங்கள் பாராட்டுக்கள் அத்தனைக்கும் நான் காரணம் அல்ல. இதோ இந்த தெய்வங்கள்தான் காரணம்! இவர்கள் இல்லை யென்றால் உங்கள் முன்னால் நிற்கும் பாக்கியம் இன்று எனக்குக் கிடைத்திருக்காது" என்று சொல்லிவிட்டு மீண்டும் அவர்கள் பாதங்களைத் தொட்டு வணங்கினான். மீண்டும் அத்தனைக் கூட்டமும் கை தட்டி ஆர்ப்பரித்து, சித்தார்த்-கீதா தம்பதிக்குத் தங்கள் பாராட்டைத் தெரிவித்தார்கள். அந்தக் காட்சியை -அந்தக் கூட்டத்தில் இப்போது மறைந்திருந்து பார்க்கும் காமினியும் இந்திரஜித்தும் எத்தகைய மிருகவெறியோடு கண் சிவந்திருப்பார்கள் என்பது மேடையில் இருப்போருக்குத் தெரியாது.

'ஜெனரேஷன்ஸ்' அபார்ட்மெண்ட்டில் உள்ள அத்தனைபேரும் டி.வி.யில் ரிக்கியைப் பார்த்த மாத்திரத்தில் பட்டாசு வெடிக்கத் தொடங்கிவிட்டனர். அவனுடைய மாயாஜால இசை நிகழ்ச்சி ஒருபுறம் எனறால், ரிக்கி உயிரோடுதான் இருக்கிறான் என்ற அதிரடி உண்மைதான் அந்த அபார்ட்மெண்ட்டில் உள்ள அத்தனை பேரும் தீபாவளி கொண்டாடக் காரணமாக இருந்தது. அந்தச் சமயத்தில் மட்டும் காமினியும் அவள் புருஷனும் பங்களாவில் இருந்திருந்தால் எல்லோருமாகச் சேர்ந்து அவர்களைத் தீயில் போட்டு எரித்திருப்பார்கள், கோழைத்தனத்திற்குப் பெயர்போன விஸ்வநாதய்யர் உட்பட. இப்பொழுது அவர்களுடைய வெறித்தனமான ஆசையெல்லாம் உடனடியாக ரிக்கியை நேரில் பார்க்க வேண்டும் என்பதுதான். அதனால் ஓடிப்போய் வேலக்கார கல்யாணி அம்மாளையும் ராமய்யாவையும் சூழ்ந்துகொண்டார்கள். "நாம் எல்லோருமாகச் சேர்ந்துபோய் ஊட்டியில் இருக்கும் ரிக்கியைப் பார்ப்போம்; ஆனால், நான் சொல்லும் ஒரு



நிபந்தனைக்கு நீங்கள் கட்டுப்படவேண்டும்" என்று ராமய்யா சொன்னபோது அவர்கள் அந்த நிபந்தனையை ஏற்றுக் கொண்டனர். ஜனகவள்ளி அம்மாளும் மற்ற அபார்ட்மெண்ட் பெண்மணிகளும் கோயிலுக்கு ஓடினார்கள் ஆண்டவனுக்கு நன்றி சொல்ல!

# 18

இசை நிகழ்ச்சி முடிந்து எல்லோரும் வீடு திரும்பிய போது, ரிக்கிக்கு ஆரத்தி எடுத்த பிறகே அவனை கீதா உள்ளே அழைத்துச் சென்றாள். அவர்கள் வீட்டிற்குள் பிரவேசித்த அரை மணி நேரத்தில் இந்தியாவின் முக்கிய நகரங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் ரிக்கியின் புதுமையான இசை நிகழ்ச்சிக்கு, சாதனைக்கு- செல்போன், இமெயில், இண்டர்நெட் வழியாக விவரிக்க இயலாத பாராட்டுக்கள், அழைப்புகள். டாக்டர் ஹரிஹரன் ஒரு முடிவு செய்தார். "ரிக்கியை இனிமேல் எனது க்ளினிக்கில் வைத்து கவனிப்பது வேண்டாம், ரிக்கி வீட்டிலேயே இருக்கட்டும். நான் இங்கே வந்து ட்ரீட் பண்ணுறேன். அதுதான் பல வகைகளில் அவனுக்குப் பாதுகாப்பு" என்று கூறிவிட்டார். மியூஸிஷியன்ஸ் எல்லோரும் தங்கள் குடும்பத்தினருடன் ரிக்கியை விட்டுச் செல்ல இரவு பன்னிரண்டு மணிக்கு மேல் ஆகிவிட்டது. அவர்கள் போகும் வரை அத்தனை பேரையும், கீதாவையும் மிஞ்சிக் கொண்டு உபசரித்தவர் சித்தார்த். கடைசியில், "ரிக்கி ரெஸ்ட் எடுக்கட்டும். எல்லோரும் அவனிடம் பேசிப்பேசி அவனைக் களைப்படையச் செய்யாதீர்கள்" என்று சித்தார்த் எல்லோரையும் தவிர்க்க முடியாமல் அன்புடன்



கேட்டுக்கொண்ட பொழுது, கணவனை என்றுமில்லாத பெருமையுடனும், நிம்மதியுடனும் பார்த்துக் கொண்டிருந்தவள் கீதா. எதுவுமே பேசாமல், ஏதோ ஒரு அதிசயத்தைப் பார்ப்பதைப்போல- அதுவும் தனக்கே சொந்தமான பொக்கிஷத்தைக் கவனிப்பது போல, ரிக்கியின் அருகில் உட்கார்ந்தபடி அவன் முகத்தையே பெருமையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள் அனிதா.

பின்னிரவில், எல்லோரும் ஒருவழியாகப் புறப்பட்டுச் சென்றதும்- வீட்டில் விடப்பட்டவர்கள் சித்தார்த்-கீதா, ரிக்கி-அனிதா மட்டுமே. வெளியே நல்ல மழை கொட்டத் தொடங்கிவிட்டது. அனிதாவை ஹாஸ்டல் போகவேண்டாம் என்று கட்டளை போட்டுவிட்டாள் கீதா.

கீதாவுடன் அவள் அறையில்போய் அனிதா படுத்துக்கொண்ட பொழுது, ரிக்கி தன் அறைக்குத் திரும்பினான். ஆனால் சித்தார்த் மட்டும் ஏதோ சிந்தனையில் தனது பெட்ரூமில் நடைபோட்டுக் கொண்டிருந்தவர், ஏதோ நினைத்துக்கொண்டவராய் ரிக்கியின் அறையை நோக்கிச் சென்றார். ரிக்கி இன்னும் தூங்கவில்லை. பெட்டியிலிருந்த அம்மாவின் படத்தை எடுத்து வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான். மேடையில் ஹரிஹரன் சொன்னது எவ்வளவு உண்மை. அந்தத் தாயை மனதாரப் பிரார்த்தித்த பின்னர்தானே கச்சேரியைத் தொடங்கினான். "அம்மா... இந்நேரம் நீ மேலேயிருந்து என்னைப் பார்த்து சந்தோஷப்பட்டுக் கண்ணீர் விடுவே இல்லே" என்று மனதிற்குள் முணுமுணுத்துக்கொண்டான். "நான் உள்ளே வரலாமா ரிக்கி" என்ற குரல் கேட்டதும்தான் அங்கே வந்திருக்கும் சித்தார்த்தைக் கவனித்தான். 'வாங்க அங்கிள்' என்றபடி அம்மாவின் படத்தைத் தலையணைக்கடியில் மறைத்துவிட்டு எழுந்து நின்றான்.

"உட்காரு... உட்காரு..." அருகில் வந்து அவன் பக்கத்திலே உட்கார்ந்துகொண்டு அவன் தோள்களில் வாஞ்சையோடு தட்டிக்கொடுத்தபடி... "ரிக்கி யூ ஆர் மார்வலஸ்! இன்னைக்கு மட்டும் இல்லே, நீ இந்த வீட்டுக்குள்ளே வந்த நாள்ளேயிருந்து எத்தனையோ அதிசயங்களை நிகழ்த்திட்டே. வாழ்க்கையிலே பிரியப்போன என்னையும் ஆன்ட்டியையும் இனி எந்தக்காலமும் பிரிய முடியாதபடி செஞ்சுட்டே. இத்தனை வருஷமா வேதனையை அனுபவிச்ச எங்க ரெண்டுபேரு மனசுலேயும் நிரந்தரமான சந்தோஷத்தை உண்டாக்கிட்டே. ஏகாந்தமா, வெறுமையாக் கிடந்த இந்த வீட்டுல ஒவ்வொரு நாளும் இன்னைக்கித் திருவிழா நடக்கிற மாதிரி கூட்டமும் குதூகலமுமா இருக்கு. குறுகிய காலத்தில் இந்த 'ஹார்மோனி' ஆர்கெஸ்ட்ரா ட்ரூப்புக்கு தேசிய அளவில் பெரும்

புகழ் தேடிக் கொடுத்திருக்கே இன்னைக்கி நீ மேடையில் இல்லாம என் உள்ளம் ஒடிஞ்சுப்போன சமயத்துலே, எனக்காக, எனக்காக, உன்னோட பலவீனமான உடல் நிலையிலும் ரிஸ்க் எடுத்து ஓடி வந்திருக்கே. எல்லாமே எனக்காக. இந்தக் குடும்பத்துக்காக. உனக்காக நீ எதுவுமே செஞ்சுக்கலே. கடவுள் அனுப்பின தேவதூதன் மாதிரி இத்தனை சாதனைகளையும் எங்களுக்குச் செய்த உனக்கு நான் நன்றி சொல்றதைவிட அந்த நன்றிக்கும் மேலான ஒன்றைச் செய்ய ஆசைப்படுகிறேன்."

தொடர்ந்து பேசி வந்த சித்தார்த் சிறிது மௌனம் ஆனார். சித்தார்த்தின் அந்தச் சில வினாடி மௌன இடைவெளிக்கு என்ன காரணம் என்பதை மீண்டும் அவர் பேசத் தொடங்கியபொழுது தெரிந்துகொண்டான் ரிக்கி. அதை அவன் எதிர்பார்த்தான்.

"ரிக்கி... உன்னை ஆரம்பத்துலே வெறுத்தேன். அதுக்குக் காரணம் உனக்குத் தெரியும். ஆனா... போகப்போக, உன்னை மனசார நான் நேசிக்க ஆரம்பிச்சேன். இந்த நிமிஷம் வரை நேசிக்கிறேன். அது எனக்கு மட்டுமே தெரியும். இவ்வளவு நேரம் உன்னுடைய கீர்த்தியைப் புகழ்ந்தேன். அது அத்தனையும் சத்தியம். ஆனா- இத்தனைக்கும் நடுவுலே என் மனசுக்குள்ளே ஒரு உறுத்தல் மட்டும் இருந்துகிட்டே இருக்கு..." தயங்கினார் சித்தார்த். மறுபடியும் தொடர்ந்தார்.

"இப்பேர்ப்பட்ட அற்புதமான நீ, ஒரு பொய்யான கடிதத்தோடு இந்த வீட்டுக்குள்ளே எதுக்கு வந்தே? ஏன், என்மேல எல்லோரும் சந்தேகப்படும்படியா ஒரு சூழ்நிலையை உருவாக்குனே? இதுக்கெல்லாம் என்ன காரணம்? உண்மையிலேயே நீ யார்?

அவ்வளவுதான்.

உடைந்து நொறுங்கிவிட்டான் ரிக்கி. அவன் பிறந்த குடும்பத்தில் அவன் பட்ட துன்பங்கள், ஓடிவந்த சூழ்நிலை, அடைக்கலம் தந்த ஹரிஹரன், அன்பின் உன்னதம் பற்றி அவர் தந்த விளக்கம், சித்தார்த்தும் சீதாவும் வாழ்க்கையில் பிரியப் போவதைச் சொல்லி அவர் வேதனைப் பட்டது -தான் அவர்களை மறைந்திருந்து பள்ளியிலும் வெளியிலும் கண்காணித்தது -தம்பதிகள் இருவரையும் சேர்த்து வைக்க முடிவு செய்தது- தானே எழுதிய கடிதத்துடன் சித்தார்த்திடம் வந்தது. அந்தக் கடிதத்தில் இறந்த தனது தாயின்மீது களங்கம் வராதபடி எச்சரிக்கையுடன் வார்த்தைகளை அமைத்தது- தனது தந்தை யார் என்பதைச் சொல்லாமல் கடிதத்தில் தவிர்த்தவிதம் - தனது மன அழுத்தத்தால் கடித எழுத்துக்களை, சித்தார்த் ரிக்கி எதிர்பார்த்தபடி தவறாகப் புரிந்துகொண்டது - அந்த அளவிற்கு அவன் எடுத்துக்கொண்ட



அபாயகரமான முயற்சியின் உள்நோக்கம் - இப்படி ஒன்று விடாமல்- தனது நீண்ட வாக்குமூலத்தை விளக்கி முடித்தான் ரிக்கி.

சித்தார்த் அழுவதை நிறுத்தவில்லை.

ரிக்கியை இறுகத் தழுவிக்கொண்டார்.

"ரிக்கி, எங்களோட ஒற்றுமைக்காக, சந்தோஷத்துக்காக நீ செய்தது தவறே இல்லே. தெய்வீகமான செயல். இனி, நீயே இல்லேன்னு சொன்னாலும் நீ எங்க மகன்தான். எங்களை விட்டு உன்னைப் போகவிடமாட்டேன். உலகம் அறிய உன்னை எங்க மகன்னு சொல்லிக்க- இப்ப நான் தயாரா இருக்கேன்."

தன் கண்ணீரைத் துடைத்துக்கொண்ட சித்தார்த், நிம்மதியான பெருமூச்சுக்குப் பிறகு, "ரிக்கி நீ என்கிட்டே சொன்னதெல்லாம் எந்தக் காலத்திலும் சீதாவுக்குத் தெரிய வேண்டாம். இது மட்டும் தெரிஞ்சிட்டா மனசு உடைஞ்சு அந்த நிமிஷமே அவள் உயிர் விட்டாலும் ஆச்சரியம் இல்லே. அவள் இப்போது பெருமையுடன் உரிமை கொண்டாடும் மகன் ரிக்கி தனக்குச் சொந்தமில்லை என்ற உண்மையை அவளின் தாய் உள்ளம் ஜீரணிக்க முடியாமல் தவித்துப்போகும். யாருடைய மகிழ்ச்சிக்காக இவ்வளவு கடினமாக முயற்சித்தாயோ அவ்வளவும் பாழாகிவிடும். அது மட்டும் அல்ல, உன்னை இழந்து நானோ, சீதாவோ இனி வாழ்வது என்பது இயலாத ஒன்று.... ப்ளீஸ்... உன்னைப் பற்றிய உண்மையை சீதாவுக்குச் சொல்ல மாட்டேன்னு ப்ராமிஸ் பண்ணு ரிக்கி... ப்ளீஸ்."

அப்படியே கைபிடித்துச் சத்தியம் பண்ணினான் ரிக்கி.

# 19

மறுநாள் முதல், தன் கணவன் சித்தார்த் ரிக்கியிடம் மிகவும் ஒட்டிக்கொண்டு பேசிப் பழகு வதையும், கிச்சனில் ரிக்கியிடம் அவர் சமையல் கலையைக் கற்றுக்கொள்ளும் அக்கறையையும் பார்த்து சீதாவிற்கு ஆயிரமாயிரம் ஆச்சரியங்கள். எல்லாவற்றையும்விடப் பெரிய விஷயம்- அன்று, சீதாவைத் தன் அறைக்கு ரகசியமாக அழைத்தார் சித்தார்த்.

"இந்தாப் பாரு சீதா, ரிக்கிக்கும் அனிதா வுக்கும் உடனடியா கல்யாணம் பண்ணி வைக்க ணும். தாமதிக்கக் கூடாது. தேவைப்பட்டால் கல்கத்தாவில் இருக்கும் அனிதாவின் அப்பாவிற்கு உடனே தகவல் சொல்லி கொடுத்து வரச்சொல்லு" என்று கணவன் சொன்ன பொழுது சீதா மகிழ்ச்சியின் மடியில் சாஷ்டாங்கமாய் விழுந்து விட்டாள்.

இந்த விஷயத்தை சீதா அனிதாவிடம் சொன்னபொழுது, அவள் அந்த நொடியிலேயே மணப்பெண்ணாக மாறி, அங்கே நின்ற ரிக்கியிடம் நிமிர்ந்து பேசவே வெட்கப்படத் தொடங்கி விட்டாள்.

சந்தோஷக்காற்று இந்த வகையில் அந்தக் குடும்பத்தில் உள்ள எல்லோரையும் வானத்தில் பறக்க வைத்துக் கொண்டிருந்த பொழுது-

பாம்புப் புற்றான காமினியின் இடத்தில், அவர்களின் நச்சுக்காற்று மிகத் தீவிரமாகத் திட்டமிட்டுக் கொண்டிருந்தது. போலீசிடம்



போய் 'இவன்தான் எங்கள் மகன்' என்று ரிக்கியைச் சொந்தம் கொண்டாட முடியாது என்று அவர்களுக்குத் தெரியும். அதேசமயம் காமினிக்கு அப்படி உரிமை கொண்டாடுவதில் உள்ள சிக்கலும், இழப்பும் தெரியும். 'தற்சமயம் ரிக்கியின் சொத்துக்கள் நம் பெயரில் இருக்கிறது. அவன் எந்த நேரம் திரும்பி வந்து கேட்டாலும் சட்டப்படி அவன் பங்கைத் திருப்பிக் கொடுக்க வேண்டியிருக்கும். அது மட்டுமா- அனாதைப் பிணத்தை 'ரிக்கி' என்று அவர்கள் போலீசிடம் சொன்னது, ரிக்கியின் தாயை வீண்பழி சுமத்திக்கொன்றது எல்லாமே வெளிச்சத்திற்கு வந்துவிடும். அந்த நிலைமை ஏற்படக்கூடாது என்றால் ரிக்கியை உண்மையிலேயே உலகத்தில் இல்லாதவனாக ஆக்கிவிட வேண்டும்.' இதுவே அவளின் திட்டம். அதற்காகவே ஊட்டியில் இசை நிகழ்ச்சி முடிந்த நாள்முதல் ஊட்டியின் ஹோட்டல் ஒன்றில் இந்திரஜித்தோடு ரகசியமாகத் தங்கிவிட்டாள். தனக்குப் பாதுகாப்பாகவும், தனது திட்டங்களுக்கு உதவியாகவும், அவள் பணத்தை இறைத்து அழைத்து வந்திருந்த சில நபர்களை வெவ்வெறு ஹோட்டல்களில் தங்கச் செய்திருந்தாள். அந்தச் சிலர் வேறு மாநிலங்களைச் சேர்ந்த நாசகாரர்கள். அவர்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ளும் அளவிற்கு இந்த இடைப்பட்ட காலத்தில் தனது சமூக விரோதச் செல்வாக்கை இந்திரஜித்துடன் சேர்ந்துகொண்டு வளர்த்திருந்தாள் காமினி.

காமினி சொன்ன திட்டம் அந்த சமூக விரோதிகளுக்குக் கொக்கு சுடுகிற மாதிரியான சாதாரண விஷயம்தான். இருந்தாலும் அவர்கள் தங்களுடைய வேறு சில திட்டங்களுக்காகக் காமினியின் பணத்தையும் பலவீனத்தையும் நம்பியிருந்தார்கள்.

டாக்டர் ஹரிஹரனுக்கு இப்பொழுது மகா மகா நிம்மதி. சித்தார்த்திடம், ரிக்கி தன்னைப் பற்றின எல்லா உண்மைகளையும் சொல்லிவிட்டபின்- மறுநாள் காலையிலேயே மாமனாரிடம் வந்து அவருக்கு நன்றி சொன்ன சித்தார்த், ரிக்கியிடம் கேட்டுக் கொண்டது போலவே, ரிக்கி யார் என்பது சீதாவுக்குத் தெரியாமல் நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்று அழுத்தமாய்க் கேட்டுக்கொண்டார். ஆனால் மருமகன் வந்து சொன்ன மகிழ்ச்சிகரமான விஷயத்தை அவர் பிரான்சிஸ், மாரா இருவரிடம் பரிமாறிக் கொண்டது ஒருவகையில் ரிக்கிக்கு ஆபத்தை விளை வித்துவிட்டது. டாக்டர் சொன்னதைக் கேட்டு துள்ளிக் குதித்த மாரா, சித்தார்த்- சீதா வீட்டில் இல்லாத சமயம் ரிக்கியைக் கட்டா யப்படுத்தி தங்கள் இருளர் இனத்தவர் வசிக்கும் காட்டுப் பகுதிக்கு அழைத்துச் சென்றுவிட்டான். அந்தப் பழங்குடி மக்கள் ரிக்கிக்கும்,

அவனுடன் போயிருந்த அனிதாவுக்கும் மிகப் பெரும் மரியாதைகள் செய்தனர். ரிக்கியின் புல்லாங்குழல் வாசிப்பில் மயங்கித் திளைத்த அவர்கள் அவனை அந்தக் கிருஷ்ணனாகவே பாவித்து பயபக்தியுடன் உபசரித்து, வழி அனுப்பும் சடங்கில் பாதி தூரம் அவர்களின் பெருங்கூட்டமே பின்தொடர்ந்து வந்தது.

அப்பொழுதுதான் அந்த விபரீதம் நிகழவிருந்தது. வழியில் பதுங்கியிருந்த காமினியின் ஆட்கள் ரிக்கியைத் தீர்த்துக் கட்டுவதை சுலபமாக எண்ணியது அவர்களுக்கே மாரடைப்பைக் கொடுத்து விட்டது. மாராவின் இனத்தவர் அவர்களை விட்டுவைக்கவில்லை. வேட்டையாடிவிட்டார்கள். சாதாரண காயங்களுடன் ரிக்கி தப்பித்தான். வேட்டையாடப்பட்டவர்கள் போலீஸில் ஒப்படைக்கப்பட்டார்கள். அவர்கள் தந்த தகவலின்படி ஹோட்டலில் தங்கியிருந்த காமினியும் இந்திரஜித்தும் போலீசால் இழுத்துச் செல்லப்பட்டுவிட்டார்கள். ஆனால், ரிக்கியைக் கொலை செய்ய முயன்றவர் ரிக்கியின் தந்தை இந்திரஜித்தும், சித்தி காமினியும்தான் என்பதை சீதாவிற்குத் தெரியாமல் மறைப்பதற்குச் சித்தார்த் மிகவும் சிரத்தை எடுத்துக்கொண்டார்.

இந்திரஜித்தும் காமினியும் சேர்ந்து போலீசையும் அரசாங்கத்தையும் ஏமாற்றிய பல அதிர்ச்சிகரமான தகவல்கள், அவர்கள் மீது பல தீவிரமான கிரிமினல் வழக்குகளைப் பதிவு செய்யக் காரணமாக இருந்தது.

சித்தார்த்தின் பங்களாவில்-

ரிக்கியின் காயங்களுக்குச் சிகிச்சை அளித்த ஹரிஹரன் 'ரிக்கிக்கு இந்த வகையில் எதிரிகளாய் மாறியவர்கள் யார்' என்பதைக் கேட்டபடி துடிதுடித்துப் பதறிய சீதாவிடம் உண்மையைச் சொல்லவில்லை. "பெரிய இடத்துப் பிள்ளைகளைக் கடத்திச் சென்று, பெற்றோரிடம் பெரும் பணம் பறிக்கும் கூட்டம்தான் ரிக்கியைத் தாக்கிக் கடத்த முயன்றிருக்கிறார்கள்" என்று சீதாவிடம் சித்தார்த் சொன்னதையே ஹரிஹரனும் அவளிடம் ஒப்பித்தார். சித்தார்த்திடம் மட்டுமே தனி அறைக்குள் வைத்து நடந்த உண்மைகளைச் சொல்லிவிட்டார் ஹரிஹரன்.

அவரிடம் ரகசியமாய் சித்தார்த் கேட்ட கேள்வி இதுதான்: "தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி எதிரிகள் மீண்டும் வெளியே வந்து ரிக்கிக்கு ஆபத்தை விளைவித்தால் என்ன செய்ய முடியும்?"

"அவர்களைப் போலீஸார் அவ்வளவு சீக்கிரத்தில் வெளியே விடமாட்டார்கள். அவர்கள் மீது பதிவு செய்யப்பட்டுள்ள 'பல வழக்குகளின் பயங்கரம் அந்த மாதிரி. அவர்களின் தலையில்



இப்போது இடியே இறங்கியிருக்கிறது. ரிக்கி பற்றிய பிரச்சினை அவர்களின் சுண்டுவிரல் காயம் மாதிரிகூட இல்லை."

"சரி நாளைக்குப் பத்திரிகையில் அவர்கள் கைது செய்யப்பட்ட-விவரங்கள் வெளியாகுமே. அந்தச் சமயத்தில் ரிக்கி யார் என்கிற விஷயம் சீதாவுக்குத் தெரிய வாய்ப்பிருக்கே?"

"கிடையாது சித்தார்த். இந்திரஜித்தோட மகன் ரிக்கி தற்கொலை பண்ணி இறந்துட்டான்னு போலீசே முடிவு பண்ண ஒண்ணு. அதேசமயம், சித்தார்த்துங்கிற பேர்ல, ஹரிஹரன்ங்குற பேருல நாட்டுல ஆயிரமாயிரம் பேர் இருக்காங்க. அதே மாதிரிதான் இதுவும். அந்த ரிக்கி வேற. இந்த ரிக்கி வேற. ஒரே ராகத்தை ஆயிரம்பேர் ஆயிரம் விதமாய் பாடுறீங்களே. அதுமாதிரி. இப்ப நீங்க செய்ய வேண்டியதெல்லாம் ரிக்கி-அனிதா கல்யாணத்தை உடனடியா முடிக்கிறதுதான்" -தீர்மானமாகச் சொல்லிவிட்டார் ஹரிஹரன்.

# 20

ரிக்கி-அனிதா திருமண ஏற்பாட்டை சித்தார்த்தும் அவரது 'ஹார்மோனி' இசைக்குழுவின் வி.ஐ.பி.க்களும் விரைவாகச் செய்து முடித்தனர்.

ரிஜிஸ்ட்ரார் ஆபீஸில்- கலெக்டர் உட்பட அத்தனை முக்கிய புள்ளிகளும், ராமய்யா அழைத்து வந்திருந்த ஜெனரேஷன்ஸ் அபார்ட்மெண்ட் கூட்டமும், கல்கத்தாவிலிருந்து ஓடிவந்திருந்த அனிதாவின் 'மாக்னெட்' அப்பாவும் ஊட்டியின் மலர்க் கண்காட்சியில் மட்டுமே காணக் கிடைக்கும் மலர்க்கூட்டம்போலக் கூடி நின்றனர். நல்ல மணம் நிறைந்த இதயத்துடன் திரண்டிருந்தனர். ராமய்யா எச்சரித்து வைத்திருந்தபடி ஜெனரேஷன்ஸ் அபார்ட்மெண்ட் ஆட்கள் கீதாவின் முன்னால் -ரிக்கியை ஏற்கெனவே தெரிந்துகொண்டவர்கள் போல் காட்டிக் கொள்ளாமல், ரிக்கியின் விசிறிகள்போல் நடந்து கொண்டார்கள்.

திருமணப் பதிவுப் புத்தகத்தில் மணமக்கள் கையெழுத்திட்டனர். மியூசிக் ரிகர்ஸல் ஹாலில் ரிசப்ஷனுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஊட்டியே திரண்டு வந்திருந்தது.

தங்கள் பங்களாவிலிருந்து புறப்படுவதற்கு முன்னால்- சித்தார்த், ரிக்கியை கீதாவுக்குத் தெரியாமல் ரிக்கியின் தனி அறைக்கு அழைத்துச்



சென்றார். "ரிக்கி உன்னைப் பெத்த அம்மாகிட்டே ஆசிர்வாதம் வாங்கிக்கப்பா சீக்கிரம்" என்றார். அம்மாவின் படத்தை மேஜையில் எடுத்து வைத்து செம்பருத்திப் பூக்களை வைத்து வணங்கினான் ரிக்கி.

இந்த உண்மை தெரியாமல், கீதாவுக்குத்தான் அங்கே பரபரப்பு. அங்கும் இங்கும் ரிக்கியை அவள் தேடிக்கொண்டிருக்கும் போதே, சித்தார்த்தும் ரிக்கியும் ஹாலுக்கு வந்துவிட்டார்கள். அதனால் தப்பித்தார்கள்.

அவர்கள் ரிகர்சல் ஹாலுக்கு வந்தபோது அங்கே பெரும் கூட்டம் அலை மோதியது.

மேடையில் மணமக்களை அமரச் செய்துகொண்டிருந்தாள் கீதா. கலெக்டர் அவசரமாக ஓடிவந்து சித்தார்த்தின் காதில் ரகசியமாக ஒன்றைச் சொன்னார். அதை, சித்தார்த் ரிக்கியிடம் காதில் சொல்ல, சித்தார்த்திடம் ரிக்கி ஏதோ கேட்டுக்கொண்டிருக்கிறான். சித்தார்த் முகம் பிரகாசித்தது. சித்தார்த் மைக்கிடம் வந்தார்.

"சில வெளிநாடுகளிலிருந்து ரிக்கிக்கும், ஹார்மோனி இசைக் குழுவிற்கும் அழைப்பு வந்திருப்பதை இப்போது நமது கலெக்டர் என்னிடம் தெரிவித்தார்."

மக்களின் கைத்தட்டல் பெரிதாக ஒலித்தது.

"அவசரப்படாதீர்கள். ஆனால், ரிக்கியின் விருப்பம் வேறுமாதிரியாக இருக்கிறது. அவன் இசையைப்போல. ரிக்கிக்கு தற்சமயம் எந்த வெளிநாடு போகவும் விருப்பம் இல்லை... அவனுடைய ஆசை எல்லாம் அவனது புதிய பாடலை நமது மக்களிடம் கொண்டு செல்வதே! அந்த இனிய புதிய இசையின் பெயர் "அன்புக்குரிய குழந்தைகள்!"

'இது அனாதைக் குழந்தைகள்' என்பதற்கான மாற்றுப்பெயர்! அந்த 'அன்புக்குரிய குழந்தைகளுக்காக', அன்பு, கருணை இரண்டையும் மக்களிடமிருந்து பெற்றிட, ரிக்கியும் எங்கள் இசைக்குழுவும் இந்தியாவின் ஒவ்வொரு பகுதிக்கும் இசைப்பயணம் மேற்கொள்ளவிருக்கிறோம். தவிர, இந்தியாவின் புல்லாங்குழல் இசை மேதைகளிடம் தீவிரமான பயிற்சி மேற்கொள்ளவும் ரிக்கி ஆசைப்படுகிறான். ரிக்கியின் புதிய இசையும் ஆசையும் வெற்றிபெற வாழ்த்துவோம்."

கூட்டத்தினர் கைதட்டி ஆர்ப்பரிக்க, அவர்களிடம் ரிக்கி சில வார்த்தையாவது பேசித்தான் ஆகவேண்டும் என்று ரிக்கியிடம் சொல்லும்படி கீதா - சித்தார்த் இருவரிடமும் கேட்டுக் கொண்டார் கலெக்டர்.

எழுந்து மைக்கிடம் வந்த ரிக்கி, விருந்தினரின் கைதட்டலுக்கு வணக்கம் தெரிவித்தான். ஆனால் வாய் திறந்து பேச்சு வரவில்லை. அந்த நெருக்கடியில் கணவனுக்குக் கைகொடுக்கிறாள் அனிதா. அவள் தன்னுடன் கொண்டு வந்திருந்த புல்லாங்குழலை அவனிடம் தந்து, "இதன் மூலமா உங்கள் நன்றியைச் சொல்ல முடியுமே" என்று ரிக்கியிடம் சொல்கிறாள்.

ரிக்கி, புல்லாங்குழலை உதட்டில் வைத்து, குழலைத் தன் மனைவி அனிதாவின் இதழாக நினைத்து வாசிக்க ஆரம்பித்திருப்பான் போலிருக்கிறது. வழக்கத்தைவிட அமுதாய்-தேனாய் இனித்தது அந்த கானம். ரிக்கியிடம் அவசரமாய் வந்து அவன் கன்னத்தில் முத்தமிட்ட சீதா, அவன் காதில் ரகசியமாக, "இந்தாப்பாரு ரிக்கி, இன்னையிலேர்ந்து நீ என்னை 'ஆன்ட்டி'ன்னு கூப்பிடக்கூடாது. 'மம்மி'ன்னுதான் கூப்பிடணும். இனிமே, என் மருமகளுக்கு மட்டும்தான் நான் 'ஆன்ட்டி'. புரிஞ்சுதா?" என்றாள். மைக்கின் மிக அருகில் வந்து "சரி மம்மி! நீங்க சொன்னமாதிரியே இனிமே உங்க மகன் நடந்துக்குவான்" என்று உரக்கச் சொல்லி விட்டுச் சீதாவைப் பார்த்தான் ரிக்கி. அந்த அன்புத் தாயின் முகத்தில் ரிக்கியின் குழல் இனிமையைவிட மிக இனிமையான பெருமிதப் புன்னகை பெரிதாய் மலர்ந்தது. 'அந்தத் தாயின் மகிழ்ச்சி நிரந்தரமானது - முழுமையானது - முடிவற்றது' என்று சொல்வதுபோல இசைக்கிறது- ரிக்கியின் புல்லாங்குழல்!

(முற்றும்)

சென்னை மாவட்ட கிளை நூலகம்
41294
6222270
கொளத்தூர், சென்னை